
KALKI 27.2.94 ரூ. 3.00

கல்கி

சிதம்பரம் நகரச் சிறப்பிதழ்



தீட்சிதர்கள் ராஜாங்கம்!

MNEY

OPENING UP NEW OPPORTUNITIES

Your daughter's wedding. The day you've waited for all your life. To marry her off in style. You don't have to worry about money because you have been the wise one. You've invested with us. We at **Annamallai Finance** believe in making it all better for you, putting your hard earned money to work in the best possible ways. Opening up the doorways to numerous opportunities. In utmost safety. And there is the **FA+ rating from CRISIL** to vouch for us.

Our **"Dhanalakshmi Deposit Scheme"** has been introduced from 1st Jan '94. Write in today.

Awarded FA + by CRISIL

ANNAMALLAI FINANCE LTD

Regd. Office: 252, Mettupalayam Road, Coimbatore - 641 043

Your Prosperity is our Concern

* This is in continuation to the Statutory Advertisement released in The Hindu on 5.8.93

Contact Telephone Nos: ● **Bombay**: 243602 ● **Bangalore**: 227365 ● **Coimbatore**: 231797 ● **Delhi**: 5752417 ●**Ernakulam**: 360425 ● **Erode**: 79800 ● **Gobichettipalayam**: 2924 ● **Kallakurichi**: 396 ● **Karaikudi**: 3029 ● **Kozhikode**: 58837 ● **Madurai**: 24450 ● **Madras**:Spencer Plaza Branch: 8261228 Mount Road Branch: 8262430 Anna Nagar Branch: 6263447 T.Nagar Branch: 440248 Mylapore Branch: 4992993 ● **Pondicherry**: 38507 ● **Pollachi**: 4595 ● **Pune**: 667178 ● **Salem**: 68899 ● **Sathyamangalam**: 20420 ● **Tirunelveli**: 25144 ● **Trichy**: 43304 ● **Vellore**: 26371.

Special Deposit Mobilisation period Jan. to Mar. '94

SASI / 46 / 94

விநாயகர் செலுத்திய முதல் சந்தா!



* விநாயகம் பிள்ளை

கல்கி முதல் இதழ் வெளியாகியிருந்த நேரம். அமரர் கல்கி, டி.கே.சிக்கு இப்படிக் கடிதம் எழுதினார் :

''கல்கிக்குச் சந்தாதாரர்கள் குவிய ஆரம்பித்து விட்டார்கள். எனக்கு மிகப் பெரிய சந்தோஷம் - முதல் சந்தாதாரராக விநாயகரே சேர்ந்திருப்பது.''

கல்கி அவர்கள் நகைச்சுவையாக இப்படிக் குறிப்பிட்டது வினாயகம் பிள்ளை என்பவரைத்தான்!

இன்றைக்குத் தனது எண்பத்தைந்தாவது வயதில் மனதளவில் அதே இளமை வீரியத்துடன் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படிப்பது மட்டுமே தொழிலாகக் கொண்டு சிதம்பரத்துக்கு அருகே ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்து வருகிறார் விநாயகம் பிள்ளை.

பழுத்த காந்தியவாதி. சுதந்திரப் போராட்டத் தியாகி. காந்தி, தனி நபர் சத்தியாகிரகம் ஆரம்பித்தபோது தமிழ் நாட்டின் முதல் சத்யாகிரகி இவர்தான். ராஜாஜி மீதும் ஆழ்ந்த பற்று உண்டென்றாலும், தனது தலைவராக இவர் கருதுவது காந்தியைத்தான். இதற்கு நேர்மாறாக,

''கல்கிக்கு காந்தி மீது அபார பக்தி உண்டென்றாலும், அவருக்கு ஒரே தலைவர் ராஜாஜிதான். காந்தியோடு ராஜாஜி முரண்படும் போதெல்லாம் கல்கி, ராஜாஜியைத்தான் ஆதரிப்பார். கடைசி வரை அவரது கொள்கை மாறவே இல்லை'' என்கிறார்.

லட்ச ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காத அரிய நூல்கள் பல விநாயகம் பிள்ளையிடம் இருக்கின்றன. அவற்றில் காந்தியின் அபூர்வமான புகைப்பட ஆல்பமும் ஒன்று.

''அந்தக் காலத்தில் நிறைய வேலைகள் இருந்தன. படிக்க அதிக நேரமிருக்காது. இப்போது படிப்பது தவிர வேறு வேலையில்லை'' என்கிறார் படு சந்தோஷமாக!

- பியார்.




பரபரப்பான புதிய தகவலுக்குப் பார்க்க : 63 ம் பக்கத்திற்கு அடுத்தப் பக்கம்.

தீட்சிதர்கள் ராஜாங்கம்!

விடியற்காலை சிதம்பரம் வெகு விநோதம். சூரியன் கூட கேஷுவல் லீவ் போட்டு விடலாமா என யோசிக்கும் நிதான சாம்ராஜ்ஜியம். ஆறுமணிக்குக் குறைந்து ஹோட்டல்களில் காப்பி கூடக் கிடைக்கிறதில்லை. நடராஜரே அப்போது தான் கண்விழிக்கிறார். அவர் ஊழியர்கள் இன்னும் சாவகாசம். விசேஷ காலங்களில் எப்படியோ - சாதாரண சமயங்களில் ரொம்ப சாதாரணமாகத்தான் தெரிகிறது சிதம்பரம்.

ஆயிரக்கணக்கான வருட வரலாற்றின் சின்னமான 44 ஏக்கர் பரப்புக் கோவிலும் சுற்றியுள்ள கொஞ்சம் போல் மக்கள் வாழும் பிரதேசமும் கொண்ட ஊர் - இதன் பெயருக்கும் புகழுக்கும் - நியாயப்படி திருப்பதி, ஸ்ரீரங்கம் அளவில் மாபெரும் பக்திச் சுற்றுலாத் தலமாக வளர்ந்திருக்க வேண்டும். வளராதது விசித்திரம். கும்பலுக்குக் குறைவில்லை. நகரில் (கொஞ்சம் தயங்கியே நகர் என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது!) பணப்புழக்கத்திற்கும் இதர வசதிகளுக்கும் பஞ்சமில்லை. அண்ணாமலை யூனிவர்ஸிட்டியின் மருத்துவக் கல்லூரியும் தபால் வழிக் கல்வியும் அசுர வளர்ச்சி அடைந்த பிறகு - இப்பகுதியின் தோற்றமே முற்றிலும் மாறிவிட்டதாக உள்ளூர்க்காரர்களே ஒப்புக் கொள்கிறார்கள். ஆயினும் புராண முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலத்திற்கான இலக்கணங்கள் இங்கு மங்கலாகவே தெரிகின்றன. சிவபெருமான் நடனம் ஆடினார் என்கிற செய்தியைத்தவிரவும் ஆலயத்தில் பல விசேஷங்கள் உண்டு. கட்டுமானத்திலும், கலையம்சங்களிலும் மன்னர்கள் உயிரைக் கொடுத்திருப்பது ஒவ்வொரு அங்குலத்திலும் பளிச்சிடுகிறது. ஒரு திருத்தலம் சார்ந்த ஊர், கலைகளிலும் கலாசாரத்திலும் எப்படியெல்லாம் முன்னேறலாம் என்று இதர பகுதிகளில் கண்கூடாகப் பார்க்கும் போது - இப்பகுதியில், ஒரு முழு கிராமமே நாத்திகவாதம் பேசும்படியாகவும் குறிப்பிட்ட சில பிரிவினரைத் தவிர பெரும்பாலானோர், கோவிலை ஒரு பொருட்டாகக் கருதி இயங்காததையும், கோவிலே கூடத் தனது பழைய நிலையிலிருந்து சிறிதும் மாற்றம் கொள்ளாமலும், இப்பகுதியில்



• ஸ்ரீ நடராஜர் ஆலயத்தோற்றம் - திருக்குளத்திலிருந்து

எவ்வித பெரும் பாதிப்பும் ஏற்படுத்தா மலும் இருப்பது வியப்பும் அதிர்ச்சியும் குழப்பமும் தருவன.

இதற்கான காரணங்களை ஆராயு முன், இத்தலத்தின் சுவாரஸ்யமான சில வர லாற்றுப் பின்னணிகளை கவனிக்க வேண் டும். படத்தில் நீங்கள் பார்க்கிற உமாநாத தீட்சிதர், சில புராணத் தகவல்களைத் தரு கிறார். பதஞ்சலி, வியாக்ரபாதர் என்ற இரு முனிவர்கள், பரமசிவனை இத்தலத்தில் வந்து நடனமாட அழைத்திருக்கிறார்கள்.

அவர் தான்மட்டும் வராமல், தன் னோடு ஆயிரம் பேர்களைச் (ஆடியன்ஸ்?) சேர்த்து அழைத்து வந்திருக்கிறார். சிதம் பரம் நகரத்தின் முதல் குடிமக்களாகிற பெருமை அந்த ஆயிரம் பேர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தில்லை வாழ் அந்தணர் கள் என்று சொல்லப்படுகிற இந்த தீட்சிதர் களும் இவர்களது வம்சாவழியினருமே இன்றுவரை இக்கோவிலை கவனித்து வரு கிறவர்கள். கோவிலின் பெருமை, கட்டுக் கோப்பு, நடைமுறைகள், விழாக்கள், நிர் வாகம் இன்னபிறவற்றை நிர்வகித்து வரும் தீட்சிதர்களின் வரலாறு, கோவிலின் வர லாற்றோடு இணைந்து வருவது. ஆயிரம் குடும்பங்கள் இன்று இல்லை. 285தான். ஆயினும், நகரின் தலைவிதியை நிர்ணயிக் கும் நபர்களாக இவர்களே இருக்கிறார்கள்.

இவர்களது நடைமுறைகள், சட்ட திட்டங்கள், அணுகுமுறை, நிர்வாகம் யாவும் இதர பிரதேச அமைப்புகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருப்பது கவனிக்க வேண்டியது மிகமுக்கியம். ஏனெனில், முன் சொன்ன வியப்பு, அதிர்ச்சி, குழப்பங் களுக்கு யாரிடமாவது காரணம் கேட்டால், தயங்காமல் ஊரில் இந்த தீட்சிதர்களை நோக்கிக் கை காட்டி விடுகிறார்கள். கோவி லைச் சார்ந்து இவர்கள் குடும்பங்களும், இவர்களைச் சார்ந்து கோவிலும் இயங்குவ தால் இது விஷயத்தில் எவ்வகையிலும் இவர்கள் தவிர்க்க முடியாதவர்களாகிறார் கள்.

அறநிலையத்துறையினர் குட்டிக் கரணம் அடித்துப் பார்த்தும் கோவிலை அரசுச் சொத்தாக்க இவர்கள் அனுமதிக்க வில்லை. ஸ்வாமி, அப்படியொன்றும் பெரும் பணக்காரர் இல்லை. கோவில் சொத்துக்கள் என்று குறிப்பிடும்படி ஏதும் இல்லை என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம். ஆயினும் இவர்களின் ஆலயம் சார்ந்த வாழ்வு முறையும், ஏகாதிபத்திய நிர்வாகமும், அதிரடி நடவடிக்கை களும் பலருக்கும் அச்சம் விளை விப்பதாகவே இருக்கின்றன. இது ஏன்?



உமாநாத தீட்சிதர்

'இறைவனோடு உடன் வந்தவர்கள். ஊரின் முதல் பிரஜைகள். எங்கள் உரிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்கும் அவசியம் இல்லை. கோவில், எங்கள் சொத்து' என்கிறார்கள் இவர்கள்.

தலைமுறைக்குத் தலைமுறை தீட்சிதர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. முற்றிலுமாக இச்சமூகம் அழிந்து விட்டால், கோவில் கைவிட்டுப் போய்விடும் என்கிற அச்சத்தால் - இவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டையெல்லாம் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை! இதைவிட அதிர்ச்சியளிக்கும் விஷயம் - இங்கே இன்னமும் நடைமுறையில் இருக்கும் பால்ய விவாகம்.

''தில்லை ஆலய நடைமுறைப்படி, திருமணமானவர்கள்தான் பூஜை செய்யலாம் என்று சட்டம் இருப்பதால் பால்ய விவாகம் நடந்து வந்தது உண்மைதான். வருமானத்திற்கு எங்களுக்கு வேறுவழி



* நடராஜரின் தாண்டவம்: சிற்பவடிவில்


இல்லை என்பது மறுக்கமுடியாத விஷயம். ஆனால் அரசாங்கம், பால்ய விவாகத்தைத் தடை செய்த பிறகு அது இங்கே பெருமளவு குறைந்துவிட்டது. பருவம் வந்த பெண்களைத்தான் திருமணம் செய்யும் வழக்கம் உருவாகியுள்ளது''என்கிறார் உமாநாத தீட்சிதர்.

ஆனால், கழுத்தில் தாலியோடு 9-10 வயதுப் பெண் குழந்தைகளை இப்போதும் நம்மால் இங்கே பார்க்க முடிகிறது!


மண்வீடு கட்டி விளையாடுகிற வயதில் மனைவியாக்கி உட்கார்த்தி வைத்துவிடுவதால் இக்குடும்பங்களின் பெரும்பான்மையான பெண்கள் கல்வியறிவு, உலக அறிவு அற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். மேலும் சிறிய வயதிலேயே - சிந்திக்க ஆரம்பிப்பதற்கு முன்பே இப்படியான விலங்கு இவர்களுக்குப் பூட்டப்படுவதால், இவர்களுடைய சமூகத்திற்குரிய நியாயங்கள், சட்ட திட்டங்கள் மட்டுமே இச்சிறுமிகளின் மனத்தில் உண்மை என்பதாக ஏற்கப்படுகிறது. முன்னேற்றம் என்பதே என்னவென்று தெரியாத சூழலில் உருவாகும் இவர்களுக்கு வெளி உலக நியாயங்கள் ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை!

இதனினும் சோகம், யாராவது இதனை எடுத்துக் காட்டினால் அடிக்க வராத குறையாகச் சீறுகிறார்கள். கோவிலில் நாம் சந்தித்த ஒரு தீட்சிதர் மாமி இப்படிச் சொல்கிறார்: ''இதிலென்ன தவறு இருக்கிறது? பால்ய விவாகத்தினால் பெண்கள் முடக்கப்படுகிறார்கள் என்பதெல்லாம் சுத்தப் பொய். நாங்களெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறோம். வழிவழியாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகளை, முன்னேற்றம் என்கிற பெயரில் கைவிடுவது தான் சீரழிவு. இதோ என் பெண்கள் இருவருக்கும் (வயது 10 - 12) திருமணம் ஆகிவிட்டது. அதனால் எந்த வகையிலும் இவர்கள் குறைந்து விடவில்லை. இல்லறச் சிறப்புகளை இவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்களெல்லாம் படித்து, வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிறீர்கள். எங்களால் அதெல்லாம் சாத்தியமில்லை. கோவிலைச் சார்ந்து எங்கள் வாழ்வு இருப்பதால், பால்ய விவாகம் அவசியம்தான்!''

இச்சமூகத்தில் ஆண்களும் ஒன்றும் அதிகம் படிக்கிறதில்லை. SSLC முடித்தவர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் மேலே படிக்கிறார்கள். பெரும்பாலானோர் திருமணமானவுடனே கோவில் நிர்வாகத்திற்கு வந்துவிடுகிறார்கள். யாராவது இதுபற்றிக் கருத்து சொன்னாலோ, விமர்சனம் செய்தாலோ இவர்கள் கொதித்து எழுந்து விடுகிறார்கள். ''என்ன செய்துவிட முடியும் உங்



● கவரில் யானை: சோழர் கை வண்ணம்



● விளக்கம் கேட்கும் வெளிநாட்டவர்.

களால்? எங்கள் நடைமுறையில் குற்றம் காண நீங்கள் யார்? நாங்கள் இறைவனோடு கூட வந்தவர்கள். உங்கள் சட்டம் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது!'' என்று சீறுகிறார் வெங்கடேச தீட்சிதர். (அட்டைப் படம்)

இதையெல்லாம் விடுத்து, அப்படி என்னதான் நிர்வாகம் செய்கிறார்கள் என்று பார்த்தால் அடுத்தக் கட்ட அதிர்ச்சி. கோவில் வெளிப்பிராகாரத் திலேயே மூக்கைப் பொத்திக் கொண்டு வலம் வர வேண்டிய துர்பாக்கிய நிலைமை. தவிரவும் சந்நிதிகளில் தப்பித்தவறி விபூதி, குங்குமம் கூடப் பிரசாதமாக வாங்கிக் கொள்ளத் தயக்கம் காட்ட வேண்டியதாக இருக்கிறது. காரணம், விபூதி கொடுத்து விட்டு தாட்சண்யமில்லாமல் 'இரண்டு ரூபாய் எடு' என்று மிரட்டும் அர்ச்சகர்கள்.

வேறு வருமானம் இல்லாத கோவிலில் இதைத்தவிர வேறு வழியில்லை என்பது புரிந்தாலும், ஊர்க்காரர்களாவது உதவலாமே என்று தோன்றியது. ஆனால் நிர்வாகத்திலோ, இதர செயல்பாடுகளிலோ எவ்வித பங்களிப்பும் வேற்று மக்களுக்கு தீட்சிதர்கள் அளிக்க முன்வராதபோது தாங்கள் எதற்காக இவர்களுக்கு உதவ வேண்டும் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள்.

கோவிலுக்குள்ளேயே சீரமைப்புப் பணிகள் ஏராளம் இருக்கும்போது, நகர சீரமைப்புக்குக் கோவில் எந்த வகையிலும் உதவ இயலாது போவது கண் கூடாகத் தெரிகிறது. ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற தலம் - இப்படி யாரும் கண்டுகொள்ளாதிருப் பதில் வருத்தம் மிருவதில் வியப்பில்லை.

'கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?' என்று ஊர்க்காரர்களைக் கேட்டால், 'நிர்வாகத்தினரைக் கொஞ்சம் வழிவிடச் சொல்லுங்கள்! என்கிறார்கள். அவர்களோ 'விடுவோமா?' என்கிறார்கள். இழுத்து, நீளமாக ஒரு பெருமூச்சு விடுங்கள். இப்போதைக்கு நாம் செய்யக் கூடியது அதைத்தவிர வேறொன்றுமில்லை.

- நமது நிருபர்

''நம்ம படத்துல ஆரம்பத்திலேயே போலீஸ்காரங்க வர்ற சீனை சேர்த்தது தப்பாப் போச்சு.''

''ஏன், என்ன ஆச்சு?''

''படத்தோட கிளைமாக்ஸ் காட்சியா நினைச்சி தியேட்டரே காலியாயிடுச்சி!''

- திரு. பாம்பே ஜான்.



Kalki Shopping Page

Kalki Shopping Page



* குடிசைத் தொழிலாக.....



அன்புள்ள அம்மு...

நேற்று சாயங்காலம் பத்மாவின் ஸ்கூல் டே. அவள் கிளாஸ் பெண்கள் எல்லாம் சேர்ந்து, 'தீராத விளையாட்டுப் பிள்ளை' டான்ஸ்! அந்த வகையில் எனக்கு ஆன செலவு 230 ரூபாய்! முப்பது ரூபாய் - பழைய பட்டுப் புடைவையைப் பாவாடை தாவணியாகத் தைக்க... இருநூறு ரூபாய் - கைக்கும் காதுக்கும் கவரிங் வளை, ஜிமிக்கி வாங்க... கவரிங் வாழ்க! இல்லாவிட்டால் பத்மா முகத்தில் சிரிப்பைப் பார்த்திருக்க முடியாது!

டான்ஸுக்கு நகைகளை வாங்கிய கடையில் ஒரு வருஷம் 'காரண்டீ' கொடுத்திருக்கிறார்கள். அதுவரை கருக்காதாம். அத்தான் வழக்கம் போல கடைக்காரரைக் கேள்வியால குடைஞ்செடுத்துட்டார் - கவரிங் நகைகள்லாம் நிறைய செய்யற இடம் சிதம்பரம் - அங்கே 'விச்வகர்மா'ங்கற வகுப்பைச் சேர்ந்தவங்க இந்தத் தொழிலில் எக்ஸ்பர்ட்டாம். ஏறத்தாழ குடிசைத் தொழிலாகவே அவங்கவங்க வீட்டில நகைகளைச் செப்புனால செய்துடுவாங்களாம். ஒரு நாளைக்குப் பத்து - பதினஞ்சு சங்கிலி வரை ஒருத்தரே செய்ய முடியுமாம். (செப்போட வேற உலோகம் கலந்துதான் செய்வாங்கன்றார் அத்தான்.) பட்டறைக்காரங்க, செப்பு நகைக்கு கில்ட் ஏத்தறாங்க. தங்கத்தை ரிப்பன் பகோடா மாதிரி உருக்கி, தட்டி, வளைச்சு வச்சுக்கிட்டு, அந்த ரிப்பன் தகடைக் கொண்டு செப்பு நகைக்குப் போர்வை போத்துவாங்களாம்.

''எலக்ட்ரோ பிளேடிங்தானே?''ன்னு நான் கேட்டேன். ''இல்லைங்க, 'கவரிங்' டெக்னிக் வேறே''ன்னாங்க.... நெருப்பு உதவியோடத்தான் பூச்சு - அப்புறம் அதைத் துடைக்க, தேய்ச்சு மெருகு ஏத்தறதாம். ஏகப்பட்ட கை வேலை! விலைல பாதி அதுக்குத்தான்.

சிதம்பரத்துல ஏராளமா கவரிங் கடைகள்; எல்லாத்துலயும் கூட்டம் இருக்கும்னு சொல்றாங்க. கருத்துப் போனதைக் கூட அங்க ஒரு விலை போட்டுத் திரும்ப எடுத்துக்கறாங்களாம். அதை உருக்கி, புதுசா திருப்பிச் செய்வாங்களாம். அடுத்த வருஷம் 'ஸ்கூல் டே' வர்ற சமயத்துல சிதம்பரம் போய்ட்டு வரலாம் போலிருக்கு. நடராஜரைப் பாத்த மாதிரியும் இருக்கும்; நகைக் கடைக்குள் நுழைஞ்ச மாதிரியும் இருக்கும்.....



உன் பிரியமுள்ள அக்கா,

அலமு

தகவல் அளித்த வாசகர்கள் : வி. முரளிதரன், எ. கிரிதரன், என்.ஆர். பாஸ்கர்.

நீங்கள் கேட்டவை - தராசு

கோவை எம்.பி. கைதானது குறித்து?



● [illegible]

● ஆர்.சங்கரநாராயணன், குணசீலம்.

? உண்மையைவிட வதந்தி வேகமாகப் பரவுவது ஏன்?

! மிகைப்படுத்துவதிலுள்ள சுவாரஸ்யம் தான் காரணம். ஆங்கிலத்தில் ஒரு கதை: ஒரு கோழிப்பண்ணையில் ஒரு கோழியின் ஓர் இறகு உதிர்ந்தது. ஓர் இறகு உதிர்ந்த செய்தி பண்ணைக்குப் பண்ணை வேகமாகப் பரவி அடுத்த ஊரை அடையுமுன் மூன்று கோழிகள் இறந்த செய்தியாகி விட்டது!

● எஸ்.எஸ்.பூங்கதிர், திருவெண்ணெய் நல்லூர்.

? காங்கிரஸ், அ.தி.மு.க.-வை.கோ.எங்கு சென்றால் மரியாதை அதிகம் கிடைக்கும்?

! இருக்குமிடத்தில் இருந்தாலொழிய மரியாதை கிடையாது.

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்

? காங்கிரஸ் கட்சிக்கும் ஆட்சியில் பங்கு கொடுத்தால் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேரத் தயார் என்று வாழப்பாடி அறிவித்திருக்கிறாரே?

! நாகரிகம் கருதி கடுமையான வார்த்தைகளைத் தவிர்க்கிறேன்.



● "ஆட்சியில் பங்கு!"



● எங்கு மரியாதை?

● என்.எஸ்.கே., சென்னை.

? 'மத்திய அமைச்சரவையில் மன்மோகன்சிங் தவிர வேறு எந்த அமைச்சருக்கும் தன்னிச்சையாகச் செயல்பட அதிகாரம் இல்லை' என்பது உண்மையா?

! அமைச்சர் என்ற பதவியோடு கூடவே அதற்குரிய அதிகாரங்களும் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்துவதும், பயன்படுத்தாததும் அவரவருக்குள்ள ஆற்றல், தன்னம்பிக்கை ஆகியவற்றைப் பொறுத்த விஷயம். தவறாகப் பயன்படுத்தினால் தட்டிக் கேட்கும் அதிகாரம் பிரதமருக்கு அல்லது முதல்வருக்கு உண்டு என்பதால் மத்திய, மாநில அமைச்சர்கள் பலரும் பயப்படுகிறார்கள். எஸ்.பி. சவான், அர்ஜுன்சிங் போன்றவர்களை அப்படி என்னுவதற்கில்லை.

● செந்தில்நாதன், மதுரை.

? "என் ரத்த நாளங்களே" எனத் தம் தொண்டர்களை அழைக்க ஆரம்பித்து விட்டாரே, வை.கோ..?

! உயர் ரத்த அழுத்தத்துக்குத் தயாராகிறார்!

● எஸ்.குமார், காரைக்குடி.

! எஸ்.வி.சேகர், ஒய்.ஜி.மகேந்திரன், கிரேஸி மோகன் - நகைச்சுவை நாடகம் தருவதில் யார் கில்லாடி?

! ஹவ் அபௌட் 'சோ'?

● எம். எம். கோபால், பம்பாய்.

? நூறாவது படம் பிரபுவுக்குப் பெயர் தருமா?

! நூற்றி ஓராவது படம் பெற்றுத்தரப் பிரார்த்திப்போம்.

● வி. பரமசிவம், மதுரை.

? 'நாட்டில் வன்முறை, வஞ்சம், ஊழல் இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஆன்மீக எழுச்சி ஏற்பட வேண்டும்" என்று சி.எஸ்.கூறுகிறாரே?

! உரக்கச் சொல்லாதீர்கள்! ஸெட் கேஸ்களை உண்டியல் வடிவில் செய்து "காணிக்கை" என்று லேபில் ஒட்டி விடுவார்கள்!

● அ. ராமச்சந்திரன், சென்னை.

? மறைந்த எழுத்தாளர் என்.ஆர்.தாசனின் சொற்கோலங்கள் பற்றி...?

! அதிகமாகக் கண்டு கொள்ளப்படாதவர். அதற்கு அவருடைய கோல நடையே காரணமாயிருக்கலாம். ஆனால் அவரது 'எதுபதி? எது பெயர்?' போன்ற சில படைப்புக்கள் நிஜ இலக்கிய ரசிகர்கள் யாரும் ஒதுக்கக் கூடியவையல்ல.

● எஸ். கிருஷ்ணசாமி, சென்னை.

? இந்தியாவை "ஆசியாவின்

நோயாளி''என்கிறதே பாகிஸ்தான்?
! இருக்கலாம்: நோய்க்கிருமி பாக்.தான்!

● ச.ஆ.கேசவன், கு.கழுகாசலபுரம்.

? "திருமணத்தில் நம்பிக்கை இல்லை; ஆனால் குழந்தை பெற்றுக் கொள்வேன்" என இந்தி நடிகை ரேகா கூறியிருப்பது பற்றி...?
!சுவ்வரோ ரகசுது! குடும்ப உறவுகள் ஆண்டை ஐ.நா.சபை கொண்டாடி விழா எடுக்கும்போது இவரை அழைத்து விருது அளித்துச் சிறப்பிக்கலாம்!


● நகைச்சுவை...


● ...நாடகம் தருவதில்...

● முத்ஸ், நாரேந்தல்.

?குறுக்கு வழியில் சம்பாதிக்க உபாயம் கூற முடியுமா, ப்ளீஸ்?
!அமைச்சராக வரக் கூடியவரை எதிர்த்துத் தேர்தலில் நின்று தோற்கவேண்டும். பிறகு, "அமைச்சர் தேர்தல் தருணத்தில் தகிடுதத்தம் பண்ணிவிட்டார்"என்று வழக்குப் போட வேண்டும். அப்புறம் கட்சி அடிப்படை உறுப்பினர் பதவி போனாலும் பாதகமில்லை என்று, வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்ய வசதியாக நடந்து கொள்ள வேண்டும். முயன்று பாருங்களேன், என் உபாயம் உங்களுக்குப் பலன் தருகிறதா என்று!

● சிக்ஸ் முகம், கள்ளியம்புதூர் ❑

? தமிழ் நாட்டில் வழிப்பறிக் கொள்ளைகள் குறைந்து விட்டது போல் தெரிகிறதே?
!அப்படியா! சென்னையில் வீடு புகுந்து கொள்ளையடிப்பது இன்னும் சுலபமாயிருக்கிறது என்று அவங்க எல்லாரும் பட்டணப் பிரவேசம் பண்ணிட்டாங்க போலிருக்கு!

● ஏ.எம்.பழனிசாமி, கோவை

? வானத்தை நோக்கி இரண்டுமுறை சுட்டதற்காகக் கோவை எம்.பி. கைது செய்யப் பட்டுள்ளாரே?
!அவரைத் தாக்க வந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் திராணியில்லாதபோது இதையாவது செய்து வைப்போமே என்ற சமரசத் திட்டமாயிருக்கும்!

● அ.க.கிருஷ்ணன், சென்னை

? சமீபத்தில் தாங்களே மலைத்துப்போன நிகழ்ச்சி எது?


● 101க்குப் பிரார்த்தனை!


● ஆன்மீக எழுச்சி!

!அமைச்சர் அஜித்குமார் பாஞ்சாவை மேடையில் வைத்துக் கொண்டே எம்.பி. வள்ளால் பெருமான், நெய்வேலியில் வெளுத்துக் கட்டியதுதான். 'பிரதமரின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நான் ஒன்றும் எதிரியல்ல: ஆனால் அது நியாயமான முறையில் நடக்க வேண்டும். அக்கிரமத்தை- அதுவும் என் தொகுதியில் நடக்கும் அக்கிரமத்தை எதிர்த்து என்னால் குரல் கொடுக்காமல் இருக்க முடியாது' என்று ஒரு போடு போட்டாரே,சபாஷ்!


● ...யார் கில்லாடி?

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? சேஷனின் அதிரடி நடவடிக்கைகள்...?
!திருச்சி தாயு.செந்தில்குமார், ஒரு ஜோக் எழுதி அனுப்பியிருக்கிறார்:

"சேஷன் ஏன் கோபமாக இருக்கார்?"

"வாக்காளர் அடையாள அட்டையில் கம்பெனி விளம்பரத்துக்கு இடமுண்டா? ஸ்பான்சர் செய்யலாமா?ன்னு கேட்டாங்களாம்!"

இது ஜோக்காக எனக்குத் தோன்றவில்லை. யோசனையாகப் படுகிறது. அடையாள அட்டை தொடர்பான பொருளாதாரப் பிரச்னை அரசுக்குத் தீர்ந்துவிடும்!

● முஸ்தபா, தக்கோலம்

? டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதுபோல ஒரு தின தொடரையும் இந்தியா வெல்லுமா?
! புரியலையே சாமி! முதல் வெற்றியை யொட்டி இந்து, "இந்தியாவுக்கு த்ரில்லிங் வெற்றி" என்கிறது; எக்ஸ்பிரஸோ, "முக்கி முனகி வெற்றி"என்கிறது! இந்த நிலையில் எப்படி பெட் கட்டுறதாம்!

● அப்துல் நஸீர், வலங்கைமான்

? ஸ்டார் டிவி உரிமையாளர் முர்டோக்கின் இந்திய விஜயம் பற்றி?
!பி.பி.ஸி.யைக் கழற்றி விட்டுவிடவும், தூர்தர்ஷனுக்குத் தூண்டில் போடவும் திட்டம் திட்டுகிறார்.

❑ ரூ.25 பரிசு பெறுபவர்:
ஆறுமுகம்,
பாத்திரக்காரர் வீடு, பள்ளிக்கூட வீதி,
கள்ளியம்புதூர் 638056
பெரியார் மாவட்டம்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸூக்தங்கள் - நாகராக்ஷரம் - விலை ரூ. 60/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
5. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/- (1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (கிரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 65/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்
1. மஹாசேச்லோக - ராமமந்த்ராமே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நவோதத்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-
6. வைராக்ய சாஸ்த்ரம் - ஆர்ட் பேப்பரில் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "வாது நூல்கள் பற்றிய விவரமான லிஸ்ட் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கவுண்டராக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, காவசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.



கல்கி



1994
பிப்ரவரி 27
மலர் : 52
இதழ் 31
ஸ்ரீமுக
மாசி 15

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்

புரட்சித் தலைவிக்கு ஓர் எச்சரிக்கை!

"கிருஷ்ணாய்ய்ல்ல்...."

'எங்கே, இந்த "ஆன்மிக அழைப்பை" வீதிகளில் இனி கேட்கவே முடியாமல் போய் விடுமோ' என்று ஏங்கிய நேரத்தில், தமிழக அரசுக்கு எதிராக மேலும் ஒரு தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கி, நமக்கு ஆறுதல் அளித்து உள்ளது. கைவண்டியில் கீரையின் நிரப்பி வீதி வீதியாக விற்று ஜீவனம் நடத்தி வருபவர்களின் வயிற்றிலடிப்பது போலத் தமிழக அரசு பிறப்பித்த ஓர் உத்தரவு செல்லாது என்று அதை ரத்து செய்துவிட்டது உயர்நீதிமன்றம்.


இவ்வாறு மக்களுக்கு அரசு அநீதி இழைக்கும்போதெல்லாம் இடை புகுந்து மக்களின் உரிமைகளைக் காத்துத் தருவது நீதிமன்றமே. தர்ம நியாயத்தை எடுத்துக்காட்டி, சட்டத்தை நிலை நிறுத்தியதற்காக நீதிமன் றத்துக்கு அரசு நன்றி தெரிவித்து, தீர்ப்புக்குத் தலைவணங்கி, தன்னைத் திருத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். 'மறுபடி இந்த மாதிரி மக்கள் நலனுக்கு விரோதமான உத்தரவுகளைப் பிறப்பிக்காமல் இருப்போம்' என்று அடக்கம் பெறவேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாகத் தமிழக அரசும் ஆளும் கட்சியும் 'நீதிமன்றம் தனக்கு விரோதி; அதனால்தான் அரசுக்கு எதிரான தீர்ப்பு வழங்குகிறது' என்று தவறாக எண்ண ஆரம் பிக்கின்றன. இதிலேயும் அரசியலைப் புகுத்தி, கட்சிக் கண்ணோட்டத் துடன் பார்த்து, அநாகரிகமான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கவும் தொடங்கிவிடுகிறார்கள். இவ்வாறு தமது கட்சிக்காரர்களும் போலீஸ் இலாக்காவும் நடந்து கொள்வதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் முதல்வருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவரது மௌனமே இதற் கெல்லாம் அவர் உடந்தை என்பதையும், மறைமுகமாகத் தூண்டிவிடுகிறார் என்பதையும் உணர்த்துகின்றன.

ஆசிரியர் பயிற்சிப் படிப்பு தொடர்பான, அநீதியான அரசு ஆணை களை உயர்நீதிமன்றம் ரத்து செய்த கையோடு, இப்போது கீரையின் கைவண்டிக்காரர்கள் நலனைக் காக்கும் உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்திருப் பதைக் கவனிக்க வேண்டும். பின்னதில் தீர்ப்பு வழங்கியுள்ள நீதிபதி லக்ஷ்மணன்தான் அரசின் நிலக்கரி பேரம் தொடர்பான வழக்கைத் தாம் விசாரிக்காமலிருக்க அனுமதி வழங்க வேண்டும் என்று பிரதம நீதிபதியிடம் கேட்டுக் கொண்டார் - சில தினங்கள் முன்பு. இதற்குக் காரணம், அவரது மருமகன் போலீஸாரால் பொய்க் குற்றச்சாட்டில் கைதாக்கப்பட்டதே என்பது இன்று உலகறிந்த விஷயமாகி, தமிழக அரசுக்கும் அதன் தலை மைக்கும் அவப்பெயரை அளித்துள்ளது.


தமிழக அரசின் போக்கு, நீதித் துறையையே அச்சுறுத்துவது போலிருப்பதாகக் கருதி, பொறுப்புள்ள வழக்கறிஞர்கள் கூட்டம் ஒன்று, ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானம் போட இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட ஆளும் கட்சி குண்டர்கள், வாகனத்தில் அடி யாட்களை ஏற்றி வந்து, வழக்கறிஞர்கள் போல அவர்களை அதே கூட்டத் தில் நுழையச் செய்து, எதிர்ப்புக் கோஷமிடவும் வைத்திருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் வேறு இடம் தேடிப் போய்த் தீர்மானம் நிறைவேற்றி விட்டுப் பிறகு ஆளுனரையும் சந்தித்துப் புகார் மனு தந்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் ஆளும் கட்சியினர் நடந்து கொள்வது ஜனநாயகமா காது என்பது மட்டுமல்ல, கேவலமான, கண்டனத்துக்குரிய செயல்கள். ஜனநாயகத்தில் மக்கள் சக்தியின் ஆதரவு பெற்று அபரிமித மெஜாரிட்டி யுடன் ஒருவர் பதவிக்கு வந்தாலும் இங்கே சட்டத்தின் ஆட்சியைத்தான் அவர் தரவேண்டுமே தவிர, சர்வாதிகாரத்தை அல்ல. எதேச்சாதிகாரமாகத் தலைமை மாறிவிடாமல் அவ்வப்போது எச்சரித்து, மக்கள் நலனைக் காப்பது நீதிமன்றங்களே. ஆட்சிக்கு எதிரான உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், ஆட்சியாளருக்குத் தலைகுனிவை ஏற்படுத்தாவிட்டாலும் அடக்கத்தையாவது அவர்கள் பெறவேண்டும். அவ்வாறின்றி, 'என்னை யார் தட்டிக் கேட்பது?' என்ற பந்தா தொடருமானால், நீதிமன்றங்களை அவமதிக்கும் போக்கு நீடிக்குமானால் —

மக்களின் அபரிமித ஆதரவு இருந்தும் ஆளும் தகுதியை இழக்கும் ஆபத்து உண்டு.



பாருங்க மாமா! இந்தப் பையன் எப்பவும் பார்த்தாலும் என்னைக் கிள்ளிக்கிட்டே இருக்கான்... கண்டிச்சு வையுங்க!
இல்லே மாமா! இவதான் சும்மா சும்மா என்னைக் குட்டிக்கிட்டே இருக்கா...
என்னங்க டிஸ்பேர் பண்ணாதீங்க முடியலே! உங்கக்கிட்டேயே ஒப்படைச்சுட்டேன், என்னமோ பண்ணிக்குங்க!
ஏம்மா இப்படி அத்துமீறி நடந்துக்கிறே?
இந்தியா
காஷ்மீர்
பாகிஸ்தான்
அய்யோ! அக்கிரமம்... இந்தியா இப்படி மனித உரிமைகளைப் பறிக்கலாமா?
கிளிண்டன்



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் ஆளுகைக்குட்பட்ட ஸ்ரீஆனந்தவல்லி சமேத சோமநாத சுவாமி கோயில், மானாமதுரை, அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா அறிவிப்பு.

பூர்வத்தில் வில்வவன க்ஷேத்திரமாக விளங்கியதும் வானர வீர மதுரை எனப் பெயர் பெற்றதும் மதுரைக்குக் கிழக்கே 30-கல் தொலைவில் இராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மானாமதுரை என்னும் பிரசித்தி பெற்ற க்ஷேத்தி ரத்தில் கிருத மாலா என்றும் வேகவதி என்றும் பேர்பெற்ற வைகை நதியின் மேல் கரையில் திரேதாயுகத்தில் ஸ்ரீ இராமபிரானால் தனது இலங்கைப் படையெடுப்புக்கு முன் வழிபடப் பெற்றவரும் துவாபர யுகத்தில் ஸ்ரீபலராமராலும், ஸ்தூலகர்ண மகா ராஜாவாலும் வணங்கப் பெற்றவருமான பெருமான் பூர்வத்தில் திரிபாகநாதர் என்றும் திரிபதேசர் என்றும் திருநாமம் பெற்று பின்னாளில் சந்திரபகவானுக்கு சாபவிமோ சனம் நல்கியதால் சோமநாதர் என்னும் திவ்யநாமத்துடன் ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத ராய் அருள்பாலித்து வருகிறார்.

பிற்காலப் பாண்டியர்கள் திருநந்தவனம், மண்டபங்களும் கட்டிய திருக்கோயில் நாளாவட்டத்தில் சமயகாழ்ப்புக்கும் இயற்கையின் தாக்குதலுக்கும் ஆளாகி சிதிலமடைய, குறுநில மன்னர்கள் அவ்வப்போது புனராவர்த்தனம் செய்ய, இறுதி யாக மருது பாண்டியர் எழுப்பித்த இராஜா கோபுரம் பூர்த்தியடையாமல் இன்று வரை நின்று போனதைக் கவலையுடன் கண்ணுற்ற பெருமனம் கொண்டோரும் இருநிதி படைத்தோரும் இராஜக்கோபுரத்தைப் பூர்த்தி செய்தும் விமானங்களைப் புதுப்பித்தும் சாலாஹாரத்தை நிர்மாணித்தும் மற்றும் பலவாறாலும் ரூ.15 லட்சம் செலவில் திருப்பணி செய்து நிகழும் ஸ்ரீமுக ஆண்டு பங்குனி மீ 18 ஆம் நாள் (31.3.94) அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்கவென சிவாச்சாரியார்கள் பணித்தபடி நடைபெறவிருக்கும் திருக்குடமுழுக்கு விழாவுக்கு சுமார் 3 லட்சம் தேவைப்படுகிறது.

அன்பரும் அடியாரும் அருள்மனம் படைத்தோரும் தங்களால் இயன்ற அளவுக்கு பணம் செலுத்தி இறைவனின் திருவருளுக்குப் பாத்திரராகும்படியும் திருக்குடமுழுக்கு விழாவுக்கு வந்திருந்து இறைவனின் திருவருட்பிரசாதம் பெறும்படியும் பணிவுடன் வேண்டுகிறோம். அன்பளிப்பு காணிக்கையை செக் டிராப்ட் அல்லது மணியார்டர் மூலம் 'தலைவர், ஆனந்த வல்லி சோமநாத சுவாமி கோயில் திருப்பணி கமிட்டி' என்று எழுதி அனுப்பி வைக்கும் முகவரி:

தலைவர்:

எஸ்.ஜவஹர்லால்

ஸிமெண்ட், அஸ்பெஸ்டாஸ் ஷீட் மெர்செண்ட்,

மானாமதுரை - 623 606

வட்டமேஜை

யார் காலிலாவது விழுந்து,

◆ 'ஆள்கிறீர்களா? விளையாடுகிறீர்களா?' தலைப்பிலான தலையங்கம் படித்தேன். இப்பொழுதெல்லாம் நீதிமன்ற ஆணை களை மீறுவதென்பது சர்வ சாதாரணமாகி விட்டது. இதற்கு மற்றுமொரு சமீப உதாரணம்தான், ஆசிரியர் பயிற்சித் துறை சம்பந்தமான உயர்நீதிமன்ற ஆணையை, தமிழக அரசு மீறியிருக்கும் சம்பவம். ஜெயலலிதாவின் பல வேண்டாத நடவடிக்கைகளை எதிர்த்து எழுதும் தைரியம், உங்களுக்குச் சற்று அதிகம்தான்!

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ தலையங்கம் படித்த போது, 'கேடுவரும் பின்னே; மதி கெட்டு வரும் முன்னே' என்கிற பழமொழியை மெய்ப்பிக்கப் போகிறதா, தமிழக அரசு, எனும் ஐயம் என்னுள் எழுந்தது!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ 'காதல் என்பது எதுவரை?' கவர் ஸ்டோரி கண்டேன். மொழி, இனம், மற்றும் மதத்தால் பேதம் காணும் அரசியல்வாதிகளின் மத்தியில் பேதம் மறந்து, கருத்தொருமித்த கணவன், மனைவியராய் வாழமுடியும் என வாழ்ந்து காட்டும் தம்பதிகளைப் போற்றத்தான் வேண்டும். கல்கி கவர்ஸ்டோரி, ஒரு 'பவர்ஃபுல்' ஸ்டோரிதான்!

சென்னை - 24, ஆர். சிவகுமாரன்.

◆ 'விலை உயர்வு' குறித்த கார்ட்டூனில் மன்மோகன் சிங் நம்மை (மக்களை) அடிப்பது மாதிரி இருக்கலாம். ஆனால், 'கார்ட்டூன்' மூலம் மத்திய அரசையே குட்டியுள்ளது 'கல்கி'! கங்கிராட்ஸ்!

திருச்சி - 4, வீணை ராம்ஜி.

◆ 'கல்கி'யின் இலவச இணைப்பு கண்டேன். தலைவலிக்கு சித்தவைத்திய சிகிச்சையினால் மூன்றே நாட்களில் குணமடையச் செய்யும் டாக்டர் எம்.எஸ். ராஜுவின் திபுணத் துவம் பாராட்டுக்குரியது.

சென்னை - 23, இ. ராமதாஸ்.

◆ எம்.பி.க்குக் கொடுக் கப்படும் சலுகைகளைப் படித்ததும், பேசாமல் யார் காலிலாவது விழுந்து எம்.பி. ஆகிவிடலாமா என்று ஏங்கிறது என் மனம்!

மதுரை, வி. பரமசிவம்.

◆ பிரபஞ்சனின் 'திசை மாற்றம்' கண்டேன். கயத்துக் கத்தின் பாதிப்பில் விஷ முற்றுத் திரிகிற மனித பல ஜீவன்கள், அழகுற காண்பிக் கப்பட்டிருக்கிறது. பாராட்டுக்கள்.

திருச்சி - 4, தாயு. ஆண்டாள்.


◆ அமைதிப்படை விமர்சனத்தைப் போய் இப்படிக் குதறி வைத்துள்ளீரே! இதற்குப் பேசாமல் நீர் சினிமா தியேட்டரில் முறுக்கு விற்கப் போய் விடலாம்!

பவித்திர மாணிக்கம், சிவக்குமார்.

◆ அமைதிப் படை, சிந்து நதி - பூ படங்களின் விமர்சனத்தை அழகாகச் செய்திருந்தீர்கள். குட்ட வேண்டிய இடத்தில் குட்டி, தட்டிக் கொடுக்க வேண்டிய இடத்தில் தட்டிக்கொடுத்து... வெரிகுட் சார்!

சென்னை - 90, ஸ்ரீநிவாஸ் பிரபு.

எம்.பி. ஆகி விடலாமா?



◆ திருவேட்களம் : களத்தில், செயல் வீராங்கனைகள்

அன்பே முதலீடு; நன்றியே லாபம்!

அந்த ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு மின் வசதி கிடையாது; மாணவர்களுக்கு இருக்கைகள் கிடையாது; 38 குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையினால் கண் பார்வை பாதிக்கப்படும் அபாயம்; ஊருக்குள் தண்ணீர் பிரச்னை.


இப்படியெல்லாம் இருந்த திருவேட்களத்தைத் தத்து எடுத்துக் கொண்டனர் லயன்ஸ் கிளப் பெண்மணிகள். அனேகம் பேர் அண்ணாமலை பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் இல்லத்தரசிகள். மேற்படி பிரச்னைகளைத் தீர்த்ததுடன் உடனடி கவனிப்பு என ஆரம்பித்து, இன்று திருவேட்களத்தில் கோபர் கேஸ் பிளான்ட் நிறுவ மூன்று செண்ட் நிலம் ஒதுக்கப்படும் அளவுக்குக் கிராமத்தை வளர்ச்சியுறச் செய்துள்ளனர்.

மின்சாரம் வந்ததால் பள்ளியில் மாலை நேரத்தில் தையல் வகுப்புகள் நடத்தி திருவேட்களம் பெண்களுக்கு உதவ முடிந்திருக்கிறது.

பல்கலைக் கழகத்துடன் இணைந்து, கிராமத்தின் எழுபத்தைந்து சதவிகித மக்கள் எழுத்தறிவு பெற உதவியிருக்கிறார்கள்.

திருவேட்களத்துப் பெண்களும் ஆண்களும் நன்றிப் பெருக்குடன் லயன்ஸ் கிளப்பை வாழ்த்துகிறார்கள்.

- மலர்.



கோவிந்தசாமி

கோவில் இல்லாத ஊர்!

பெரும்பாலானோர் இங்கே நாத்திகர்களாவதற்கே கோவில் நிர்வாகம் தான் - அவர்களது ஏகாதிபத்தியப் போக்குதான் காரணம். கோவிலை அவர்கள் குடும்பச் சொத்தாக நினைக்கிறார்கள்.

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பார்கள். ஆனால், இருந்த கோவிலை இடித்து விட்ட ஊரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

பூந்தோட்டம் - இது கிராமத்தின் பெயர். இருப்பது, சிதம்பரத்தின் அருகே. 1940 களில் பெரியாரின் திராவிட இயக்க வளர்ச்சி உக்கிரமாகப் பரவிக் கொண்டிருந்த போது, பெரியாரும் அண்ணாவும் ஒன்றாக இக்கிராமத்துக்குப் (1944 ல்) பேச வந்திருக்கிறார்கள். அந்த விஜயம் இந்தக் கிராமத்தின் முகத்தையே பிளாஸ்டிக் ஸர்ஜரி செய்து விட்டது! ஒருவர் விடாமல், கிராமத்தின் அத்தனை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள், கிழவர்கள், கிழவிகள் யாவரும் - அன்றுவரை ஆத்திகர்களாகவும், பக்திப் பழங்களாகவும் இருந்த நிலை மாறி, பெரியார் பேசி முடிந்தவுடன் ஒரே குரலில் தங்களை நாத்திகர்களாகவும், பகுத்தறிவு இயக்கத் தொண்டர்களாகவும் அறிவித்துக் கொண்டனர். ஊரில் இருந்த வேணு கோபாலர் ஆலயம் இழுத்து மூடப்பட்டது! பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு, அவர் குளத்துக்கு அனுப்பப்பட்டார். இன்று பூந்தோட்டத்தில்



* நிறைமதி, அல்லி, சரோஜா, மங்கையர்க்கரசி, புருஷோத்தமன்

* எழிலரசன்



கோவில் கிடையாது. வழிபாடு கிடையாது. தீபாவளிக் கொண்டாட்டம் கிடையாது. மாறாக, பெண்கள் முதற்கொண்டு பகுத்தறிவு வாதம் பேசுகிறார்கள்!

மிகுந்த சம்பிரதாய முறைப்படி வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சரோஜா நம்மிடம் சொல்கிறார் : "பெரியார் இங்கு வந்து பேசியதற்கு முன் எங்கள் குடும்பம் எப்படி இருந்தது என்று யாரிடமாவது கேட்டுப் பாருங்கள். பூஜை, பண்டிகை என்று வந்து விட்டால் கேட்கவே வேண்டாம். அத்தனை, பழமையில் ஊறியிருந்த குடும்பம் எங்களுடையது. பெரியார் வருகைக்குப் பின் நடந்த என் திருமணமோ பகுத்தறிவுத் திருமணம்! ஐயர் இல்லை, தாலி இல்லை, மந்திரம் இல்லை!"

"வழி வழியாக வந்து கொண்டிருக்கும் மரபுகளை ஓவர்-நைட்டில் ஒதுக்கி, மாற முடியுமா?" என்று கேட்டால், "முடிந்திருக்கிறதே!" என்கிறார் நிறைமதி. பள்ளி ஆசிரியை.

"கண்மூடித்தனமாக சில சம்பிரதாயங்களை நாம் எதிர்க் கேள்வி கேட்காமல் கடைப்பிடித்து வருகிறோம். சட்டென்று மின்னல் மாதிரிதான் அறிவு செயல்படுகிறது. அப்போது மாற்றம் தன்னால் நிகழ்ந்து விடுகிறது!" என்கிறார் அல்லி.


"உங்கள் கிராமத்துச் சிறுவர்களுக்கும் நீங்கள் இதே கொள்கையைத்தான் போதிக்கிறீர்களா? அப்படியென்றால் பள்ளியில் அவர்களுக்கு கடவுள் வாழ்த்து போன்ற தெய்வீக சிந்தனைகளை ஊன்றும் போது குழப்பம் வராதா?"

"நாங்கள் எதையும் திணிப்பது கிடையாது. ஆனால், அவர்களே சரியான பாதையில்தான் வருகிறார்கள். பள்ளிப் படிப்பு என்பது 'மார்க்'குக் காக. நடைமுறையில், எங்கள் ஊர்ப் பிள்ளைகள் பகுத்தறிவுவாதிகளாகத்தான் வளர்கின்றனர்" என்கிறார் புருஷோத்தமன்.

"திருமணம் வேண்டுமானால் பகுத்தறிவுத் திருமணமாக நடத்தலாம். இதர எந்த மதச்சடங்குகளும் கூடவா கிடையாது?"

"இறப்புக்குக் கூட ஈமச்சடங்குகள் கிடையாது. முன்பு ஒருவர் இறந்த போது படம் திறந்து வைத்தார்கள். இப்போதெல்லாம் அதுவும் இல்லை."

"பூந்தோட்டம் மட்டுமின்றி வாக்கூர், சிக்கலூர், ஒட்டாக்கநல்லூர், நார்த்தங்குடி, நாகூர் போன்ற கிரா



கணவன் : நான் பிரயாணம் பண்ணும்போது தொந்தரவு பண்ணாதே! சீக்கிரம் என்ன வேணும்னு சொல்லு...?

மனைவி : மூக்குத்தித் திருகாணி கீழே விழுந்துடுச்சி! அப்படியே எங்கேயாவது இருக்கான்னு பாருங்களேன்!

- ந. கணபதி

மக்களிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பகுத்தறிவுவாதம் பரவி வருகிறது" என்கிறார் எழிலரசன் என்கிற விவசாயி.

இதற்கு இவர் சொல்லும் காரணம் இன்னும் விநோதம். "புனிதத் தலமான ஒரு பகுதியில் இப்படி ஒரு பிரிவினர் வளர்ச்சியடைவது வியப்பளிக்கலாம். ஆனால் 'பகுத்தறிவு' என்பதை விடுங்கள் - பெரும்பாலானோர் இங்கே நாத்திகர்களாவதற்கே கோவில் நிர்வாகம்தான் - அவர்களது ஏகாதிபத்தியப் போக்குதான் காரணம். கோவிலை அவர்கள் குடும்பச் சொத்தாக நினைக்கிறார்கள். வெளி மனிதர்களுக்கு மரியாதை தருவது கிடையாது. எனக்கு இன்னும் கோவிலுக்குப் போகும் பழக்கம் உண்டு. ஆனால் பக்தியெல்லாம் கிடையாது. காரணம் கடவுள் மீது உள்ள வெறுப்பல்ல; அவரைச் சுற்றி உள்ளவர்களால் ஏற்பட்ட பாதிப்புகள்" என்கிறார் இவர்.

அனைத்து ஊர் மக்களும் பகுத்தறிவு வாதம் என்பதை அரசியல் நோக்கோடே பார்க்கிறார்கள். தி.க., ஒரு அரசியல் கட்சி இல்லையென்றாலும் 'கட்சி' என்கிற அளவில் அதன் அரசியல் செல்வாக்கு, இவர்களின் பேச்சில் தெரிகிறது. ஆனால் கோவிந்தசாமி என்கிற ஊர்ப் பெரியவர் மட்டும் இதனைக் கட்சி சார்பில் பார்க்காமல், ஒரு சித்தாந்தமாகப் பார்க்கிறார். முந்நாள் கிராம முன்சீப்பாகவும் இருந்திருக்கிற இவர் சொல்கிறார் : "பகுத்தறிவு வாதம் பேசுவது என்பது இப்போதெல்லாம் வெறும் 'அடையாளம்' காட்டிக் கொள்வது போலாகிவிட்டது. அதன் அடிப்படைக் கொள்கைகளெல்லாம் பெரியாரோடே போய்விட்டது. தி.க. என்று சொல்லிக் கொள்பவர்களிடம் கூடக் கொள்கை இல்லை. அரசியல் கூடாதென்று பெரியார் சொன்னார். ஆனால் இன்று தி.க.வை மக்கள் ஒரு அரசியல் கட்சியாகப் பார்க்கிற அளவுக்கு அதன் கொள்கைகள் தகர்ந்து விட்டன. நான் கூட வீரமணியிடம் இதுபற்றிப் பேசியிருக்கிறேன். 'நமக்கேன் அரசியல்?' என்று சண்டை போட்டிருக்கிறேன். சமூக சீர்திருத்தம் என்பது அரசியல் சார்ந்துதான் இருக்க வேண்டும் என்பதில்லை. 1960 வரை திராவிடர் கழகம் மிக வீரியத்தோடு இயங்கி வந்தது உண்மைதான். ஆனால், இப்போது போய்விட்டது. ஏன், காங்கிரஸுக்கே சில நல்ல கொள்கைகள் உண்டு. பதவி, ஆட்சி என்கிற வலையில் அவர்கள் சிக்கிக் கொண்டிருப்பதால் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர பயப்படுகிறார்கள்.

"சீர்திருத்தம் என்பது திருமணங்களில் மட்டும் இருந்தால் போதுமென்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. நமது ஒவ்வொரு செயல்பாட்டிலும் சீர்திருத்த மனப்பான்மை இருந்தால்தான், பெரியாரை முழுமையாகப் பின்பற்றுவதாகும்" என்கிறார் கோவிந்தசாமி.

ஒரு வியப்பு. பூங்கோட்டம் கிராமத்தில் அநேகமாக அத்தனை பேரும் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர் ஆசிரியர் பணி பார்க்கிறார்!

- பா. ரா.



பள்ளிப் பையன்களுக்கு வெற்றி நோட்ஸ் தெரியும். அதனை ஆரம்பித்த மெய்யப்பனைத் தெரியுமா?

மணிவாசகர் நூலகம், சிதம்பரத்தின் தமிழ் வளர்ச்சிச் சின்னங்களுள் ஒன்று. சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட தமிழ் இலக்கிய ஆய்வு நூல்களைப் பதிப்பித்திருக்கும் மணிவாசகர் நூலக அதிபர் மெய்யப்பனைச் சந்தித்தோம். காரைக்குடிக்காரர். 1952லிருந்து சிதம்பரத்தில் வெற்றிகரமாகப் பதிப்புத் தொழில் நடத்தி வரும் இவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார். அந்நாளில் பல நல்ல தமிழ் நூல்களை வெளியிட்டிருக்கும் 'சக்தி' வை. கோவிந்தனின் உறவினர் இவர். எனவே பதிப்புத் தொழில் இவரது பரம்பரைச் சொத்து.

ஆரம்பத்தில் பாரி நிலையம், மர்ரே போன்ற பதிப்பகங்கள் வெளியிட்ட நூல்களை வாங்கி விற்பனை செய்து வந்த இவர், 'தாமே ஏன் ஒரு பதிப்பகம் தொடங்கக் கூடாது?' என்று எண்ணியதன் விளைவே 52ல் சிதம்பரத்தில் மணிவாசகர் நூலகம்.

''பொழுதுபோக்கு நூல்கள் வெளியிடுபவர்கள் ஏராளம் இருக்கிறார்கள். நமக்குத் தேவை, சிந்தனையைத் தூண்டும் நல்ல தமிழ் நூல்

'வெற்றி'யின் அப்பா!



களே. ஆரம்பத்திலிருந்தே அப்படியான நூல்களை மட்டுமே வெளியிட்டு வந்திருக்கிறேன். இன்று, இந்தியாவில் எந்தெந்த பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பாடம் இருக்கிறதோ, அங்கெல்லாம் மணிவாசகர் வெளியீடு நிச்சயம் இருக்கிறது!''என்று பெருமிதம் கொள்கிறார் மெய்யப்பன்.

''பாடநூல்கள் பல வெளியிட்ட நீங்கள், வெற்றித் துணைவன் ஆரம்பித்த வரலாறு பற்றிச் சொல்ல முடியுமா?''

தமிழ் நாட்டில் புதுமுறைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்தப் புதுக் கணக்கு, பெரும்பாலான மாணவர்களுக்குப் புரியவில்லை. பல இடைநிலை ஆசிரியர்களே பாடம் நடத்துவதில் தங்களுக்கே குழப்பம் வருவதாக என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்! புதுக் கணக்கை, நாம் ஏன் எளிமையாக மாணவர்களுக்குப் புரியும்படி விளக்கக் கூடாது என்று தோன்றியது. பல கணித வல்லுனர்களுடன் கலந்து ஆலோசித்து முதன் முதலில் கணக்கு நோட்ஸ் தயாரித்து வெளியிட்டேன். மாணவர்களை உற்சாகப் படுத்தும்படி அதற்கு 'வெற்றி' என்று பெயரிட்டேன். அதற்கு அமோகமான வரவேற்பு இருந்தது. தொடர்ந்து இதர பாடங்களுக்கும் 'வெற்றி துணைவன்' தயாரித்து வழங்க ஆரம்பித்தேன். இன்று தமிழகத்தில், 'நோட்ஸ் என்றால் வெற்றி' என்னும் அளவுக்கு அது புகழ் பெற்றுவிட்டது! பின்னர் தமிழ்ப் பாடங்களுக்கு எளிய தமிழில் 'தென்றல் நோட்ஸ்' ஆரம்பித்தேன். அதற்கும் நல்ல வரவேற்பு!

''நோட்ஸ் வெளியிடுவது காரணமாகத்தான் இதர நூல்களின் வெளியீடு குறைந்திருக்கிறதா?''

''அப்படியில்லை. ஆரம்பத்திலிருந்தே, நூல்களின் எண்ணிக்கை எனக்கு முக்கியமில்லை. ஆனால் தரம் உயர்வாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன்.

''ஒரு எடிஷனுக்கும் அடுத்த எடிஷனுக்கும் பல மாறுதல்கள் செய்வேன். புதிய விஷயங்களை அதிகம் சேர்ப்பேன். மிக முக்கியம், ஒவ்வொரு எடிஷனுக்கும் விலையைக் குறைத்துக் கொண்டே வருவேன். அரிய தமிழ் நூல்களைத் தேடிப்பிடித்துப் போட வேண்டும் என்பது என் விருப்பம். அச்சுப் பிழை ஏதும் வந்துவிடக் கூடாதென்பதில் மிக கவனமாக இருப்பேன். திருவாசகம் போட்டிருக்கிறேன். நீங்கள் தேடிப் பிடித்தாலும் ஒரு பிழை காண முடியாது.

''அந்தக் காலத்தில் ஆறுமுக நாவலர் ப்ரூஃப் பார்ப்பவர்களுக்கு, ஒரு பிழை கண்டு பிடித்தால் ஒரு பைசா தருவாராம். எனக்கு அவர் முன்னோடி. எக்காரணம் கொண்டும், என் பதிப்பு நூல்களில் பிழை இருக்கலாகாது என்பதில் கவனமாக இருக்கிறேன்.''


மெய்யப்பன், வள்ளலார் நூல்கள் மட்டுமே பதினைந்து வெளியிட்டிருக்கிறார். புகழ்பெற்ற எழுத்தாளர்களைக் கொண்டு நூல் எழுதி வெளியிடுவதில் பல லாபங்கள் உண்டு. ஆனால் இவர் இருபது புது எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்!

''எனக்கு, வசதிக்குக் குறைவில்லை. புத்தகம் வெளியிடுவது தொழில்தான் எனினும் லாபம் மட்டுமே எனது குறிக்கோள் அல்ல. நல்லதமிழ் நூல்கள் விரும்பிப் படிக்கப்பட வேண்டும் என்பதுதான் என் லட்சியம்'' என்கிறார்.

திருமணம் போன்ற விசேஷங்களுக்கு மெய்யப்பன், பல குட்டிப் புத்தகங்கள் அச்சடித்து அன்பளிக்கிறார். இதற்காக 'மெய்யப்பன் அறக்கட்டளை என்றே' ஒரு அமைப்பு ஏற்படுத்தியிருக்கிறார்!

– கிருஷ்ணன்

வாசகர் தகவல்: நெய்வாசல் நெடுஞ்செழியன்



"தினம் நிம்மதியாத் தூங்கணும்கிறதுக்காகவே ஐயாயிரம் ரூபா செலவு பண்ணியிருக்கேன்றீங்களே... அப்படி என்ன பண்ணினீங்க?"

"ஒரு டி. வி. வாங்கினேன்!"

- ஆர். சி. மதிராஜ்

நம் முன்னோர்கள் 400
ஆண்டுகளுக்கு முன் காசியில்
கோடி ருத்ர யாகத்தை நடத்தினார்கள்!





உலக அமைதி காத்திட இப்பொழுது நடத்தப்படும்

கோடி ருத்ர யாகத்தில்

பங்கு பெறுங்கள்!

ஸ்ரீ ஸைலத்திற்கு 48 கி.மீ அருகிலுள்ள பிரகாசம் மாவட்டத்திலுள்ள 120 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ விஸ்வதத்த ஆச்ரமத்தில் கோடி ருத்ர யாகம் ஜூன் மாதம் 11-ம் தேதியிலிருந்து 30-ம் தேதிவரை நடைபெற உள்ளது.

சத்குரு ஸ்ரீபாத ஸ்ரீவல்லப வேங்கட விஸ்வ நாத ஸ்வாமிகளின் தலைமையில் உலக அமைதி, ஒற்றுமை காத்திட, இயற்கை சீற்றத்தை கட்டுப்படுத்த மற்றும் கெடுதல்கள் குறைந்து நல்லவை ஓங்கிட இந்த யாகம் நடைபெற உள்ளது.

200 டன் எடையுள்ள 16 வகையான சமித்துக்களும், 8 டன் தூய பசு நெய்யும் ஆண்டவனுக்கு இந்த யாகத்தில் படைக்கப்படுகிறது. 1500 வேத விற்பன்னர்களால் ருத்ர அனுவாக மந்திரம் ஓதப்படுகிறது.

யாகத்தில் பங்கு பெற விரும்பும் அன்பர்கள் பொருளாகவோ அல்லது பணமாகவோ அளிக்கலாம். யாகத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைகள் முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 80 (G) G.O.No. DIT/2 (293)/92-93)

காசோலை/ட்ராஃப்ட் அளிக்க
விரும்புகிறவர்கள்

SREE VISWADATTA ASHRAMAM,
MADRAS (OR) DORNAL என்ற பெயருக்கு அனுப்பவும்.

யாகத்தில் பங்குபெற விரும்பும் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ விஸ்வதத்த ஆசிரமம்
VISWADATTA ASHRAMAM
விஸ்வதத்தபுரம், டோர்னலா மண்டல்,
பிரகாசம் (Dt.) A.P. India.

ஸ்ரீ விஸ்வதத்த ஆசிரமம் (கிளை)
(Viswadatta Ashramam)
No. 14, ஜனக்ராஜன் தெரு,
நேரு நகர், சாலிகிராமம், சென்னை-92

Eastman Travel and Tours (Madras) Pvt. Ltd.
4, சேஷாத்திரி சாலை, சென்னை - 600 018.
போன்: 4990135, 4993066, 4993304

தொலைபேசி:
Mr. Giriraj - New York (USA) 212977 - 9000
Mr. T.P. Naidoo - Durban (South Africa) 031-4002725
Mr. Ghera - New Delhi 6432891, 6413378
Mr. E.P. Badrinarayana - GOA 46683

Madras - 8282842, 421472
Bangalore - 602321, 600097, 226593
Hyderabad - 220833, 238123
Nellore - 29597, 29726

யாகத்தில் பங்கு பெற ரூ.516/- செலுத்தி பதிவு செய்து கொள்ளுங்கள்.



தியாகபூமி

தூங்கியவர் கண் விழித்தெழுந்தார். சுற்று முற்றும் பார்த்தார். குழந்தையைக் கண்டு ஆச்சரியப் பட்டார். கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார். ''இது என்ன இது?'' ''இது என்ன இது?'' என்று சொல்லிக் கொண்டு தடு மாறினார்.

அவருடைய தடுமாற்றம் மரத்தின் மறைவில் இருந்தவளுக்குக் குதூகலத்தை அளித்தது. 'படட்டும்; நன்றாக அவஸ்தைப் படட்டும்!' என்று எண்ணினாள்.

அந்த மனுஷர் குழந்தையின் அருகில் போய் அதை எடுத்தார். மறுபடி அதைக் கீழே விட்டுவிட்டு நாற்புறமும் பார்த்தார். ''யாரம்மா, இது? குழந்தை யாருது?'' என்று கூவினார்.

மீண்டும் குழந்தையிடம் வந்து அதை எடுத்துக் கொண்டார். ''அம்பிகே! பராசக்தி! இந்த உலகத்தைத் துறந்து சந்நியாசியாகலாமென்று இருந்தவனுக்கு இப்படிப் புத்தி கற்பிக்கிறாயோ?'' என்றார்.

'அப்படியா அப்பா எண்ணினீர்கள்? என்னை இம்மாதிரியெல்லாம் கஷ்டத்துக்கு ஆளாக்கிவிட்டு நீங்கள் சந்நியாசியாகலாமென்று பார்த்தீர்களா? ரொம்ப லக்ஷணம்' என்று மரத்தின் மறைவிலிருந்தவள் எண்ணிக் கொண்டாள்.

குழந்தையை எடுத்துக் கொண்டு அவர் அந்தத் தோப்பைக் கடந்து போகிற வரையில் அவள் அங்கேயே இருந்தாள்.

உமா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். மேற்சொன்ன சம்பவம் தன்னுடைய வாழ்க்கையில் உண்மையாக நடந்தது என்பதை அவளால் நம்ப முடியவில்லை. அப்போது தனக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும்! பட்ட கஷ்டங்களினால் தன் மனம் அவ்வளவு கசந்து போயிருந்தது. பிறருடைய கையை எதிர்பாராமல், தானே சுதந்திரமாகச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஆசை ஒரு வெறி மாதிரியே பிடித்திருந்தது. இல்லாவிட்டால், அத்தனை நாளைக்குப் பிறகு பார்த்த அப்பாவுடன் பேசாமல் போக மனம் வந்திருக்குமா? குழந்தையை அப்படி விட்டு விட்டுப் போகத்தான் மனம் வந்திருக்குமா?

இந்த ஏழு வருஷத்தில் குழந்தை வளர்ந்திருக்குமல்லவா? கிட்டத்தட்ட, இன்று டிக்கெட் விற்பதற்கு வந்த குழந்தைகளின் வயது ஆகியிருக்கும். சாருவைப் போல் இருந்தாலும் இருக்கும்.

ஒரு வேளை....! சீ! என்ன பைத்தியக்கார எண்ணம்? அந்த மாதிரியெல்லாம் கதைகளில் வேணுமானால் நடக்கும். நிஜமாக நடக்குமா? சென்னைப்பட்டணத்தில் ஏழு வயதுக் குழந்தைகள் எத்தனையோ ஆயிரம் இருக்கலாம். இந்தக் குழந்தை யாரோ, என்னவோ?

உமா மறுபடியும் டிக்கெட்டை எடுத்துப் பார்த்தாள். டைரியை எடுத்து அந்தத் தேதியில் ''மியூஸியம் தியேட்டர் - குழந்தைகள் நாடகம் - மாலை 6 மணி'' என்று எழுதி வைத்துக் கொண்டாள்.

40. புனர் ஜன்மம்

அன்று சாயங்காலம் சாரு சாவடிக் குப்பத்துக்குத் திரும்பியபோது குதித்துக் கொண்டு வீட்டுக்குள் போனாள். ''தாத்தா! தாத்தா! இன்னிக்கு ஒரு சமாசாரம் நடந்தது; உனக்கு அதைச் சொல்லவே மாட்டேன்'' என்றாள்.

''நீ சொல்லாமே போனா, நானும் கேட்கவே மாட்டேன்'' என்றார் சாஸ்திரி.

''நீ கேக்காது போனா, நான் அழுவேன்'' என்றாள் சாரு.

அவரது மடியில் உட்கார்ந்து கொண்டு, ''தாத்தா! இன்னிக்கு ஒரு மாமியைப் பார்த்தோம். ரொம்ப ரொம்ப நல்ல மாமி'' என்று சொல்லிவிட்டு, சற்று மெதுவான குரலில், ''அந்த மாமி வந்து என்னைக் கட்டிண்டு முத்தமிட்டா, தாத்தா!'' என்றாள்.

''அந்த மாமி யார் சாரு? அவள் பேர் என்ன?'' என்று சாஸ்திரி கேட்டார்.

''அவ ரொம்பப் பணக்கார மாமி! தாத்தா, பணக்காரா நல்லவாளா இருக்க மாட்டான்னு நீ சொல்லுவேயோன்னோ? அது சுத்தப் பொய்!''

''நான் அப்படி எங்கேயம்மா சொல்லியிருக்கேன்? நல்ல மனுஷாளைக்கூடப் பணம் கெடுத்துடும்னுதானே சொன்னேன்? அதனாலே, பணக்காரா எல்லாம் கெட்டவான்னு அர்த்தமா!''

''அதென்னமோ, நாங்க இன்னிக்குப் பார்த்த மாமி ரொம்ப நல்ல மாமி. எங்க கிட்ட இருந்த டிக்கெட் அவ்வளவையும் வாங்கிண்டு, 'அலையாமே வீட்டுக்குப் போங்கோ' அப்படின்னா, தாத்தா! முப்பது ரூபாய் டிக்கெட், தாத்தா!''

''யாரம்மா, அவ்வளவு தாராள மனஸுடையவாள் இந்த ஊரிலே? அவ பேரென்ன?''

''அவ பேரு ஸ்ரீமதி உமாராணியாம்.''

இந்தப் பெயர் சம்பு சாஸ்திரி காதிலும் விழுந்திருந்தது. ஒரு தர்மத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்த பெண்மணியின் பெயர் காதில் படாமல் இருக்க முடியுமா?

''ஓஹோ! சரிதான்; அந்த அம்மா பம்பாயிலிருந்து வந்திருக்கிறவள். அதனாலேதான் அவ்வளவு தாராளம். இந்த ஊரிலே இந்த மாதிரி யார் இருக்கா? அவ்வளவு பணந்தான் யாரிடத்திலே இருக்கு?'' என்றார்.

பிறகு, சாரு அன்று நடந்ததெல்லாம் விவரமாகச் சொன்னாள். அவள் கூறியதில் சாஸ்திரியின் மனத்தில் நன்கு பதிந்த விஷயம், உமாராணி குழந்தையை அணைத்து முத்தமிட்டதுதான். குழந்தை அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சந்தோஷப்பட்டாள். 'ஐயோ! இந்தக் குழந்தை, அம்மாவுக்காக எப்படி ஏங்கிப் போயிருக்கிறது?' என்று சாஸ்திரி எண்ணினார். ஒரு வேளை தான் செய்ததெல்லாம் தவறோ? தான் இந்தக் குழந்தையை எடுத்து வளர்த்தது பிசகோ? உடனே போலீஸிலே கொண்டு போய்க் கொடுத்து அதன் தாயாரைக் கண்டு பிடித்துச் சேர்க்கும்படி சொல்லியிருக்க வேண்டுமோ?

இந்தக் குழந்தையின் காரணமாகத் தம்முடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட மாறுதலைச் சாஸ்திரி எண்ணிப் பார்த்தார். தேச



யாத்திரை செய்யவேண்டும், ஊர் ஊராய்ப் போய் இந்தப் புண்ணிய பூமியிலுள்ள க்ஷேத்திரங்களையெல்லாம் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஒரு காலத்தில் அவர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஆசை நிறைவேறும் என்று தோன்றிய சமயத்தில், இந்தக் குழந்தையைப் பராசக்தி அளித்தாள். அதன் காரணமாக அவர் சாவடிக் குப்பத்திற்கு வரவும், இங்கேயே தங்கவும் நேர்ந்தது.

இது மட்டுமா? இந்தக் குழந்தை காரணமாகவே, அவர் நெடுங்கரையையும் கல்கத்தாவையும் அடியோடு மறந்திருந்தார். சாவித்திரி குழந்தையாயிருந்த போது அவளை வளர்ப்பதற்கென்று மங்களத்தைக் கல்யாணம் செய்து கொண்டதும், பிறகு, 'ஐயோ! எப்படிப்பட்ட தவறு செய்தோம்?' என்று பலமுறை வருந்தியதும் அவர் ஞாபகத்தை விட்டு அகல முடியாதல்லவா? எனவே, இந்தக் குழந்தையை அந்தக் கதிக்கு ஆளாக்கக் கூடாதென்று அவர் தீர்மானித்திருந்தார். 'வேண்டாம்; மங்களமும், அவள் தாயாரும் சௌக்கியமாயிருக்கட்டும். நாம் இல்லை என்பதற்காக அவர்கள் ஒன்றும் உருகிப் போக மாட்டார்கள். நல்ல வேளையாய், அவர்கள் நிராதரவாக இல்லை; சாப்பாட்டுக்கு, துணிக்குப் பஞ்சமில்லாமல் வைத்திருக்கிறோம், எப்படியாவது அவர்கள் சௌக்கியமாயிருக்கட்டும்.'

இந்த எண்ணத்தினால் அவர் நெடுங்கரைக்குக் கடிதம் போடவும் இல்லை; அவர்களை வரவழைத்துக் கொள்ள முயலவும் இல்லை.

ஆனால், சாவித்திரி! அவளை மறக்க முடியுமா? ஒரு நாளும் முடியாது. ஆரம்பத்தில் அவளை எண்ணி எண்ணி அவர் மனம் உருகிற்று. 'ஐயோ! இந்தக் குழந்தையை நாமே வளர்ப்பது போல் சாவித்திரியையும் வளர்த்திருக்கக் கூடாதா?' என்று அடிக்கடி எண்ணமிடுவார். 'எப்படியோ, அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பி விட்டோம். அங்கே அவள் சௌக்கியமாயிருப்பாள்!' என்று எண்ணி ஆறுதல் கொள்வார்.

சாவித்திரிக்கும் அவர் அச்சமயம் கடிதம் எழுதவில்லை. எழுதினால் தாம் இருக்கிற இடம் சம்பந்திகளுக்குத் தெரிந்து போய்விடும். சம்பந்திகளுக்குத் தெரிந்தால், நெடுங்கரைக்கும் தெரியாமல் இராது. அப்படித் தெரிந்தால் மங்களமும், சொர்ணம்மாளும் இங்கே வராமல் இருப்பார்களா? முதலிலே, "இந்தக் குழந்தையை எங்கே பிடிச்சயள்!" என்று மாமியார்க்காரி கேட்டால், அதற்கு என்ன பதில் சொல்வது? இதை நினைத்தாலே, சாஸ்திரிக்கு உடம்பு நடுங்கிற்று. வேண்டாம், வேண்டாம்! எல்லாரும் அவரவர்கள் இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும்.

இவ்வாறெல்லாம் யோசித்து, தமக்கு இது ஒரு புனர் ஜன்மம் என்றும், தமது பழைய வாழ்க்கைக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் சாஸ்திரி தீர்மானித்துக் கொண்டார். இது பராசக்தியின் ஆக்ஞை என்றும் அவர் மனப்பூர்வமாக நம்பினார். அந்த நம்பிக்கையிலேயே ஆறு, ஏழு வருஷ காலம் கழிந்து விட்டது.

அந்த நம்பிக்கை ஒரு வேளை பொய்யோ? பராசக்தியின் ஆக்ஞையென்பதெல்லாம் வெறும் பிரமையோ! இந்தக் குழந்தையை அப்பொழுதே போலீஸாரிடம் ஒப்புவித்திருந்தால், ஒருவேளை அதன் தாயாரைக் கண்டுபிடித்து ஒப்புவித்திருப்பார்கள் அல்லவா? அப்படிக் குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்து வைத்த பாவத்தை நாம் செய்து விட்டோமோ? அக்கினி சாட்சியாக மணந்த மங்களத்தை விட்டுப் பிரிந்திருப்பதும் குற்றமோ? தாயே! இதென்ன மாயை! ஒன்றும் புரியவில்லையே!

"**சா**மி! வாருங்க! என்ன உள்ளயே இருக்கிங்களே?" என்று வாசலில் நல்லானின் குரல் கேட்டது. சாஸ்திரியாரின் பூர்வ ஞாபகமும் கலைந்தது. வாசலில் வந்து பார்த்தார்.

அன்று ஸ்ரீராம நவமி. சாஸ்திரியின் இஷ்ட தெய்வங்கள் பராசக்தியும் ஸ்ரீராம பிரானும் ஆதலால், சாவடிக்குப்பத்தில் நவ

அருள்வாக்கு

வராஹமிஹிரர் "பிருஹத் ஸம்ஹிதை" என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதில் இல்லாத விஞ்ஞானக் கண்டுபிடிப்பு இல்லை.

வெறும் ஆகாசத்தில் இந்தக் கிரஹங்களெல்லாம் இருக்கின்றனவே, விழாமல் எப்படி நிற்கின்றன? இதற்குக் காரணத்தை நியூடன் என்பவர்தாம் கண்டுபிடித்தார் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். மிகப் பழைய காலத்தில் உண்டான ஸூர்ய சித்தாந்தத்தின் ஆரம்பத்தில் இருக்கிற ச்லோகமே, பூமி விழாமல் இருப்பதற்கு ஆகர்ஷணசக்தி காரணம் என்று சொல்லுகிறது. நம் பகவத்பாதாளின் உபநிஷத் பாஷ்யத்திலும் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வஸ்துவை நாம் மேலே வீசி எறிந்தால் அது மறுபடியும் கீழே வந்து விழுகிறது. அப்படி விழுவது அதனுடைய ஸ்வபாவ



குணம் அல்ல. அது பூமியில் விழுவதற்குக் காரணம் பூமியின் ஆகர்ஷண சக்தியே. ஆகர்ஷண சக்தியென்றால் இழுக்கும் சக்தி என்பது அர்த்தம். பிராணன் மேலே போகும்; அபானன் அதைக் கீழே இழுக்கிறது. ஆகவே, கீழே இழுக்கிற சக்திக்கு அபானசக்தி என்று பெயர். ஸ்ரீ ஆசாரியாரவர்கள் பிருதிவிக்கு அபானசக்தி, அதாவது ஆகர்ஷண சக்தி இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ப்ரச்நோபநிஷத்தில் (3.8) "ப்ருதிவியின் தேவதையே மநுஷ்ய சரீரத்தில் அபானனை இயக்குகிறது" என்று வருகிறது. அதன் பாஷ்யத்தில் ஆசார்யாள், 'மேலேபோட்ட பொருளைப் பூமி ஆகர்ஷிக்கிற மாதிரி, மேலே போகிற பிராணனை அபானன் கீழே இழுப்பதைப் பற்றிச் சொல்கிறார். இதனால் உபநிஷத்திலேயே Law of Gravitation பேசப்படுவதாக ஆகிறது. இவைகளைப் போன்ற பல அருமையான விஷயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கின்றன. நமக்கு இவைகள் தெரியாததால் தேசாந்திரத்தில் உள்ளவர்கள் நமக்கு எவ்வளவோ காலம் பிற்பட்டு எழுதியவைகளுக்கு, அளவில்லாத கௌரவத்தைக் கொடுக்கிறோம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ராத்திரியும் ஸ்ரீராம நவமியும் விசேஷமாய்க் கொண்டாடுவது வழக்கம். ஆகையால் சாவடிக்குப்பம் அன்று அற்புதமான தீபாலங்காரத்துடன் காட்சியளித்தது.

வாசலில், சாவடிக்குப்பத்துக் குழந்தைகள் அழகாக அலங்காரம் செய்து கொண்டு வந்து பாட்டுச் சொல்லிக் கும்மி அடித்தார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்தவுடன் சாஸ்திரியாருக்கு மனநிம்மதி உண்டாயிற்று. ஆறு வருஷத்துக்கு முந்தி தாம் சாவடிக்குப்பத்துக்கு வந்த போது குப்பம் எப்படியிருந்ததென்பதையும், இப்போது எப்படியிருக்கிறதென்பதையும் அவர் ஒப்பிட்டுப் பார்த்தார். தாம் வாழ்க்கையில் வேறு என்ன தவறு செய்திருந்த போதிலும், சாவடிக்குப்பத்திற்கு வந்திருந்தது மட்டும் வீண் போகவில்லையென்று அவருக்கு உறுதி ஏற்பட்டது.

41. கதம்பக் கச்சேரி

"குழந்தைகள் டிராமா தானேன்னு அவாளுக்கெல்லாம் அலட்சியம் போல் இருக்கு" என்று சாரு கண்ணில் நீர் ததும்ப உமாராணியிடம் சொன்னாளல்லவா? அவள் சொன்னது உண்மையாகவே இருக்கலாம். ஆனால், மியூஸியம் தியேட்டரில் அன்று சாயங்காலம் ஐந்து மணிக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்தவர்களுக்கு குழந்தை சொன்னதில் நம்பிக்கை ஏற்படாது. அவ்வளவு கனதனவான்களும் சீமாட்டிகளும் தியேட்டரில் வந்து நிறைந்திருந்தார்கள்.

இவ்வாறு கூட்டம் சேர்ந்ததற்குக் காரணம் குழந்தைகளின் கதம்பக் கச்சேரியைப் பார்க்க வேண்டுமென்பது மட்டுமல்ல என்பதைச் சொல்ல வேண்டும். அத்துடன் உமாராணியைப் பார்க்கலாமென்ற ஆசையும் சேர்ந்திருந்தது. உமாராணி இருபது டிக்கெட் வாங்கிக் கொண்ட செய்தியைக் குழந்தைகள் போய் வாத்தியாரம்மாளிடம் சொல்ல, அவள் பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் சொல்ல, அவர்கள் நேரில் போய் உமாராணியை அழைத்து விட்டு வந்ததோடல்லாமல் நகரில் பிரஸ்தாபமும் செய்து விட்டார்கள். இந்தச் செய்தி பரவிவிடவே, அன்று மாலை மியூஸியம் தியேட்டரில் சென்னை நகரின் பிரசித்தி வாய்ந்த ஸ்திரீ, புருஷர்கள் பெரும்பாலோரைக் காணும்படியிருந்தது.

ஐந்து மணிக்குக் கச்சேரி ஆரம்பமாக வேண்டும். ஆனால், ஐந்து அடித்துப் பத்து நிமிஷம் ஆகியும் ஆரம்பமாகவில்லை. சாதாரணமாய், இந்த மாதிரி தாமதமானால், சபையோர் கைதட்டி ஆரவாரிப்பது வழக்கம். இன்று அப்படி ஒன்றும் நடக்கவில்லை. "இன்னும் உமாராணி வரவில்லை; அவள் வந்தவுடன் ஆரம்பிப்பார்கள்" என்று சபையோர் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒருவராவது மேடைப் பக்கம் திரை தூக்குகிறார்களா என்று கவனிக்கவில்லை. எல்லாரும் வாசற்பக்கமே பார்த்துக் கொண்

டிருந்தார்கள்.

கடைசியாக, வாசலில் ஏதோ கல கலப்புச் சப்தம் கேட்டது. அடுத்த நிமிஷம், பள்ளிக்கூடத்தின் முக்கிய நிர்வாகியாகிய ராவ்சாகிப் கஜகுல ஆஜானுபாகு அவர்கள் வழி காட்டிக் கொண்டு வர, பின்னால் வக்கீல் ஆபத்சகாயமய்யர் தொடர, உமா ராணி உள்ளே பிரவேசித்தாள். சொல்லி வைத்தாற்போல் சபையில் எல்லாரும் கர கோஷம் செய்தார்கள். உமாராணி கும்பிட் டுக் கொண்டே போய், முன்னால் தனக் காகப் போடப்பட்டிருந்த தனி ஸோபாவில் உட்கார்ந்தாள்.

உடனே திரை தூக்கப்பட்டது. ''ஜன கண மன'' என்ற தேசிய கீதத்துடன் கதம்பக் கச்சேரி ஆரம்பமாயிற்று.

புரோகிராமில் மொத்தம் ஒன்பது அங்கங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அவற் றுள் மூன்றில் சாருமதியின் பெயர் காணப் பட்டது. முதலில், சாருமதியின் பரத நாட் டியம். பிறகு, கிருஷ்ண லீலா நாடகத்தில் சாருமதி கிருஷ்ண வேஷம். கடைசியில், சாருமதியும் யமுனாவும் ராதாகிருஷ்ண நடனம்.

ஒவ்வொரு தடவையும் சாரு மேடைக்கு வரும் போதெல்லாம் சபையில் நிசப்தம் குடிகொண்டிருக்கும். சபை யோரின் கவனத்தை அவள் அவ்வாறு கவர்ந்துவிடுவாள். சாரு உள்ளே சென்றதும் சபையில் கலகலப்பு ஏற்படும். பெரும் பாலோர் உமாராணி என்ன செய்கிறாள் என் பதைக் கவனிக்கத் தொடங்குவார்கள். இதற்காகச் சிலர் தலையைத் தூக்கிப் பார்ப் பதும், எழுந்து நிற்பதும், பின்னாலிருப்ப வர்கள் அவர்களை அதட்டி உட்காரச் செய் வதும் சர்வ சாதாரணமாயிருந்தது.

ஆனால், உமாவோ இவை ஒன்றையும் கவனிக்கவில்லை. குழந்தை சாருவின் பரத நாட்டியத்தைப் பார்த்ததுமே அவளுக்கு மெய்மறந்து போய்விட்டது. நாட்டியம் முடிந்ததும் உமா, பக்கத்திலிருந்த வக்கீல் ஆபத்சகாயமய்யரைப் பார்த்து, ''இந்தக் குழந்தை எவ்வளவு நன்றாய் நாட்டியம் ஆடுகிறது, பார்த்தீர்களா? முகத்தில்தான் என்ன களை! இந்தக் குழந்தை யார் என்று உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டாள்.

''எனக்குத் தெரியாதே?'' என்றார் வக்கீல். பிறகு, ''நீங்கள் மெட்ராஸுக்குப் புதிதல்லவா? அதனாலே அப்படித் தோணு கிறது. இந்த மாதிரி குழந்தைகள் நாட்டியம் செய்யறது ரொம்ப சாதாரண விஷயம். பாருங்கோ, என்னுடைய குழந்தைக்குக் கூட நாட்டியத்திலே ரொம்ப 'டேஸ்ட்'. சொல்லிக் கொடுத்தா நன்னா வரும் என்று எல்லாரும் சொல்றா. ஆத்திலேகூட அடிக் கடி டான்ஸ் டீச்சர் வைச்சுச் சொல்லிக் கொடுக்கணும்னு சொல்றா. ஆனால், எனக்கென்னவோ இந்தப் பைத்தியக்காரத் தனமெல்லாம் ஒண்ணும் பிடிக்கிற தில்லை'' என்றார்.

உமாராணி பிற்பாடு வக்கீலிடம் ஒன்றும் பேச்சுக் கொடுக்கவில்லை. மேடை மீதே கவனம் செலுத்தத் தொடங்கினாள். சாரு மேடை மீது இல்லாத சமயங்களில் அவள் எப்போது வருவாள் என்றே அவ ளுடைய மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவள் வந்துவிட்டாலோ, உமாவுக்குப் பர வசமாயிருந்தது. அவளுடைய ஒவ்வொரு சைகையும் பேச்சும் உமாவுக்கு மயிர்க் கூச்சம் உண்டாக்கிற்று.

கச்சேரியில் எட்டாவது அங்கமென்று குறிப்பிட்டிருந்தது ராதா-கிருஷ்ண நடனம். சாரு கிருஷ்ணன் வேஷத்திலும், யமுனா என்னும் பெண் ராதை வேஷத்திலும் வந்து நடனம் செய்தார்கள். அன்றைய கச்சேரியில் சிகரமாக விளங்கிய அம்சம் இதுதான். ராதையாக வந்த குழந்தையும் வெகு அழகாகத்தான் ஆடினாள். ஆனால், உமாவின் கண்களுக்கு மேடையில் குழந்தை சாரு மட்டுந்தான் தெரிந்தாள். மற்றக் குழந்தையை அவளால் கவனிக் கவே முடியவில்லை.....

(தொடரும்)



"ஒரு வாரமா கரண்ட் ஆஃப் ஆகுமான்னு பார்க்கிறேன். ஆக மாட்டேங்குதே?"

"ஏண்டா... மெழுகுவர்த்தி வியாபாரம் ஆரம்பிச்சிருக்கியா?"

"இல்ல. செல்லாத 50 ரூபா ஒண்ணு இருக்கு. அதத் தள்ளி விடலாமேன்னு தான்!"

- பொடுசி.

சிங்கப்பூர் காசு

இள. அழகிரி

"விஜி, இப்ப எப்படி இருக்கு?"

"அப்படியே தான்" வயிற்றைப் பிடித்து அஷ்ட கோணலாய் நிற்கும் விஜியைப் பார்க்க கீதாவுக்குக் கஷ்டமாய் இருந்தது.

முதல் பீரியட் முதல், வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருக்கிறாள். பாவம், டீச்சருக்கு பயந்து வெளியே சொல்லாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள். கீதா தான் தைரியப்படுத்தி, இரண்டாவது பீரியட் டீச்சரிடம் 'ஒரு விரலைக் காட்டி' அவசரமாய் சோடா குடிக்க அழைத்து வந்திருந்தாள்.

ஏழு அல்லது எட்டு வயது தான் அந்தச் சிறுமிகளுக்கு. எவ்வளவு முன் ஜாக்கிரதை? 'பிஸ்மி பிஸ்ட்' குளிர்பானக் கடைக்குள் நுழையப் போனவர்கள், உள்ளிருந்து சத்தமாய் தமிழ் டீச்சரின் குரலைக் கேட்டதும் பசிதவித்துப் பதுங்கிக் கொண்டனர். விஜிக்குக் கொஞ்சம் சந்தேகம்... எம்பிப் பார்த்து தெளிவானதும்தான் ஒளிய வந்தாள்.

"ரெண்டு மூணு டீச்சர்ஸ் இருக்காங்க போல."

ஆண்ட்டியும் அங்கிளும் ஊரில் இருந்து காலையில் வந்ததால் தான் இந்த உபாதை.

ஸ்கூல் பஸ்ஸின் அவசர பாம்... பாயில் இன்பண்டத்தை அள்ளித் திணித்துக் கொண்டு...

'குபுக்' என்று பெருஞ்சத்தமாய் வாந்தி எடுத்தாள்.

எதிரிய நெஞ்சை நீவி... தலையைப் பற்றிக் கொண்டாள் கீதா.

"சோடா குடிச்சதும் சரியாயிடும் விஜி.... கொஞ்சம் பொறுத்துக்க... டீச்சர் போயிடுவாங்க..."

பள்ளிக்கு அருகில் 'பிஸ்மி பிஸ்ட்'டை விட்டால் வேறு கடை இல்லை. புத்தகக் கடையும் டெய்லர் கடையும் தான் இருக்கின்றன. கண்டிப்பு மிகுந்த ஸ்கூல் என்பதால் தான் இத்தனை பயம். மாட்டிக் கொண்டால் முட்டி போட்டுத்தான் அன்று முழுக்க பாடம் கவனிக்க வேண்டும். எவ்வளவு பெரிய அவஸ்தையான தண்டனை. முட்டி பழுத்து வீங்கியும் விடும்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு, அரட்டை அடித்து ஓய்ந்த தமிழ் டீச்சர், ஐந்தாம் வகுப்பு ஆங்கில டீச்சருடன் வெளியே வந்தார். பேச்சு சுவாரசியத்தில் அக்கம் பக்கம் பார்க்காது போனார்.

ஸ்கூல் நுழைவில் டீச்சர் மறைந்ததைப் பார்த்து, நிம்மதியாய்க் கடைக்குள் நுழைந்தனர். அதிகக் கூட்டமில்லை.



கீதா அவசரமாய் ஒரு குண்டு சோடா வாங்கி, பாட்டி கணக்காய் உப்பு போட்டு, கலக்கி, விஜியிடம் நீட்டினாள். வயிற்று வலி தீர்ந்த நிம்மதி.

''சார்..ரோஸ் மில்க் சாப்பிட்டுப் போனாங்களே... அவங்க ரெண்டு பேரும் ஸ்கூல் டீச்சர்ஸ். அவங்க லட்சணத்தைப் பாத்தீங்களா... சிங்கப்பூர் நாணயத்தை ஒரு ரூபாய் நாணயம் மாதிரி கொடுத்துட்டுப் போயிருக்காங்க! பசங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறவங்க, எப்படி ஏமாத்திட்டுப் போயிருக்காங்க பாத்திங்களா?''

கடைக்காரனின் ஏளனப் பேச்சைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

''இதுங்க பாடம் சொல்லி...எதுங்க உருப்படும்...'' பெரியவர் ஒருவர் உதட்டைப் பிதுக்கினார்.

கீதாவுக்கு 'திடுக்' என்றிருந்தது. நம்ம டீச்சரா இப்படி...? கண்டிப்பாய் இருக்காது! மறதியாய், பேச்சு சுவாரசியத்தில் கொடுத்துப் போய் இருக்கிறார்கள். புரிந்து கொள்ளாத இவர்கள்தான்... பழி போட்டுச் சிரிக்கிறார்கள்.

கீதா தன் உள்ளங்கையைப் பார்த்தாள். அதிகப் படியான காசில் ஒரு ரூபாய் நாணயமும் தென்பட்டது. டீச்சரின் 'நாணயத்'தைக் கண்டிப்பாய்க் காப்பாற்றியாக வேண்டும்.

''கடைக்கார ஐயா...எங்க டீச்சர் அந்த செல்லாத சிங்கப்பூர் காசை வாங்கிட்டு வரச் சொன்னாங்க. மறதியா உங்கக் கிட்ட கொடுத்துட்டாங்களாம்...''

நாணயம் மாற்றி, ஏளனப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

சோடா தந்த தெம்பில் விஜி உற்சாகமாய் வந்தாள். வயிற்று வலி நிவாரணம் முகத்தில் பிரதிபலித்தது.

''கீதா..ஏண்டி பொய் சொன்னே?''

''பின்ன என்ன...? நம்பளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற டீச்சரை, கண்டவங்க கண்டபடி... அதுவும் பழி போட்டுப் பேசினா... என்ன அர்த்தம்? தவறுதலா நடந்ததைப் பெரிசு படுத்துறாங்களே... ஏமாற்றணும்னு யாராச்சும் செய்வாங்களா...? அதுவும் நம்ம தமிழ் டீச்சர்! அடுத்தவங்களை ஏமாற்றிப் பிழைக்கக் கூடாது. வாழ்க்கையில நீதி நேர்மையோடு இருக்கணும்னு... அன்னைக்கு ஒரு கிளாஸ்ல சொன்னவங்களாச்சே...''

வரும்போது போலவே, நுழைவு வாயிலில் யாரும் இல்லாதது சந்தோஷம் கொடுத்தது. சத்தமின்றிப் புகுந்து, கழிப்பிடத்தில் இருந்து வருவது போல, பாசாங்கு செய்து உள்ளே போயினர்.

அவர்களின் வகுப்புப் பிரிவு மாடியில் இருக்கிறது. நேரம் ஆனதை உணர்ந்து அவசரமாய் ஏறப் போனவர்கள், ஸ்டாஃப் ரூமில் இருந்து தமிழ் டீச்சரின் சிரிப்புடன் கூடிய பேச்சைக் கேட்டதும் அனிச்சையாய் நின்றனர்.


''டீச்சர்.. அந்த சிங்கப்பூர் காசை ஒரு வாரமா கையில வச்சுக்கிட்டு...யாரு தலையில கட்டலாம்னு காத்துக்கிட்டு இருந்தேன் தெரியுமா! பாவம்... 'மில்கி மிஸ்ட்'காரன் ஏமாந்துட்டான்!''

கோரஸான சிரிப்பு.

கீதாவை வெகுண்டு பார்த்த விஜி ''என்னடீ... இது?'' என்றாள். வயிற்று வலி போய்... மனசு வலிக்க ஆரம்பித்ததை உணர்ந்தாள்.

''ப்ச்...டீச்சர் என்னடீ பண்ணுவாங்க...? அடுத்தவங்களை ஏமாற்றக் கூடாது, வாழ்க்கையில நீதி, நேர்மையோடு இருக்கணும்னு நமக்கு ஞாபகமாய்ப் பாடம் சொல்லிக் கொடுத்த டீச்சருக்கு...பாவம், அவங்க டீச்சர் இது மாதிரி சொல்லித் தர மறந்துட்டாங்க போலிருக்கு!''

அதற்கு மேலும் அங்கே நிற்கப் பிடிக்காமல் அவர்கள் வேகமாகப் படியேறி வகுப்புக்குப் போயினர்!



பாலைவனத்தில் பிளாஸ்டிக் மரங்கள்!

ஸ்பெயின் நாட்டில் பாலைவனங்களில் ஓர் ஆய்வு : ''செயற்கைக் காடுகளை நடவு செய்தால் பத்து ஆண்டுகளில் பாலைவனத்திலும் பயிர் விளைவிக்கலாம்'' என்பது.


ஒருவகை பாலிதீனால் தயாரிக்கப்பட்ட லட்சக்கணக்கான பிளாஸ்டிக் மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. இந்தப் பிளாஸ்டிக் மரங்கள் வெப்பத்தைப் பூமியின் மீது படவொட்டாமல் தடுக்கின்றன. மண் குளிர்ந்தால் மண்ணுக்கு அடியிலுள்ள வேர் குளிரும். வேர் குளிர்ந்தால் வேர் முட்டிகளில் தங்கும் நீர்ச் சத்து சிறிதளவாக இருந்தாலும் மரங்களைப் பட்டுப் போகாமல் காப்பாற்றும். மழைக் காலங்களில் விழுகிற தண்ணீர், வீணாகாமல் தாவரங்களுக்கு முழுமையாகப் போய்ச் சேரும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்தப் பாலிதீன் மரங்களுக்கு நீர்பாய்ச்சத் தேவையில்லை! இதனை வெட்டி விறகுக்கு எடுத்துப் போகவும் முடியாது என்பது வசதி.

என்விரான்மென்டல் தகவலிலிருந்து : அய்க்கே

உங்கள் வரிசேமிப்பு திட்டம் அளிக்கும் நன்மைகள் ஒன்று ? இரண்டா ? மூன்று ?

யூலிப்

அளிக்கும் நன்மைகள் 5 !



யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டம்

ஒன்றுக்கு மேல் அதிக நன்மைகளை அளிக்கும் வரிசேமிப்பு திட்டம் இது.

- வருடாந்திர டிவிடெண்ட் திட்டத்தில் திரும்ப முதலீடு செய்யப்படும். கடந்த வருடத்தில் (அதாவது 1992-93) டிவிடெண்ட் 16.5% வரை அதிகரித்தது.
- முதிர்வு போனஸ் திட்டம் முடிவடையும் போது இலக்கு தொகையில் 10 வருட திட்டத்திற்கு 5% மற்றும் 15 வருட திட்டத்திற்கு 7.5% போனஸ்.
- வரிவிலக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 88ன் கீழ் வரி விலக்கு.
- ஆயுள் இன்சூரன்ஸ் காப்பு மருத்துவ பரிசோதனை இல்லாமலேயே உங்கள் இலக்குத் தொகைக்கு ஈடாக ஆயுள் காப்பு.
- இலவச விபத்துக்காப்பு உங்கள் இலக்குத் தொகை எத்தனையாக இருப்பினும் ரூ.30,000 க்கு இலவச விபத்துக்காப்பு.

10 வருட அல்லது 15 வருட திட்டம் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து; இலக்குத் தொகை ரூ.6,000 லிருந்து ரூ.60,000 வரை முதலீடு செய்யலாம்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கென.

எல்லா செக்யூரிட்டீஸ் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். முதலீடு செய்வதற்கு முன் உங்கள் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.

கிளை அலுவலகங்கள்: • **கோயம்புத்தூர்.** போன்: 210399 • **சென்னை.** போன்: 517101, 517190 • **மதுரை.** போன்: 38186 • **திருச்சி.** போன்: 27060.

Sista's UTI 190.93 TM C

கடவுள் அமைத்து வைத்த மேடை!

தண்ணீர். கொஞ்சம் மரங்கள். கொஞ்சம் பறவைகள். மௌனத்தின் மையப்பகுதி. இது பிச்சாவரம். சிதம்பரத்தின் அழுக்கு, அசுத்தங்களுக்கெல்லாம் ஒரே பிராயச்சித்த




… : கடலியல் வல்லுநர்கள் ஆராய்ச்சி...

ஏரியா. அபாரமான சுற்றுலாத்தலம். எந்தவொரு சினிமாக்காரனும் புறக்கணிக்க முடியாத, காதல் காட்சிகளுக்கென்று கடவுள் அமைத்து வைத்த மேடை.

கடலோர சொர்க்கம். கொஞ்சம் கவித்துவமான மனமும் கவலைகளற்ற வாழ்வும் கிடைக்கப் பெற்றவர்கள் சிவனே என்று இங்கு வந்து செட்டிலாகிவிடலாம்.

வங்கத்தில் சுந்தர வனக்காடுகள் மிகப் பிரசித்தம். முடிவற்றுச் செல்லும் நீர்ப் பரப்பின் நடுவே சடன் பிரேக் போட்டாற்போல் தாவரங்களின் கோலோச்சல். தென்னிந்தியாவில் இத்தகைய ஒரே இடம் பிச்சாவரம்தான் என்பதில் சிதம்பரத்துக்காரர்கள் காலர் தூக்கி விட்டுக் கொள்ளலாம்.



ஐந்து ரூபாய் கொடுத்து படகில் ஏறி உட்கார்ந்தால் மனத்திற்குள் உற்சாக நீர்வீழ்ச்சி. முல்லை மலர் மேலே, மொய்க்கும் வண்டு போலே.



சப்தமற்ற நீர்ப்பரப்பும் சலனமற்ற மரங்களும் நீர்ப் பறவைகளுக்கு வாடகையில்லாத காட்டேஜ்கள்.

தூரிகையைத் தங்கத்தில் தோய்த்து உதறியது போன்ற அந்தி வானம்.

கூட்டம் கூட்டமாகச் சடசடத்து வந்து பாராசூட்களைப் போல் மிதந்து புதர்களுக்குள் அடையும் பறவைக் கூட்டங்கள். கூட்டம் அதிகரிக்க அதிகரிக்க, எழும் விநோத பறவைக் குரல்களின் ஒருங்கிணைப்பு, அமைதியை மெள்ளக் கிழித்து நரம்புகளைச் சுண்டி இழுக்கிறது.

ஐந்து ரூபாய் கொடுத்து (ஐம்பது பைசா கமிஷன் தனி) படகில் ஏறி உட்கார்ந்தால் மனத்திற்குள் உற்சாக நீர்வீழ்ச்சி. முல்லை மலர் மேலே, மொய்க்கும் வண்டு போலே.

இந்த ரகக் காடுகளை செயற்கையாக நிறுவ, நிபுணர்கள் மண்டைப் பிய்த்துக்

கொள்கிறார்களாம். மனித ரேகை படாத இந்த மரப் பிரதேசத்து இலைகளும் நார்களும் பூக்களும் வேர்களும் அபாரமான மருத்துவ குணம் வாய்ந்தவை என்று கடலியல் ஆய்வாளர் புருஷோத்தமன் கூறுகிறார். எய்ட்ஸுக்குக் கூட இத்தாவரங்களிலிருந்து மருந்து எடுக்க முடியுமென்று சத்தியம் பண்ணுகிறார். ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அதெல்லாம் நமக்கு வேண்டாம். அந்த எழில்...!

பகல் பொழுதில் இங்கே நீர் மட்டம் சற்றுக் குறைவாக இருக்குமென்றும், இரவுகளில் ஸ்டீம் போட் போகும் அளவுக்குத் தண்ணீர் இருக்கும் என்றும் நமக்குப் படகோட்டிய மாணிக்கராஜ் சொன்னார். பௌர்ணமி போன்ற கடலில் அலைமிகும் காலங்களில் பிச்சாவரம் நீர்ப்பரப்பில் அமோகத் தண்ணீர்.

சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள் தான். ஆனால் இந்த இடத்தின் அழகுக்கு எண்ணிக்கை மிக சொற்பம். பைனாகுலர் சகிதம் அரை டிராயர் போட்ட ஆங்கிலேயர்கள் ஆங்காங்கே 'வாவ்', 'பியூட்டிபுல்' என்றெல்லாம் சிலாகிப்பதைக் காண முடிகிறது. சுற்றுலாத் துறையின் உபயத்தில் தங்கும் விடுதிகளும் தந்தூரி சமாசாரங்களும் கிடைக்கின்றன. எல்லாவற்றிற்கும் முன்னதாகச் சொல்லி வைக்க வேண்டும்.

இன்னும் ஒரு சிறப்பு - இங்கே, நீர்ப்பரப்பில் மிதந்து போனால் எம்.ஜி.ஆர். திட்டு என்றொரு இடம். எம்.ஜி.ஆர். வந்திருக்கிறார். இதயக் கனி ஷூட்டிங் எடுத்திருக்கிறார். ஆகவே அப்பெயர்!

இயற்கையாகவே அழகு பூமிதான் என்றாலும் இந்தப் பகுதியைச் சுற்றுலா வளர்ச்சித் துறை முற்றிலும் வியாபாரக் கேந்திரமாக்காததற்குக் காரணம் உண்டு. அதிக நடமாட்டம் இருந்தால் இயற்கைச் சமநிலை பாதிக்கப்பட்டு சுரபுன்னைக் காடுகளுக்கு அபாயம் வரக்கூடுமாம்.

-பா.ராகவன்

வாசகர் தகவல்: சுப.வே.தமிழ்மணி
பா.மீனாட்சி, வி.முரளிதரன்

சிதம்பரம் தொடர்பான வண்ணப் படங்களும் இதர படங்களும்:
கோபிநாத்

அன்னையர் தேவை

கோவையில், தனியார் அறக்கட்டளை ஒன்றில், ஆதரவற்ற அல்லது தனித்து விடப்பட்ட குழந்தைகளுக்கு அன்னையர் தேவைப்படுகின்றனர்.

குழந்தைகளை அன்புடன் நேசித்து, அவர்களுடனே சேர்ந்து வாழ்ந்து, ஒவ்வொரு தாயும் தன் மக்களுக்குச் செய்யும் பணிவிடைகளைச் செய்து, அவர்களைப் பாசத்துடன் வளர்க்க விருப்பம் உள்ள பெண்களுக்கு, முக்கியமாக, தனிமையில் வாழ்ந்து வருவோர்க்கு, இது மிகவும் உகந்த பணியும், பாதுகாப்பான இடமும் ஆகும்.

28 முதல் 35 வயது வரை உள்ள எட்டாம் வகுப்புக்குமேல் படித்த, தனக்கென்று குழந்தைகள் ஏதும் இல்லாத பெண்களிடம் (விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர், மற்றும் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லாதவர்கள் ஆகியோர்) இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை முழு விவரங்களுடன் பத்து நாட்களுக்குள் அனுப்பவும்.

முகவரி :

எம். இ. சி. ட்ரஸ்ட்,

தபால் பை எண் : 6,
மதுக்கரை அஞ்சல்,
கோவை - 641 105.

முதுகு



உஷா தீபன்

"சே! பெரிய தொந்தரவாப் போச்சு...!" சற்று சத்தமாகவே சலித்துக் கொண்டேன்.

முன் இருக்கையில் இருந்த இருவரும், எதையும் சட்டை செய்வதாக இல்லை. தலையைச் சாய்த்துச் சாய்த்து அவர்கள் இஷ்டத்துக்குப் பேசிக் கொண்டே படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கோ தாங்க முடியாத கோபம். எரிச்சல். எத்தனை தரம்தான் எம்பி,எம்பிப் போய் சொல்வது? ஒருமுறை சொன்னால் தெரியாதா? புரியாதா?

இடைவேளை தாண்டியாயிற்று. இன்னும் இவர்கள் தொல்லை ஓய்ந்த பாடில்லை. இதுவரை என்ன படம் பார்த்தோம் என்றே தெரியவில்லை. திரையின் முக்கால் பகுதியையும் இவர்கள் இருவரின் தலைகள் மறைத்ததுதான் மிச்சம். இரண்டு பெரிய ஆகிருதிகள்.

மனைவி, குழந்தைகள் ஊரில் இல்லாத சமயம். அபூர்வமாய் சினிமாவுக்கு வரப் போக, அதுவும் இப்படியா அமைய வேண்டும்?

பேசாமல் வீட்டில் ரெஸ்ட் எடுத்திருக்கலாம். ஏதாவது புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்திருக்கலாம்.

இருக்கும் புழுக்கமும் வெக்கையும் வேறு எரிச்சலை ஏற்படுத்தியது. அதையெல்லாம் மீறி, படமாவது பார்க்கலாமென்றால் இப்படியா இடைஞ்சல்?

ஆசைப்பட்டு சினிமாவுக்கு வந்தது தப்பு. இந்த இடத்தில் உட்கார்ந்தது அதை விடத் தப்பு. திரை மறைப்பது தெரிந்தும் உடனே எழுந்து இடம் மாறாமல் விட்டது அதை விடப் பெரிய தப்பு.

இப்படி மூளையில்லாத ஆசாமிகளோடெல்லாம் சண்டைக்கு நின்று குஸ்தியா போட முடியும்?

என்னையே நொந்துகொண்டேன் நான்.

இரண்டுபேரும் சேர்ந்து முழுப் படத்தையும் பார்க்கவிடாமல் பண்ணிவிட்டார்களே? என்ன அநியாயம்?

கிளைமாக்ஸ் காட்சியில் சண்டை தூள் பறந்தது. பறந்து அடிக்கும்போது- அது மட்டும் தெரிந்தது எனக்கு.

கடைசியில் போலீஸ் வந்து 'வேண்டாதவர்களையெல்லாம்' அள்ளிப் போட்டுக் கொண்டு போக, "அப்பாடா!" என்றவாறே எழுந்தேன் நான்.

"சிவனேன்னு ஒரு தூக்கம் போட்டிருக்கலாம்!"- கூட்டம் கலைந்த போது, வாய்விட்டுச் சத்தமாகச் சொல்லிக் கொண்டே நடந்தேன்.

"தலையைப் பாருங்க...: கூடையைக் கவுத்தின மாதிரி! ரொம்ப மறைச்சிட்டாருங்க இவுரு... படமே பார்க்க விடலே!"

நெருக்கமாய்க் குரல் கேட்டு, கை என்னையறியாமல் என் தலையைத் தடவ திரும்பிப் பார்த்தேன்.

எனக்கு நேர் பின்னே உட்கார்ந்திருந்தவர்கள் அவர்கள்!



8

அள்ளி கைப்பள்ளத்தில் தேக்கிய நீர்
நதிக்கு அந்நியமாச்சு.
இது நிச்சலனம்
ஆகாயம் அலை புரளும் அதில்.
கை நீரைக் கவிழ்த்தேன்.
போகும் நதியில் எது என் நீர்?

– சுகுமாரன்.

அப்பாவுக்கு எப்படி ட்ரங்க்கால் போட்டுப் பேசுவது என்று தெரியவில்லை. ஆப்பரேட்டரைக் கேட்டதில் முதலில் ஒன்பது டயல் செய்து ஏரியாகோடு அப்புறம் நம்பர்கோடு இரண்டையும் ஒத்து மாறு சொன்னாள். எனக்குக் குழப்பமாக இருந்தது. அப்பாவுடன் பேசினால் என்ன கேட்பது என்பதே தெரியாத நிலையில் என்னவோ சுழற்றிப் பார்த்தேன். உடனே அடித்தது. ஆச்சரியமாக இருந்தது. வைத்து விடலாமா என்று கூடத் தோன்றியது.

''ஹலோ மே ஐ ஸ்பீக் டு மிஸ்டர் நாராயணமூர்த்தி?''

''பேசறேன்.''

''அப்பா ரேகா பேசறேன்!''

''ரேகா! எங்கிருந்து பேசறே?''

''ஊட்டி.''

''வெரிகுட். நல்ல குளிரா இருக்குமே! ஸ்வெட்டர் கொண்டு போயிருக்கிறாயா?



மெட்ராஸ் போயிருக்கறதான்னா சொன்னார் சம்பந்தி?''

''மெட்ராஸ்ல ஒருநாள்தான்பா இருந்தோம். அம்மா எப்படி இருக்கா? மகாராணி எப்படி இருக்கா?''

''எல்லாரும் சௌக்கியம். யு மஸ்ட் பி இன் ஸெவன்த் ஹெவன். ஏழாவது சொர்க்கமா?''

''இல்லைப்பா! அஞ்சாவது.''

''ஏன்?''

''கொஞ்சம் கொஞ்சம் போர் அடிக்கிறது.''

''ஹனிமூன்லயா? யு மஸ்ட் பி ஜோக்கிங்!''

''அப்பா, உங்கிட்ட ஒண்ணு கேக்கணும்பா!''

''இரு. அம்மாவோட பேசு.''

அம்மா போனைப் பிடுங்கிக் கொண்டு, ''ரேகா எப்படி இருக்கே? சளிகிளி புடிக்கலையே? போறபோதே தலைவலின்னியே, டைகர்பாம் தடவிண்டியா? மாப்பிள்ளை அன்பா இருக்காரா?''

''இருக்கார்ம்மா.''

''ஏதாவது வாங்கித் தந்தாரா? நிறைய சுத்தி பார்த்தீங்களா?''

''பார்த்தோம்மா. நிறைய குதிரை பார்த்தேன்!''



''குதிரையா?''

''அப்பா கிட்ட கொடேன்.''

''ஏண்டி கட் பண்றே? அப்புறம் ரேகா, உனக்கு நீலக்கல் செட் ஒண்ணு வாங்கியிருந்ததே, அதை போறப்ப உங்கிட்ட கொடுத்தேனோல்லியோ? உன் பெட்டில தானே இருக்கு?''

''இருக்கணும்மா. பார்த்த ஞாபகமா இருக்கு.''

''பாத்து சொல்லிடேன். ஏன்னா அது இங்க இல்லை. கல்யாண சந்தடியில காணாமல் போய்டுத்தோன்னு...''

''நீதானேம்மா கடைசி நிமிஷத்தில எடுத்து வெச்சே!''

''இருக்கா, இல்லையா?''

''எல்லாம் இருக்கு! இப்ப இல்லைன்னா கூட ஒண்ணும் பண்ண முடியாது. அப்பா கிட்ட கொடு.''

இதற்குள் ஜெயந்தி பிடுங்கிக் கொண்டு, ''ரேகா நீ வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுக்காம ஓடிப் போய்ட்ட பார்த்தியா?'' என்றாள்.

சுஜாதா

எனக்கு குபுக்கென்று கண்ணில் நீர் வடிந்தது. முதல் தடவையாக அவளைப் பிரிந்திருக்கிறேன். அவள் பிறந்த கணத்திலிருந்து, முதல் அழுகையிலிருந்து அவளைத் தெரியும்!

''எப்ப வருவே அக்கா?''

''வருவேன் வருவேன். நிறைய இடம் சுத்திப் பார்த்துட்டு, வந்துருவேன் கண்ணு. விரல் போட்டுக்கறியா இன்னும்?''

''அதுபாட்டுக்கு அது. எதுக்குப் போய் கல்யாணம் பண்ணின்டே?''

''எனக்குக் கூட அப்படித்தான் தோணறது கண்ணு. அப்பா கிட்ட கொடு.''

''அப்பா உன்னோடதான் பேசணுமாம்'' என்றாள்.

அப்பா ''என்ன ரேகா?''

''இவர் எப்பப் பார்த்தாலும் சீட்டாடறார்ப்பா!''

''ஆடிட்டுப் போறார். ஏதோ போது போறதுக்கு ஆடுவாரா இருக்கும்! நீயும் ஆடிடேன், உனக்குத்தான் கழுதை, இருபத்தெட்டு எல்லாம் ஆடத் தெரியுமே?''

''இல்லைப்பா காகவெச்ச க்ளப்ல போய் ஆடறார்.''

''காக வெச்சா? எங்கே அவரைக் கூப்பிடு?''

''இப்ப கூட ஆடத்தான் போயிருக்

கார்.''

''வந்ததும் எனக்கு போன் பண்ணச் சொல்லு! கவலைப்படாதே! அதையெல்லாம் வழிக்குக் கொண்டு வந்துடலாம்! அவர் வந்தா இது எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லிடு. அப்புறம் அவரைக் கேக்கணும்! என்ன பேங்க்ல வேலையா இருக்கார்னு கேட்டுவை. பஞ்சாப் நேஷனல் பாங்கில கேட்ட போது அர்ஜுன்னு யாரும் இல்லைன்னு சொன்னா.''

''என்னையும் காகக்கு ஆடச் சொல்றார்ப்பா.''

''கவலைப்படாதே! மாப்பிள்ளை கூட பேசிடு. இதெல்லாம் நமக்கு உதவாதுன்னுட்டு.''

''நீயே பேசு'' என்றேன். அர்ஜுன் உள்ளே வந்துவிட்டார். ''அப்பா பேசணுமாம்'' என்று அவர் கையில் போனைக் கொடுத்தேன். 'யாருடைய அப்பா?' என்று சைகையில் கேட்டார்.

''எங்கப்பா.''

உடனே புன்னகைத்து, ''நமஸ்காரம் ஸார், எப்படி இருக்கீங்க? நான் புறப்படறப்ப இடுப்பில வலின்னு சொல்லிண்டிருந்தீங்க. சரியா போச்சா?'' பலமாகச் சிரித்து ''ஸேஷனுக்கு அப்படித்தான் இருக்கும். இங்க எக்ஸலண்ட் வெதர். இப்ப... கம்மா லாபி வரைக்கும் போயிருந்தேன்... பீட்டா? நானா? ஓ. அதுவா? அது எப்பவாது. உங்க டாட்டர்.... ரூம்ல ரிலாக்ஸ் பண்ணிண்டிருந்த போது பக்கத்ல ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் க்ளப் மாதிரி... சேச்சே அப்படியெல்லாம் ஹை ஸ்டேக்ஸ் இல்லை! நாட் அட் ஆல்... நெவர்! சரிதான். உங்ககிட்ட சொல்ல தயக்கமே இல்லை. வேண்டியதில்லை. அஃப்கோர்ஸ் நாட்.. சேச்சே...பாங்கா? பாங்க்னா சொன்னேன்?... இல்லை, ஒரு ப்ரைவேட் போர்ட்ஃபோலியோ மேனேஜ்மெண்ட் கம்பெனில பார்ட்னரா ஸார்... அப்படியா? அப்படி யார் சொன்னது? இன்விட்டேஷன்ல ஃபினான்ஸியர்னுதான போட்டிருந்தோம் ஓ... அப்படியா, மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் ஆயிடுத்து... கம்யூனிக்கேஷன் கேப். ஸார் நீங்க கவலையே படாதீங்க! நான் உங்க பெண்ணை - என்ன சொல்வாங்க, கண்ணும் கருத்துமா பார்த்துக்கறேன். ரேகா அப்பா கிட்ட பேசு'' என்று என்னைச் கடுவதுபோல் பண்ணிவிட்டு கொடுத்த போனை எடுத்த போது, ''ரேகா மாப்பிள்ளைட்ட எல்லாம் பேசிட்டேன்மா! எவ்ரிதிங் இஸ் செட்டில்டு. ஹொரிஃபை ஆய்டுத்து. நான்தான் பாங்க்ல உத்யோகம்னு மிஸ்டேக் பண்ணிண்டுட்டேன். ஃபினான்ஸ் கம்பெனியாம். சீட்டாட்டமெல்லாம் அவர்கிட்ட பழக்கமில்லையாம். உடனே நிறுத்தறேன்னுட்டார். ரொம்ப பெரிசு பண்ணாதே! ஏதாவது ப்ராப்ளம்னா எனக்கு உடனே போன் பண்ணிடு! எவ்ரி திங் காண்பி லெட் ரைட். தீர்த்து வெக்க முடியாத பிரச்னையே கிடையாது.''

அப்பாவுடன் பேசியதும் அவர் என்னை ஒரு மாதிரி முறைத்துப்பார்த்துக் கொண்டு, ''இதெல்லாம் போய் டில்லிக்கு போன் பண்ணிச் சொல்லணுமா ரேகா? உங்கப்பா என்னைப்பத்தி என்ன நினைப்பார்? நான் பூரா சூதாடறவன்னுதானே? எதுக்கு இதைப் போய் பெரிசு பண்றே? நான் என்ன இருபத்து நாலு மணி நேரமும் சீட்டாடினேனா? உன்னை எல்லா இடத்துக்கும் அழைத்துச் செல்லவில்லையா? புடவை வாங்கிக் கொடுக்கவில்லையா? நகை வாங்கிக் கொடுக்கவில்லையா? சினிமா போகலையா? பேல்பூரி சோளக் கொண்டையெல்லாம் சாப்பிடலையா? போட்ல போகலையா? அதையெல்லாம் உங்கப்பா கிட்ட சொல்லேன்! அந்த மனுஷன் என்னைப் பத்தி என்ன நினைச்சுப்பார்! ச்சே....''

''ஸாரி'' என்றேன். வேறு என்ன சொல்வேன்? அவர் அழைத்துச் சென்றதெல்லாம், சொன்னதெல்லாம் நிஜம்தான்! சினிமா தான், புடவைதான். ஆனால் -

''நாம் மண வாழ்க்கையினுடைய ஆரம்பத்தில இருக்கிறதால இருவரும் ஒருத்தரை ஒருத்தர் சரியா புரிஞ்சுக்கறது நல்லது. நம்ம கிட்ட என்ன ப்ராப்ளம் இருந்தாலும் அதை நாமே தீர்த்து வெக்கறதுதான் நல்லது. இட்ஸ் அவர் ப்ராப்ளம். அதில் உங்க பெற்றோரையோ, என் பெற்றோரையோ

வாய்ப்பு வந்து தட்டவில்லையே என்று வருத்தப்பட்டு லாபமில்லை! காரணம் நீங்கள் இன்னும் கதவையே அமைக்கவில்லை!
- மில்டன் பெர்லே/அங்கே.



"ஹலோ! போலீஸ் ஸ்டேஷனா? இன்ஸ்பெக்டர் இருக்காரா?"

"இல்லீங்க! நான் பக்கிரி பேசறேன். இங்கே லாக்கப்லே இருந்த என்னை ஸ்டேஷனைப் பார்த்துக்கச் சொல்லிட்டு இன்ஸ்பெக்டர், போலீஸ்காரங்க எல்லாம் சி.எம். பந்தோபஸ்துக்குப் போயிருக் காங்க!

– சரவணன்.



இருக்க வேண்டாம். அண்டர்ஸ்டாண்ட்? இஸ்தட் க்ளியர்?"

நான் அவர் கண்ணைப் பார்த்து அதைப் பிடிக்க முயற்சி செய்து, முயற்சி செய்து தோற்றேன். நேராகப் பார்க்கத் தயங்கினார். ஆனால் கோபம் கன்னத்தில் ரத்தச் சிவப் பாகத் தெரிந்தது.

"நான் சாதாரணமாத்தான் எங்கப் பாகிட்ட சொன்னேன்."

"அவர் என்னடான்னா கோர்ட் மாதிரி க்ராஸ் எக்ஸாமின் பண்ணுகிறார்."

"சேச்சே! அப்படியா பேசினார்?"

"அப்படித்தான்! நான் என்னவோ உங் களை எல்லாம் ஏமாற்றி விட்டமாதிரி! ஊருக்குப் போனதும் முதல் காரியமாக நான் என்ன வேலை பார்க்கிறேன், என்ன சம்பளம், வருஷாந்திர போனஸ் எவ்வளவு எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன். உங்கப்பாவுக்கு எழுதிவிடு! இல்லை, போன் பண்ணிச் சொல்லிவிடு."

"சரி," என்றேன்.

எனக்கு என்னவோ மன்னிப்பு கேட் கிற அளவுக்கு நான் செய்தது அத்தனை தீவிரமான காரியமாகத் தோன்றவில்லை. அவர் தன் சட்டையைக் கழற்றிவிட்டு வாட்சை கழற்றிவிட்டு, பாத்ரூம் போனார். படுக்கையில் கிடந்த சட்டையில் ரூபாய் நோட்டுக்கள் தெரிந்தன. பிளாஸ்டிக்கில் பச்சை சிவப்பாக வட்டங்கள் இருந்தன. அதை எடுத்துப் பார்த்ததில் -

அவர் திரும்பி வந்து, "என்ன தோண்டற?"

"இது என்ன?"

"டோக்கன். இன்னம் மாத்திக்கலை!"

"இன்னும் விளையாடப் போறிங் களா?"

"சேச்சே! நீ உடனே டில்லிக்கு போன் பண்ணி புகார் கொடுக்க மாட்டேன்னு என்ன நிச்சயம்?"

"ஒருதடவை சொன்னாப் போதும்" என்றேன். நான் அந்தப் பக்கம் திரும்பி படுத்துக் கொள்ள, என்னை இரண்டு மூனு தடவை புரட்டிப் பார்த்தார். நான் திரும்ப வில்லை.

"உனக்கு பிடிவாதம்னா எனக்கும் பிடி வாதம். வராட்டிப் போ" என்றார்.

சற்று நேரம் கழித்து இருவரும் ஒரே சமயத்தில் திரும்பிக் கொண்டோம்...

காலை எழுந்தபோது அவர் குளித்து ஸ்வெட்டர் போட்டுக் கொண்டு டூரிஸ்ட் தனமாக காமிரா சகிதம் காத்திருந்தார். காலை உணவு ரூமிலேயே ஆர்டர் செய்து சாப்பிட்டோம். அவர் வாங்கிக் கொடுத்த கருநீலச் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டேன். அதற்குப் பொருத்தமான மெலிய நீலத்தில் சோளி இருந்தது. உற்சாக மாக இருந்தது. வளையலும் நீல நிறத்தில் கிடைத்தது. என்னைப் பார்த்ததும், "ப்ளூ ஏஞ்செல்" என்று சொல்லி முத்தமிட்டார். மெல்ல ஏரிக்கரையில் நடக்கும் போது கேட்டார், "எப்படி உங்கப்பாவுக்கு நான் பாங்கில வேலை பார்க்கிறேன்னு ஐடியா வந்தது?"

"அப்படித்தான் எல்லாரும் நினைத்துக் கொண்டிருந்தோம். நீங்க கூட ஏதோ ட்ரெய்னிங் போய்விட்டு திரும்பி வருவ தாகச் சொன்னீர்களே?"

அது ஒரு ஆன்ட்ரெப்ரினர்ஷிப் ட்ரெய்னிங். பாரு, நான் நடத்தறது ஒரு பார்ட்டனர்ஷிப் கம்பெனி. போர்ட் ஃபோ லியோ மேனேஜ்மெண்ட்."

"அப்படின்னா?"

"ஷேர் வாங்குவோம். விற்போம். வித்துக் கொடுப்போம். ஷேர்னா என்ன தெரியுமா?"

"பங்குன்னு சாதாரண அர்த்தம்தான் தெரியும்!"

"உனக்கு எல்லாம் சொல்லித் தரேன்! நாம அடைய வேண்டிய லட்சியம் இருக்கு பாரு, அதுக்கு நீ ஷேர் மார்க்கெட் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொண்டே ஆகணும்! அதுதான் என் ஜீவன்" என்றார்.


நான் கலவரத்துடன், "எனக்கு அதெல் லாம் வராது!"

"அப்படி சொல்லிட்டா எப்படி? நீ என் பார்ட்னர். என் லைஃப்ல இருக்கிற சகல மானதும் நீ தெரிந்து கொண்டே ஆகணும்! நமக்குள்ளே ஒளிவு மறைவே இருக்கக் கூடாது! நான் உனக்கு கிதாஞ்சலியைப் பற்றிச் சொல்லியே ஆகணும்!" என்றார்.

நான் ஏன் அதிர்ச்சி அடையவில்லை?

(தொடரும்)

ஓம் என்று சொல்லுவோம்!



நாரைக்கு இரங்கிய சிவனார்; நம்பிக்கு அருளிய பிள்ளையார்!

நாராயண முனிவர் மோனத் தவத்தில் இருந்தார். ஆகாய மார்க்கமாக கந்தர்வர்கள் பறந்து சென்றார்கள். அவர்கள் உல்லாசமாகப் பழங்களைச் சாப்பிட்டுவிட்டுக் கொட்டைகளைக் கீழே தூவ, நாராயண முனிவரின் தவம் கலைந்தது. கண்திறந்த முனிவர் எதிர்ப்பட்ட கந்தர்வனைச் சபித்தார்: 'பழக் கொட்டையைப் பறவை போல் உதிர்த்த நீ நாரையாய்ப் போகக் கடவது!'

முனிவரின் சாபம் பலித்துவிட்டது. நாரை தன் பாவத்துக்கு விமோசனம் வேண்ட, முனிவரே வழி சொன்னார்: ''இங்கே இருக்கும் சிவலிங்கத்துக்குத் தினமும் கங்கை நீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்தால் உனக்கு விமோசனம் கிடைக்கும்.''

நாரையும் அப்படியே செய்து வந்தது. ஒரு புயல் நாளில் கங்கை நீர் முகர்ந்து வரப் பறந்து சென்ற நாரை, காற்றில் இறக்கைகள் பிய்க்கப்பட்டு சுருண்டு விழுந்தது. அப்படியும் உருண்டு போயேனும் கங்கை நீரைக் கொண்டு வருவதென முயற்சி செய்ய, அசரீரி ஒன்று ஒலித்தது: 'அருகே உள்ள திருக்குளத்து நீரை எடுத்து அபிஷேகம் செய்' என்ற அந்த வாக்கின்படியே நாரை செயல்பட, சாப விமோசனம் அடைந்தது.

நாரை பூஜை செய்த ஊர் திருநாரையூர். அது சிறகிழந்து விழுந்த இடம் சிறகிழந்தநல்லூர். சிதம்பரம் - காட்டுமன்னார்குடி பாதையில் சிதம்பரத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திருநாரையூர். அங்கே புராதனமான சிவன் கோயில் கோபுரத்தில் சிவலிங்கத்தைப் பூஜிக்கும் நாரை சிற்பம். சற்றே தொலைவில் கங்கை நீருக்குப் பதிலாய் நாரை கடைசி தினத்தில் நீர் முகர்ந்த குளம்.



★ பிரதான கோயில் கோபுரமும் திரிபுரசுந்தரி அம்மன் சந்நிதியும்...

கமலமனராஜன்



✱ பூஜித்த நாளை, பூஜிக்கப்பட்ட சிவன், பார்வதி, உற்சவ அம்பிகை, ராஜ ராஜ சோழன், பொல்லாப் பிள்ளையார்.

அமைதியும் அழகும் சான்னித்யமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற இத்தத் திருத்தலத்திற்கு நாம் சென்ற தினத்தில் பொல்லாப் பிள்ளையாருக்கு லட்சார்ச்சனை ஆரம்பமாகியிருந்தது. 'சுயம் பிரகாசர்' என்ற திருப்பெயரும் உடைய பெருமை வாய்ந்த இத்தலத்துக்குச் சரித்திர மாண்பையும் வழங்கியுள்ளார். எப்படி...? இன்னுமொரு கதை சொல்ல வேண்டும் :

தஞ்சைப் பெருமன்னன் ராஜராஜசோழனின் காலம் அது. திருநாரையூரில், சிற்பிகள் செதுக்காது சுயம்புவாகத் தோன்றியிருந்த பொல்லாப் பிள்ளையாரை (பொல்லா - கல்லைப் பொளியாமல் தோன்றிய) ஆதி சைவ மரபைச் சேர்ந்த குடும்பத்தினர் பூஜித்து வந்தனர். தந்தை தினந்தோறும் நைவேத்தியத்தைக் கோயிலில் விநியோகித்தே திரும்புவார். பிரசாதம் கேட்கும் மகன் நம்பியிடம் 'பிள்ளையார் சாப்பிட்டுவிட்டார்' எனப் பதில் சொல்வார். ஒரு முறை தந்தை வெளியூர் போக, சிறுவன், அம்மா கொடுத்த நைவேத்தியத்தைப் பிள்ளையார் முன் வைத்தான். சாப்பிட வேண்டினான்; மன்றாடினான். கல் கரைய வில்லை. தான் ஏதோ தவறு செய்துவிட்டதால்தான் கடவுள் உணவை மறுக்கிறார் என்று எண்ணி வேதனையுடன் தலையைக் கல்லில் முட்டி மோதி அழுதான். கல், உயிர் பெற்றது. விநாயகர் துதிக்கையை வலப்புறமாய் நீட்டி உணவைச் சாப்பிட்டார். மகிழ்ச்சியுடன் விஷயத்தை அம்மாவிடம் சொன்னான் சிறுவன். எப்படி நம்புவான் அவன்? மறுநாள் தந்தை மறைந்திருந்து பார்க்க, மீண்டும் அதே நாடகம் அரங்கேறியது! தெய்வீகக் குழந்தை நம்பி என்பது ஊரெல்லாம் பரவியது.

ராஜ ராஜ சோழனின் காதுகளுக்கு இக்கதை எட்டியது. சைவத் திருமுறைகளின் இருப்பிடம் தேடி அவற்றைத் தொகுக்கும் மாபெரும் பணியை முடித்துவிட வேண்டும் என்ற அவனது நெடுநாளைய ஆசைக்குப் பொல்லாப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வந்தான். ராஜ ராஜனின் காணிக்கைகளையும் நைவேத்யங்களையும் நம்பியின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்து ஏற்றார் பொல்லாப் பிள்ளையார்.

'திருமுறை இருக்கும் இடம் காட்டி அருள வேண்டும்' என்று ராஜராஜனும் நம்பியும் வேண்ட,

✱ நம்பியாண்டார் நம்பி





மாசி மக உற்சவத்தில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள்

மாசு அகற்றும் மாசி மகம்!

மாசி மாதமும், பௌர்ணமியும், மக நட்சத்திரமும் கூடி வருகிற நாள் எல்லாக் கோயில்களிலுமே 'மாசி மகம்' என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பத்து நாட்கள் திருவிழா. நிறைவாக தீராடல் சிறப்பு உண்டு. தீர்த்தவாரி என்பார்கள். பெருமாள் கோயில்களிலும் இப்படியே தீராடல் திருவிழா நடக்கிறது. கடலோரத் தலங்களில் சமுத்திர ஸ்நானம் செய்வார் இறைவன். அல்லாத பட்சம் கரையொட்டி இருக்கிற ஆறு அல்லது வேறு நீர் நிலை. அந்நேரத்தில் நாமும் பக்தி உணர்வுடன் ஸ்நானம் செய்து நமது மன மாசுகளைப் போக்கிக் கொள்ளலாம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிற மாசி மகம் தனிச் சிறப்பு வாய்ந்த ஒன்றாக - மகாமகமாக - கும்பகோணத்தில் பெருமை சேர்க்கிறது. குரு பகவான் சிம்ம ராசியில் அடியெடுத்து வைக்கும் நாளாக மகாமகம் கருதப்படுகிறது. வடக்கே கும்பமேளா! தவிர, பிரயாகை, ஹரித்வார், உஜ்ஜயினி, நாசிக் - இங்கெல்லாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று மாறி மாறி நீராடல் பெருவிழா உண்டு. 'மகாமேளா' என்று வழங்கப்படுகிறது இந்த நீராடல் திருவிழா. நான்கு இடங்களிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று வந்துவிடுகிறது. "கங்கா மாதாகி ஜேய்..." என்று அவர்கள் எழுப்புகிற கலப்படமற்ற பக்தி கோஷக் குரலில், எல்லோருக்குமே புதுத் தெம்பு வந்துவிடும்!

- பாலன்

படம் : எம். ஏ. எஸ்.

தில்லை நடராஜர் ஆலயத்தின் தென் மேற்கு மண்டபத்தில் சுவடிகள் கிடைக்கும் என தெய்வவாக்கு ஒலித்தது.

ராஜராஜன், தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று திருமுறை தொகுக்க அனுமதி கேட்டான். அவர்கள் சொல்படி சைவ மூவர் சிலைகளை வடித்து வைத்துப் பூஜித்து அவற்றின் முன்னிலையில் திருமுறைச் சுவடிகளை அகழ்ந்தெடுத்தான். திருநாரையூர் நம்பியைக் கொண்டு அவற்றைப் பதினோரு திருமுறைகளாய்த் தொகுக்கச் செய்தான். உமைபேதி என்ற ஊமைப் பெண் அக்காலத்து வழக்குப் படி பிற்பட்ட வகுப்பினள். இப்பெண் இறையருளால் வாக்கு வலிமை பெற்றுத் திருமுறைகளுக்குப் பண் அமைத்து, ராஜராஜனின் அவைப் பாடகியானாள்.

இக்கதைக்குச் சாட்சியாகப் பொல்லாப் பிள்ளையார் வலப்புறம் வளைந்த துதிக்கையுடன் திருநாரையூரில் காட்சி தருகிறார். அவர் கர்ப்பக் கிரஹ வாசலில் அடக்க ஒடுக்கமாய் அரசர்க்கு அரசன் ராஜராஜன் வணங்கி நிற்கிறான். அவன் அருகே அபிஷேகக் கலசம் ஏந்தி நம்பியாண்டார் நம்பி.

பார்க்கப் பார்க்க பக்தியுடன் பிரமிப்பும் போட்டி போடுகிறது. கம்பீரமான மணியோசை கேட்க, பொல்லாப் பிள்ளையாருக்குத் தீப ஆராதனை நடக்கிறது. எந்தெந்த காரியத்துக்கும் மூல முதல்வனாகிய விநாயகர் தமிழுக்கும் சைவத்துக்கும் அருங்கொடை அளித்ததோடு, தன் தந்தையின் புகழ் பரவச் செய்த திருப்தியும் கொண்டு நமக்கு ஆசிகளை அள்ளித் தருவதாகவே தோன்றுகிறது.

ஓம்கார வடிவமாக அமைந்த கோயிலின் வெளிச் சுற்றில் துர்க்கை, சுப்ரமண்யசுவாமி, கஜலக்ஷ்மி சந்நிதிகள் மற்றும் நவக்கிரஹங்கள். துப்புரவான மடப்பள்ளி, சுற்றுச் சுவர் தாண்டி வந்தால் திரிபுர சுந்தரி அம்மனுக்குத் தனி சந்நிதி. வெளியே சற்று ஒதுங்கி நம்பியாண்டார் நம்பி குடியிருந்த இடம். அங்கே சிறிய மண்டபத்தில் சிலை வடிவில் அவர்.

சந்தேகங்களும், பயமும், அவநம்பிக்கையும் அன்றாடம் நம்மை அழுத்தும் நவநாகரிக வாழ்க்கையில், திருநாரையூர் போன்ற இடங்களுக்குச் சென்று வருவது புத்துணர்வு தரும். ஆலயத்தை விட்டு வெளியேறும்போது கிரீச்சிடும் புன்னை மரத்துப் பச்சைக் கிளிகள் நம் சிந்தனையை எதிரொலிப்பதாகப் படுகிறது. சாலை மருங்கில், தடாகத்து நாரைகள் சடசடத்துப் பறக்கும்போது நாரை பூஜித்த சிவனை எண்ணி, கரத்துடன் மனமும் குவிகிறது!



டாக்டர் முத்துகுமார்



பயிலும் குழந்தைகள்...

முகிலனைப் போல

நடராஜர் ஆலயத்தில் நாட்டியாஞ்சலி விழா. பல பெரும் கலைஞர்கள் ஆடுகிறார்கள். ஏராள மக்கள். அத்தனை பேர் கவனமும் அடுத்து ஆடப் போகிற சிறுவன் மேல். அவன் ஆரம்பிக்கிறான். ஒவ்வொரு அசைவுக்கும் கைதட்டல். ஒவ்வொரு அபிநயத்துக்கும் பாராட்டு. ஆனால் அவன் முகத்தில் சலனம் இல்லை. கைத்தட்டலோ, பாராட்டு உரைகளோ அவனுக்குக் கேட்கவில்லை. கேட்காது. செவி மடுக்கும் திறன் அவனுக்கு இல்லை. நன்றி சொல்லவில்லை, அவன். ஏனெனில் அவன் பேச மாட்டான். பேசும் திறனும் அவனுக்கு இல்லை. பெயர் முகிலன். வயது நான்கு. சிதம்பரத்தில் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோருக்கான ஜி.வி.பள்ளியின் மாணவன்.

"இது எப்படி சாத்தியம்?" என்று பள்ளி நிர்வாகிகளுள் ஒருவரான டாக்டர் முத்துகுமாரிடம் கேட்கிறோம்.

'நடன ஆசிரியர் ஒருவரை அமர்த்தி, முகிலனுடைய இயற்கையான திறமைக்கு மேலும் மெருகேற்றினோம்" என்கிறார் டாக்டர் முத்துகுமார்.

மனநலம் குன்றியவர்களாகவும், உடல் ஊனமுற்றவர்களாகவும் இப்பள்ளியில் சுமார் 30 சிறுவர்கள் படிக்கிறார்கள். காது கேளாதவர்களுக்கு, மனநலம் குன்றியோருக்கு போதிக்கும் பயிற்சிபெற்ற நான்கு ஆசிரியைகள்.

1990ல் ஒரே மாணவனுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியில்

முப்பது சிறுவர்கள்!

அத்தனை பேரும் உள்ளூர் சிறுவர்கள்.

"மருத்துவத்திற்கோ, குழந்தைகளின் படிப்புக்கோ செலவிட முடியாத ஏழைகள், தங்கள் பிள்ளைகளை இங்கே கொண்டு வந்து விடுகிறார்கள். எல்லோருக்குமே இலவசமான சிறப்புப் பயிற்சி. தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்வதுடன், குறைந்த பட்சம் ஒரு கைத்தொழில் கற்றுத் தேறும் அளவுக்குப் பயிற்சி அளித்து அனுப்புகிறோம்" என்கிறார் டாக்டர் முத்துகுமார்.

"இப்படியொரு பள்ளி தொடங்கும் எண்ணம் எப்படி வந்தது?"

"காமராஜர் காலத்தில் இப்பகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த ஜி.வாகீசப்பிள்ளை தான் இதன் நிறுவனர். ஊனமுற்றோருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்பது அவரது லட்சியமாக இருந்தது. முதலில் பார்வையற்றோர் பள்ளி ஆரம்பிப்பதாகத் தான் இருந்தது.

ஆனால் ஒரு குறிப்பிட்ட ஊனமுள்ள பிள்ளைகள் மட்டுமே அதனால் பயன்பெற முடியும். தவிரவும் அதில் சிரமம் அதிகம். எனவே மனநலம் குன்றியவர்களும், காது கேளாத, வாய் பேசாத சிறுவர்களும் பயன்பெறும் வகையில் இப்பள்ளியை நடத்தி வருகிறோம்."

வெறும் கல்வி மட்டுமின்றி இலவச மருத்துவமும், உடற்பயிற்சிகளும் அளித்து ஊனமுற்ற சிறுவர்களுக்குச் சேவை செய்து வருகிறது இப்பள்ளி. நன்கொடைகள் ஏதும் இல்லை. நிர்வாகிகள், ஓர் அறக்கட்டளை அமைத்து நிர்வகித்து வருகிறார்கள். அரசாங்கத்திடம் பண உதவி கோரியிருக்கிறார்கள். இடவிஸ்தரிப்பு, இதர வளர்ச்சிகளுக்காக.

"சீக்கிரம் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம்" என்கிறார் முத்துகுமார்.

பிள்ளைகள் நம்மைப் பார்த்து சிரிக்கிறார்கள். வெட்கப் படுகிறார்கள். பாட்டு பாடுகிறார்கள். கிளம்பும் போது சந்தோஷமாக டாட்டா காட்டுகிறார்கள்.

நமக்கும் அவர்களை முதலில் பார்த்த போது ஏற்பட்ட மனச்சுமை குறைந்து மகிழ்ச்சி தலை காட்டுகிறது- பலன் எதிர்பாராது இப்படியொரு பள்ளி ஆரம்பித்த நல்ல உள்ளத்தை எண்ணி!

– ஜக்கு

பனிஷ்மெண்ட் ஏரியா என்பார்கள். பணியிலிருப்போர் யாரையாவது பழி வாங்க வேண்டும் என்றால், நிர்வாகம் அவர்களை, சகாரா மாதிரியான பிரதேசங்களுக்கு டிரான்ஸ்ஃபர் செய்து கஷ்டம் அனுபவிக்க வைப்பார்கள். சிதம்பரம் ஒன்றும் சகாரா இல்லை. அதே சமயம் சொர்க்க பூமியும் இல்லை. 'கர்ப்பிணிப் பெண்களை ஒரு ரவுண்ட் டவுனுக்குள் ஆட்டோவில் அழைத்துப் போனால் பிரசவமாகிவிடும் அளவுக்குச் சாலையின் லட்சணம்' என்று ஒருவாசகர் நமக்குக் கடிதம் எழுதியிருந்தார். 'மெட்ராஸில் மட்டும் தான் கூவமா? இங்கு தெருவுக்குத் தெரு கூவம்தான்' என்று இன்னொரு வாசகர், இன்லண்டு லெட்டர் முழுக்கப் புலம்பியிருந்தார். 'ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்தால், ஒருநாள் சோறு இறங்காது' என்று வேறொருவர் இரங்கற்பா பாடியிருந்தார். 'கல்லூரும் முள்ளூம் காலுக்கு மெத்தை - சபரிமலையில் மட்டுமல்ல' என்று வாகீச நகரிலிருந்து ஒரு டாக்டர் கிண்டலடித்திருந்தார். 'சிதம்பரத்துப் பெண்களுக்குக் காலேஜ் பாக்கியமே கிடையாதா?' என்று கார்டில் கேட்டிருந்தார் வேறொருவர்.

என்னங்க செய்யறது?

முன்னாள் அமைச்சர் வி.வி. சுவாமிநாதனும் இன்னாள் எம்.எல்.ஏ. அழகிரியும் பேசுகிறார்கள்.



• அழகிரி

என்னடா ஒரே சோக கீதமாகக் கேட்கிறதே என்று போய்ப் பார்த்தால் உடன் உட்கார்ந்து ஒப்பாரி வைக்க வேண்டிய நிலைமை நமக்கு.

''நீங்கள் எம்.எல். ஏவைப் பார்க்கக் கூடாதா?'' என்று கேட்டால், ''எலக்ஷன் அப்பப் பார்த்தது தாங்க!'' என்கிறார் ஓர் இளைஞர். ''முந்நாள் அமைச்சர் வி.வி. சுவாமிநாதன் மினிஸ்டரா இருந்தப்ப ஏதோ



கொஞ்சம் செஞ்சாருங்க. ஆனா இப்ப....'' என்கிறார்.

ஆஹா, 'சொந்தச் சோதரர் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்க ஆவில்லையா' என்று கிளம்பினோம்.

• வி.வி. சுவாமிநாதன்.

வி.வி. சுவாமிநாதன் வர வேற்றார். சாலை, குடிநீர், சாக்கடை, கல்லூரி, கழிப்பிடம் என்று மூட்டை புகாரை முன் வைத்தோம்.

''என்னங்க செய்யறது? இப்ப நாட்டுல அதிகாரத்தை வெச்சித்தான் எல்லாம் நடக்குது. நான் இப்ப எம்.எல்.ஏவோ, எம்.பி.யோ மினிஸ்டரோ இல்லை. நாம சொன்னா எவன் கேக்கறான்?'' என்று அவர் ஒருபாடு புலம்ப ஆரம்பித்தார்.

''இத்தனை வருஷமா இந்த ஊர்ல இருக்கீங்க. அதெப்படிங்க செல்வாக்கு இல்லாம போயிரும்? முயற்சி பண்ணிப் பார்க்கலாமே?''

''ஒண்ணும் பிரயோஜனமில்லீங்க. நான் எம்.எல்.ஏவா இருக்கப்ப, ஒவ்வொரு டவுன் பஞ்சாயத்துக்கும் 45, 50 லட்சம் செலவு செஞ்சி நல்ல குடிநீர் கிடைக்கச் செய்தேன். இப்ப பாருங்க - போரிங் தண்ணிதான். வாயில வெக்க முடியலை. அதை விடுங்க. சிதம்பரம் என்ன ஒரு புண்ணிய பூமி? மாணிக்கவாசகர் வந்த இடம்! அவரு குளிச்சதா சொன்ன இடத்தைப் போயிப்பாருங்க. சாக்கடை மாதிரி கிடக்குது. டூரிஸ்ட் அதிகம் வராங்க. டெவலப் பண்ணலாமில்லை? எம்.ஜி.ஆர். தீவுன்னு ஒரு இடம் இருக்குது. இதயக்கனி ஷூட்டிங் கூட அப்ப எடுத்தாங்க. அதை நல்லபடியா டூரிஸ்ட் ஸ்பாட்டா ஆக்கலாமில்லை? நீளமா பீச் இருக்குது. மெரினா மாதிரி அழகு படுத்தலாமில்லை? செய்ய மாட்டாங்க. முனிஸிபாலிட்டி மோசங்க. கேட்டா பணம் போறலைங்கறாங்க.

''பொருளாதாரக் குறை எங்கியும் தாங்க இருக்குது. குறையை மட்டும் சொல்லிட்டிருந்தா போதுங்களா? நிவர்த்தி பண்ண வழி தேட வேணாமா?

''இங்க பாருங்க, கோவில் இருக்குது. நடராஜா கோவில். அதை அரசு எடுத்துக்கிட்டாலே - நகரத்துப் பொருளாதாரப் பிரச்னை பெரும்பங்கு தீர்ந்துடும். ஆனா அந்த ஐயருங்க விடமாட்டாங்க. என்டோன்மெண்ட் போர்டுங் கீழ வரவேணாம். தனியாகவே ஒரு போர்டு போட்டுறலாம். பூஜை முறைங்களில் நாம தலையிட வேணாம். அதை அவங்க வழக்கப்படி செஞ்சிக்கட்டும். நிர்வாகத்தை மட்டும் கவர்மெண்ட்டு கிட்ட குடுக்கலாமில்ல? மாட்டாங்க.

''ரோடு பிரச்னை - கஷ்டந்தாங்க. அங்கங்க பேந்து கிடக்குது. உள்ளாட்சித்துறையும் நெடுஞ்சாலைத் துறையும் கொஞ்சம் மனசு வெச்சா ஒரே நாளில் சரியாக்கிடலாம்.

''அப்புறம் கிராமப்புறங்களில் வளர்ச்சி இல்லைன்னு ஒரு குற்றச்சாட்டு. ஒரு கிராமத்து ஜனங்க அத்தனை பேரோட மாச வருமானத்தைச் சேர்த்தா - அதை விட கிராம அதிகாரியோட வருமானம் அதிகமா இருக்குது. என்னங்க செய்யறது?

எங்கியும் பணம் ஒழுங்கா மக்களுக்குப் போய்ச் சேர மாட்டேங்குது...''

''சரி, என்ன செய்யலாங்கறீங்க?''

''நான் எம்.எல்.ஏவா, மினிஸ்டரா மறுபடி வந்தா எல்லாத்தையும் உடனே சரி பண்ணிடுவேங்க!''

அடுத்தது எம்.எல்.ஏ. அழகிரி. காங்கிரஸ்காரர். தொகுதியை விட்டுத் தள்ளி, கிரிப்பாளையம் என்கிற இடத்தில் இவரது ராஜாங்கம். 'சார் மக்களே எலக்ஷனின் போதுதான் பார்த்தேன் என்கிறார்கள்; நமக்கு எங்கே கிடைக்கப் போகிறார்?' என்றுதான் முதலில் நினைத்தோம். நடராஜர் அருள். போன நேரத்தில் வசமாகச் சிக்கினார்.

''ரோடு சரியில்லை, சாக்கடை, காலேஜ், டிரைனேஜ், தண்ணீர்ப் பிரச்னை....''

''ரொம்ப கரெக்டு சார். இங்க ஒண்ணுமே சரியில்லை. என்ன செய்யறது?''

''நீங்க எம்.எல்.ஏ. நீங்கதானே...''

''வாஸ்தவந்தாங்க. எம்.எல்.ஏவா இருந்து என்ன பிரயோஜனம்? போராடறோம். அசெம்ப்ளில பேசறேன். குறைகளை எடுத்துச் சொல்றேன். அதுக்கு மேல நாம என்ன செய்ய முடியுங்க? பாருங்க, மெயின் ரோடுல நாலு லேயர் ஜல்லி போட்டு தார்ரோடு போட்டாங்க. புயல் வந்தப்ப எல்லாம் பொளந்துக்கிச்சி. மறுபடியும் கேக்கறோம். இன்னும் ஒண்ணும் நடக்கலை. கலைஞர் ஆட்சில - பாலம் ஒண்ணு போட ஆரம்பிச்சாங்க. இன்னும் வேலை நடக்குது. கேட்டா நிதி இல்லைங்கறாங்க. கவர்மெண்ட் ஆஸ்பத்திரி, சாக்கடை மாதிரி இருந்தது. மாணவர்கள் சில பேரைக் கொண்டு எல்லாத்தையும் சுத்தம் பண்ணோம். மறுபடி பழைய மாதிரியே ஆயிட்டுது. அப்புறம் மருந்து குடுக்கறதில்லை, அழுத்திடறாங்கன்னு ஒரு குற்றச்சாட்டு. உண்மையில ஆஸ்பத் திரிக்கே மருந்து வர்றதில்லைங்க.

''இவங்க மருந்துங்களை வித்துடறதா சொல்வாங்க. உண்மை அது இல்லீங்க. 'பலானவரே' எல்லாத்தையும் வித்துட்டாருங்க. ஊழல் பண்ணினா உத்யோக உயர்வு கிடைக்கிற காலமாயிருக்குங்களே!

''தொழில் வளர்ச்சிங்கறாங்க. இங்க தொழில் எதுவும் வளராதுங்க. விவசாய ஏரியா பாருங்க! நானே ஒரு செங்கல் ஆலை போட்டிருக்கேன். வேலைக்கு ஆள் கிடைக்க மாட்டேங்கறாங்க. விவசாயிகளுக்குக் கொடுக்கற மானியங்களை, ஆளுங்கட்சிக்காரங்களே சாப்டுறாங்க. சட்டசபைல, இதைச் சொன்னா, ஸ்பீக்கர் 'என்ன ஆதாரம்?'னு கேக்கறாரு. சரிதான்னு கஷ்டப்பட்டு ஆதாரம் சேகரிச்சிக் கொண்டு போய்க் காட்டினா, 'தோ.. உடனே நடவடிக்கை எடுக்கறேன்'னு வீரமாப் பேசினாரு. அவரு நல்லாப் பேசுவாருங்க. ஆனா பாருங்க, இதுவரைக்கும் ஒண்ணும் நடவடிக்கை எடுத்ததாத் தெரியலைங்க.

''லோக்கல் பாடி எலக்ஷன் நடத்தினாத்தாங்க இதெல்லாம் சரிப்படும். ஆனா நடத்தமாட்டாங்க. ஏன்னா, ஆளுங்கட்சி ஆளுங்க வராமப் போயிடுவாங்களோன்னு பயம்.

''சொன்னா நம்பமாட்டீங்க. 370 பேர் கவனிக்க வேண்டிய டவுன் பஞ்சாயத்தை ஒரே ஒரு ஆளுதாங்க கவனிச்சிக்கிறார். டவுனே இந்த லட்சணம்னா, கிராமங்களைப் பத்தி சொல்லணுங்களா?

''பெண்கள் கல்லூரி வேணும்னு நீங்க சொல்றீங்க. வேணுந்தாங்க. ஆனா அரசு, புதுசா கல்லூரி எதும் ஆரம்பிக்கிறதில்லைன்னு கொள்கை முடிவு எடுத்திருக்காங்க. ஆனா பாருங்க - பார்கூர் மட்டும் விதிவிலக்குங்க! அண்ணாமலை யூனிவர்ஸிட்டிகாரங்க மனசு வெச்சா ஆரம்பிக்கலாங்க. நான் கூடக் கேட்டுப் பார்த்துட்டேன். ஆனா அவங்க கண்டுக்கலை.

''ஜனங்களுக்குக் கஷ்டம் பழகிப் போயிட்டுதுங்க. இதெல்லாம் அவங்க பெரிசாவே எடுத்துக்கறதில்லைங்க!''

''எம்.எல்.ஏ.வா இருந்துட்டு, நீங்களே இப்படிப் பேசலாமா?''

''வேற வழி இல்லீங்க. பாருங்க. இந்திரா காந்தி மகளிர் கூட்டுறவு சங்கம்னு ஒண்ணு ஆரம்பிச்சி, கிராமத்துப் பெண்களுக்கு, தையல் மிஷின் வாங்க லோன் வாங்கிக் கொடுத்தேன். எத்தனையோ பெண்கள் இதனால பயனடைஞ்சாங்க. ஆனா பாருங்க, இந்தத் திட்டம் நல்லா வர ஆரம்பிச்சதும் அரசாங்கம் எடுத்துக்கிட்டாங்க! கஷ்டப்பட்டு ஆரம்பிச்சது நாம; ரொம்ப சுலபமா அவங்க எடுத்துக்கறாங்க. என்னங்க செய்யறது?''

மளிகை லிஸ்ட் மாதிரி எம்.எல்.ஏவே குறைப்பட்டியல் வாசிக்கும் போது மக்கள் என்ன செய்வார்கள்?

ஒரு விஷயம் - எம்.எல்.ஏ. அழகிரி மாபெரும் சாதனை ஒன்று புரிந்திருக்கிறார் : ''சட்டசபையில் முதல்வரைப் புரட்சித் தலைவின்னு கூப்பிடாத ஒரே எம்.எல்.ஏ. நாந்தாங்க!'' - இது அவரே சொன்னது.

மூச்சடைத்தது நமக்கு. சிதம்பரம் மக்களின் நல்வாழ்வுக்காக இதர பகுதிவாழ் மக்கள் கூட்டுப் பிரார்த்தனை நடத்தலாம். தலைமை ஏற்க நாம் தயார்!

– கிச்சா.

புதிய இணைப்பு "BEDSHEETS"

புதுமைத் திட்டம் No. 3

"லில்லி" உள்பாவாடைகள் மற்றும் (BEDSHEETS) படுக்கை விரிப்புகள்

திட்டத்தின் விபரம் :

1. ரூ. 300/-ஐ D.D. அல்லது M.O. மூலம் P.R.C. கார்மெண்ட்ஸ் என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள். இத்திட்டத்தில் முதலில் வரும் 5000 உறுப்பினர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

2. பணம் கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகள் (Normal Size) உங்களுக்கு பதிவுத் தபால் மூலம் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கப்படும்.

3. நீங்கள் பணம் செலுத்தியதிலிருந்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகள் (Normal Size) ஆண்டுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு பதிவுத் தபால் மூலம் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கப்படும்.

4. பணம் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 84 மாதங்கள் (7 ஆண்டுகள்) நிறைவு பெற்றவுடன் ரூ. 600/- ஆக உங்களுக்கு வழங்கப்படும்.

5. நீங்கள் பணம் செலுத்தியவுடன் ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகளுடன் (Normal Size) 7 ஆண்டுகள் கழித்து ரூ. 600/- திரும்பப் பெறுவதற்கான Repayment Gaurantee Card உடனடியாக வழங்கப்படும்.

	நீங்கள் செலுத்தும் தொகை	பணம் செலுத்திய உடன்	முதலாம் ஆண்டு இறுதியில்	இரண்டாம் ஆண்டு இறுதியில்	மூன்றாம் ஆண்டு இறுதியில்	நான்காம் ஆண்டு இறுதியில்	ஐந்தாம் ஆண்டு இறுதியில்	ஆறாம் ஆண்டு இறுதியில்	7 ஆண்டு முடிந்தவுடன் திரும்ப பெறும் தொகை	மொத்தம்
Normal Size அதிகபட்ச இடுப்பு சுற்றளவு 35"/88cm	ரூ. 300/-	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 600/-	ரூ. 1100/-
Spl Size அதிகபட்ச இடுப்பு சுற்றளவு 40"/102 Cms.	ரூ. 350/-	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 700/-	ரூ. 1400/-
பெட்ஷீட் 60 x 90 ஒன்று	ரூ. 400/-	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 800/-	ரூ. 1600/-

பங்கு கொள்வீர்! பயன் பெறுவீர்!!

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

P.R.C. கார்மெண்ட்ஸ்

26, பிரதட்சணம் ரோடு, 'ஏ' பிளாட்,

கரூர் - 639 002. போன் : 21946

எங்கள் நிறுவனம் 1984-ல் பாரத பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

குறிப்பு : ★ நீங்கள் செலுத்தும் தொகை முழுமையாக, 65 ஆண்டுகளாக மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் கரூர் 'தி லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிட்'-ல் டெபாசிட் செய்யப்படும்.

★ மேற்படி டெபாசிட் தொகையிலிருந்து எங்கள் நிறுவனத்தின் நடைமுறை மூலதனத்திற்காக (Working Capital) வங்கியிலிருந்து கடன் வசதி பெற்றுக் கொள்ளப்படும்.

★ Spl. Size (ஸ்பெஷல் சைஸ்) வேண்டுவோர் ரூ. 350/- செலுத்தவும்.

★ 60 X 90 பெட்ஷீட் ஒன்று பெறுவதற்கு ரூ. 400/- செலுத்தவும்.

★ உங்களுக்கு தேவையான கலர் மற்றும் அளவுகளை குறிப்பிட்டு எழுதினால் அதன்படி உள்பாவாடைகள் அனுப்பி வைக்கப்படும்.

★ வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இத் திட்டத்தில் பங்கு பெறலாம். 'லில்லி' உள்பாவாடைகள் மற்றும் இதர கடிதத் தொடர்புகள் அவர்களுடைய இந்தியாவில் உள்ள விலாசத்திற்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். D. D. கரூரில் மாற்றத்தக்க வகையில் அனுப்பவும்.

சிதம்பர ரகசியம்

இன்ஸ்பெக்டர் சித்தாந்த், தனக்குரிய இருக்கையில் அமர்ந்து தன் அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

''எக்ஸ்க்யூஸ் மீ!'' கத்திரிக்கப்பட்ட குயிலின் குரல்.

சித்தாந்த் நிமிர்ந்தார். அவரின் இருக்கைக்குப் பின் நின்றிருந்த 'ரோபன்' சிக்னல் அடித்தது. அதன் கையில் நாலெட்ஜ் பேலஸும் வொர்க்கவல் ரியாலிட்டி பிளேயரும்.

''சிக்னல் அடித்த என் உதவியாளனை மன்னியுங்கள். அது ஒரு இயந்திர மனிதன்... நீங்கள் உட்கார்ந்து, வந்த விஷயத்தைக் கூறலாம். உங்கள் பெயர்?''

''மிஸஸ் பூர்விஷா குரியன்!''

''என்ன ப்ராப்ளம் உங்களுக்கு?''

''என் கணவரைக் காணவில்லை!''

''எப்போதிலிருந்து?'' ரோபன் நாலெட்ஜ் பேலஸ் உதவியுடன் வினவியது.

''நேற்று முன்தினம் வேலைக்குப் போனவர் திரும்பவில்லை!''

'என்ன வேலை பார்க்கிறார்?''

''மரியா கல்லூரியில் சமூகவியல் பேராசிரியர்!''

''அவரின் புகைப்படம்?''

''இதோ!'' நீட்டினாள் பூர்விஷா. புகைப்படத்தில் 45வயது சோடா புட்டி ஆசாமி சிரித்திருந்தார்.

''ஓகே! உங்கள் முகவரி?''

''இந்தாருங்கள் விசிட்டிங்கார்டு!'' பிளாஸ்டிக்கில் நீட்டினாள்.

''மிஸஸ் பூர்விஷா! இந்தப் புகார் படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுங்கள்...''

தன்னையே உறுக்கும் ரோபனை அவதியாய்த் தவிர்த்தாள் பூர்விஷா.

நொடி தாமதித்து நாக்கை மேல் அண்ணத்தில் சொடக்கி 'டொக்'என ஒலி செய்து பேனா மூடியைக் கழற்றினாள். பூர்த்தி செய்ததை சரி பார்த்தாள். பேனாவை மூடினாள். மூடியவள் தொடர்ந்து நான்கு முறை மூடியை இறுக்கி திருப்தியானாள்.

''கண்டு பிடித்து விடுவீர்கள்தானே?''

''பின்னே?''

பூர்விஷா புறப்பட்டாள்.

''சார்! ஒரு விஷயம். நாம இன்று மாலை ஒரு முறை அவள் வீட்டிற்குப் போய் வந்தால் என்ன?'' என்றது ரோபன்.

பங்களாவின் முன் காரில் போய் இறங்கினர் சித்தாந்த்தும் ரோபனும். ரோபன் கையில் நாலேஜ் பேலஸும், விஆர் பியும்.

ரோபன் பங்களாவை உள்ளித்து, ''அட்டகாசமான பங்களா. அழகான மனைவி. ஏன் போனார் குரியன்?''

அழைப்புமணி அழுக்கிய 45 நொடிகளில் வெளிப்பட்டாள் பூர்விஷா. நைட்டியில் இருந்தாள். இவர்களைப் பார்த்ததும், ''வாங்க! உள்ளே வாங்க...''

உள்ளே நடந்தாள் பூர்விஷா. வரவேற்பறைக்குள் அடிகளை அளந்து வைத்து வினோதமாய் நடந்தாள். ரோபனின் கவனம் முழுவதும் பூர்விஷா மீதுதான். ஒரு சோபாவில் அமர்ந்து தோள்களைக் குலுக்கி, ''அமருங்கள்!'' என்றாள்.

சித்தாந்த்தும் ரோபனும் மயங்கியவர்களாய் அமர்ந்தனர்.

புருவத்தை நெளித்து, முகத்தைச் சுளித்து மேஜைப் பக்கம் திரும்பினாள் பூர்விஷா. மேஜைப் பொருட்கள் ஏதோ கலைந்து கிடப்பதாய் நினைத்து எல்லாவற்றையும் மிலிட்டரி மிடுக்காய் ஒழுங்கு செய்தாள்.

அவிச்சையாய் வலக்கை விரலைச் சொடக்கி மாவரிக்கத்தில் எதையோ இசைத்த படி எதிரில் வந்து அமர்ந்தாள்.

''பூர்விஷா! உங்களுக்குத் திருமணமாகி எத்தனை வருடங்களாகின்றன?''

''ஆறு ஆண்டுகள்!''

''உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் வயது வித்தியாசம் அதிகம் போல...''

''அவர் பேராசிரியர்; நான் அவரின் மாணவி! இருக்காதா பின்னே?''

''காதல் திருமணமா?''

''ஆம்!''

கேள்வி கேட்டபடி ரோபன், பூர்விஷாவின் கைகளையே உறுத்தது. முதலில் அலட்சியமாய் இருந்தவள், இறுகினாள். ரோபனுக்குத் தெரியாமல் தன்னிரு கைகளை ஆராய்ந்தாள். திருப்தியாகாமல் தன் நைட்டியில் அழுத்தமாகத் துடைத்துக் கொண்டாள்.. அதன் பின்னும் ரோபன் முறைப்பது கண்டு வாஷ்பேசினுக்கு நடந்தாள். திரவ சோப்பால் கைகளைக் கழுவி, கழுவிய கைகளை முகர்ந்து புன்னகை முகம் கொண்டாள். வந்தமர்ந்தாள்.

சட்டென்று ரோபன் இடப் பக்கம் தரையில் குனிந்து தொட்டு முகர்ந்தது. முகம் மாறியது.

கவனித்து இருண்டாள் பூர்விஷா. தொடர்ந்து கேள்விகள் கேட்ட ரோபனின் செல்லுலார் போன் அழைத்தது.

ஆர்னிகா நாசர்



ஆர்னிகா நாசர், சிதம்பரத்துக்காரர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சுகாதார அதிகாரி. 250 சிறுகதைகள், 32 நாவல்கள், 12 தொடர்கதைகள், 10குறுநாவல்கள் என்று ஏராளமாய் எழுதி ஜமாய்த்து வருபவர். சயன்ஸ் ஃபிக்ஷனில் சாதனை புரிவது இவரது லட்சியம்.

எடுத்த ரோபன், 'நிஜமா? அப்படியா? சரி, இன்ஸ்பெக்டரிடம் தெரிவிக்கிறேன்' என்று கூறி போனை பாக்கட்டில் வைத்தது.

''ஆங்! ஒரு டெட்பாடி கிடைச்சிருக்காம்...நாய் வெளியே இழுத்து... மார்ச்சுவரியில் வைத்திருக்கிறார்கள்!''

எழுந்தார் சித்தாந்த். ''புறப்படுகிறோம் மேடம்!''

''என்ன விஷயம் சார்?'' மிழற்றினாள் பூர்விஷா.

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. இது வேறு விஷயம்....''

இருவரும் வெளிவாசல் வந்து காரில் ஏறிப் புறப்பட்டனர். பங்களா பார்வையிலிருந்து மறைந்தவுடன் ரோபன் கூவியது.

''காரை நிறுத்துங்கள் சாரே!''

நிறுத்தினார். ''என்ன வேடிக்கை பண்ணுகிறாய் ரோபன்?''

''பத்து நொடி கரைசலில் பூர்விஷாவின் கார் சீறிப் புறப்படும். பாருங்கள்...''

சொன்னபடியே பூர்விஷா கார் பறந்தது.

''உரிய இடைவெளி விட்டு அவளைத் தொடருங்கள் தலைவா!''

சித்தாந்த் தொடர்ந்தார். பூர்விஷா, 'யாராவது தொடர்கிறார்களா?' எனப் பின்னுக்கு பின்னுக்குப் பார்த்தபடி ஒரு சவுக்குத் தோப்புக்குள் நுழைந்தாள். இறங்கி, இடமும் வலமும் உன்னித்துவிட்டு வேகமாய் நடந்தாள். மரங்களை எண்ணியபடி வந்தவள், 29வது மரத்தில் நின்றாள். மரத்தடி மண்ணை ஆராய்ந்தாள். எதுவும் கலைக்கப்படவில்லை. இருந்தாலும் முழங்காலிட்டாள். பரபரப்பாய் மண்ணைத் தோண்டினாள். சில நிமிடக் கரைசலில் சூரியனின் சவமுகம் பார்வையானது.

முந்தின தினம் அவளது கள்ளக் காதலன் துணையுடன் சூரியனை, மண்டையில் தாக்கிக் கொன்றதும், தெறிய ரத்தத்தை சோப்புப் போட்டுக் கழுவியதும், பாடியை இங்கே கொண்டு வந்து புதைத்ததும் அவள் மனக்கண் முன் நிழலாடின.

''பொல்லாத இயந்திர மனிதன் அந்த ரோபன்!நம்மை ஒரு கலக்கு கலக்கி விட்டதே!'' என முணுமுணுத்தபடி எழுந்த பூர்விஷாவை சித்தாந்தின் லேசர் துப்பாக்கி வரவேற்றது. பக்கத்தில் ரோபன்!

''எப்படிக் கண்டு பிடித்தாய் ரோபன்?''

''அது ஒரு சிதம்பர ரகசியம். நான் சொல்லமாட்டேன் தலைவா!''

''பெருமை அடிக்காதே ரோபன்... சொல்!''

''ஓய்வு நேரத்தில் மருத்துவத்துறை புத்தகங்களைப் படித்துத் தள்ளுகிறேன்... இப்போது நான் அரை டாக்டர்... பூர் விஷா 'ஓசிடி' (OBSESSIVE COMPULSIVE



ORDER) எனப்படும் ஒருவகை மன வியாதியால் பாதிக்கப்பட்டவள்!''

''ஓ.சி.டி'ன்னா என்ன ரோபன்?''

''ஓ.சி.டி'ன்னா பரிணாமரீதியான சில குணங்கள் மனிதர் மனத்தில் புதைந்து, சமயங்களில் வெளிப்படும். கோழி தரை சீய்த்தல்-நாய் காற்று வரும் திசையில் மூக்கை வைத்துப் படுப்பது கூட ஓ.சி.டி. தான். சதாலஜியில் இதை விரிவாகப் பார்க்கலாம். மனிதரில் நூற்றுக்கு ரெண்டு பேருக்கு இந்த மனவியாதி இருக்கு சார்!''

''ஓ.சி.டி.அவளுக்கு இருக்குன்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

''அந்த வகை நோயாளிகள் என்ன செய்வார்களோ, அனைத்தையும் பூர்விஷா செய்தாள். தலைகோதுதலை தேவைக்கு அதிகமாகத் திருத்திக் கொண்டாள். கதவை ஆடிக் கொண்டே இறந்தாள். தரையை பாதத்தால் அளந்து நடந்தாள். ஒழுங்காய் இருந்த மேஜைப் பொருட்களை மீண்டும் சீர் செய்தாள். அவளைத் தொடர்ந்து கண்காணித்த எனக்கு ஒரு யோசனை வந்தது.''

''என்ன யோசனை ரோபன்?''

''பூர்விஷா - பொங்கும் இளமை! புரபஸர் கிழவன். ஆறு வருடத்தில் புரபஸர் கசந்திருப்பான். கள்ளக் காதல் வந்திருக்கும். அதனைப் பார்த்த அல்லது கண்டித்த குரியனை பூர்விஷாவோ அவளது கள்ளக் காதலனோ கொலை செய்திருக்கக் கூடும். இதுமாதிரியான அவசரக் கொலைகள் ஏதேனும் கனமான பொருளால் தாக்கப்பட்டுத் தான் நிகழும். கொலை, மாலையில் நடந்திருந்தால் அது படுக்கையறையில் நடந்திருக்காது; வரவேற்பறையில்தான் நடந்திருக்கும். குறைந்த அவகாசத்தில் பிணத்தை எரிப்பது அசாத்தியம். புதைத்திருப்பார்கள். எங்கு புதைப்பார்கள்? தோட்டத்தில் அல்லது பத்து கிமீ சுற்றளவில் ஏதாவது இடத்தில். கார் கையில் வைத்திருப்பவர்கள் வெளியில்தான் புதைப்பார்கள். அப்படித்தான் பூர்விஷாவும் செய்திருந்தாள்.


கொலை செய்தபோது ஏற்பட்ட ரத்தக் கறை, பூர்விஷா கையில் இன்னும் இருந்தால்- எப்படி 'இடுக்' பார்வை பார்ப்பேனோ அப்படியே பார்த்தேன். சாதாரணப் பெண் என்றால் ரத்தக்கறை 48மணி நேரத்திற்குப்பின் கழுவிய கையில் தங்காதென அறிந்திருப்பாள். இவளோ ஓ.சி.டி. பெண்! இன்னும் பூர்விஷாவை குழப்ப- தரையில் காய்ந்த ரத்தத்துளி தொட்டது போல் நடித்தேன். வலையில் சிக்கினாள். கைகளைக் கழுவி என் சந்தேகத்தை அடர்த்தி படுத்தினாள் பூர்விஷா!''

''செல்லுலார் போன்?''


''பொய். அவள் வாஷ்பேசினுக்குப் போயிருக்கும்போது 'செட்' செய்தேன்''

''நீ மஹா புத்திசாலி ஆகிவிட்டாய் ரோபன்!''

அழகாக வெட்கப்பட்டது ரோபன்!



சக்கரவர்த்தித் திருமகன்



70. பிராட்டியும் மாருதியும்

"அன்புக்குரிய வானர சிரேஷ்டனே! நீ கொண்டு வந்த செய்தியைக் கேட்டு நான் மகிழ்வதா, துக்கப்படுவதா என்பது தெரியவில்லை. உன் மொழியெல்லாம் அமிருதம் கலந்த விஷம் போல் என் உள்ளத்தில் பாய்கிறது. ராமன் என்னை மறந்து விடவில்லை, என்னைத் தேடுகிறான் என்பது ஆனந்தம் தருகிறது. ராமன் துக்கப்படுகிறான், என்னையே நினைத்து நினைத்துத் துயரப்படுகிறான் என்பது என்னுடைய துக்கத்தை அதிகப்படுத்துகிறது."

இவ்வாறு ஜானகி உள்ளதை உள்ளதுபோல் சொல்லி ஆறுதல் அடைந்தாள்.

மனித வாழ்க்கையில் சுகமும் துக்கமும் சந்தோஷமும் ஒன்றோடு ஒன்று கலந்து மக்களை இயக்குகிறது. ராமன் தன்னை மறக்கவில்லை, தன்னையே நினைத்து நினைத்து வாடித் துயரப்பட்டு வருகிறான், தேடித்தேடி யலைந்து, துக்கப்பட்டு வருகிறான் என்கிற செய்தி சீதைக்கு மிக்க ஆறுதலும் சந்தோஷமும் தந்தது. ஆனால் கூடவே துயரமும் தந்தது.

சீதை சொன்னாள் : "மனித ஜன்மத்தில் சந்தோஷம், விசனம் என்கிற இரட்டைக் கயிற்றால் உயிரானது கட்டி இழுக்கப்படுகிறது. இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. ராமனும் லக்ஷ்மணனும் நானும் இந்த இயற்கை விதிக்கு உட்பட்டிருக்கிறோம். பெரும் சுழிக் காற்றில் அகப்பட்டுக் கடலில் தள்ளாடும் படகைப் போல் என் பிராணநாதன் துக்கப்படுகிறார். அவர் எப்போது வருவார்? அன்புக்குரிய வானர சிரேஷ்டனே, இந்த லங்கையையும் ராவணனையும் மற்ற அரக்கர்களையும் எப்போது வந்து வதம் செய்வார்? இந்த ராக்ஷசன் எனக்கு வைத்திருக்கும் காலவரைக்குள் இது நடக்க வேண்டுமே? இதை என் நாதனிடம் சொல்லுவாய். இரண்டு மாதங்கள்தான் மிஞ்சி நிற்கின்றன. ராவணனை நல்வழியில் செலுத்த, அவன் தம்பி விபீஷணன் எவ்வளவோ முயன்றான். 'சீதையைக் கொண்டு போய்த் திருப்பி ஒப்படைத்து விடு, லங்கையும், ராக்ஷச குலமும் தப்பிப் பிழைக்கும்' என்று விபீஷணன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்; எல்லாம் பயனில்லாமல் போயிற்று. என் உள்ளத்தில் அந்தராத்மா தைரியமாக இருக்கிறது. ராவணன் அழியுங் காலம் நெருங்கி வருகிறது. யமனை அவனே தேடுகிறான். அவன் அழிவது நிச்சயம். என் நாதன் வந்து என்னைச் சீக்கிரமே வெற்றியுடன் அடையப் போகிறார். இதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. பாவத்தையறியாத என் உள்ளத்தில் காணும் நிகழ்ச்சி ஒரு நாளும் பொய்யாகாது."

இவ்வாறு சீதை கண்களில் நீர் ததும்பப் பேசிக் கொண்டே போனாள். சீதையின் துக்கத்தைப் பார்த்து ஹனுமானுக்குப் பொறுக்க முடியவில்லை.

"ஜானகி, தாயே! உடனே போய்ச் சொல்லி ராகவனை அழைத்து வருவேன். பெருஞ்சேனையுடன் வந்து லங்கையில் இறங்குவேன். கவலைப் படாதீர். உமக்கு இஷ்டமாயின் சொல்வீர்; இப்போதே என் முதுகில் ஏறி உட்காருவீர், நானே உம்மைத் தூக்கிக் கடலைத் தாண்டி ராமனிடம் போய்ச்

ராஜாஜி

ஸ்ரீராம் சிட்ஸ்

வெற்றிக்குத் தலை வணங்குகிறது.



சிறு வயதிலிருந்தே சமூக சேவையில் எனக்குப் பெரிதும் நாட்டம் உண்டு. வளர வளர, அந்த ஆர்வமும் வளர்ந்து கொண்டே இருந்தது.

முதல் முதலாக ஒரு சிறு முயற்சியைத் தொடங்கினேன். 'எழுத்தறிவுத்திட்டம்' அறிமுகமாவதற்கு முந்திய கால கட்டம் அது. எங்கள் ஊரான துவாக்குடி மலைப்பகுதியில் ஒரு மையம் அமைத்து, படிப்பறிவற்ற ஏழை எளிய மக்களுக்குக் கையெழுத்துப் போடவும், எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளவும் ஏற்பாடு செய்தேன்.

ஆரம்ப நாட்களில் இது என் சொந்தச் செலவில் தான் நடந்து வந்தது. படிப்படியாக இதனை விரிவுபடுத்த விரும்பியபோது, அதற்குப் பொருளுதவி தேவைப் பட்டது. அதுவரை என் முயற்சி-யைப் பாராட்டிப் பேசி வந்தவர் கள் 'பொருளுதவி' என்றதும் தலை மறைவாகிவிட்டனர்.

அச்சமயத்தில் திரு. சுரேஷ் என்பவர் அறிமுகமானார். எனக்கு தைரியமளித்துப் பிரச்சனைகள் விலக உதவி செய்தார்.

1991-ம் ஆண்டு HEAD என்னும் சமூக நல அமைப்பைத் தொடங்கி மாநில அளவில் அதன் செயலாளராக இயங்கி வருகிறேன். இவ்வமைப்பு இப்போது 32 கிளைகளுடன் 5 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

வரதட்சணைக் கொடுமையை அகற்றுதல், ஏழைமக்களுக்குப் படிப்பறிவு அளித்தல், கிராமப் புறங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவது போன்ற பல பணிகளில் இவ்வமைப்பு ஈடுபட்டு வருகிறது.தவிர, ஊனமுற்றோர் - பார்வையற்றோர் ஆகியோருக்காகத் தொழில் பயிற்சிக் கூடம் நிறுவுவது, அனாதை மாணவர்கள் இல்லம் அமைப்பது போன்ற பணிகளுக் கான அடிப்படை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திருச்சி நகர பெண்ணுரிமை பாதுகாப்பு சங்கம் சென்ற வருடம் 'மாவட்டத்தின் சிறந்த பெண்மணி' யாக என்னைத் தேர்ந்தெடுத்தது.

என்னைப் பொறுத்தவரை என் லட்சியக் கனவு ஓரளவுதான் நிறை வேறியிருக்கிறது. இது ஆரம்பம் தான். செய்ய வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

ஜே. லட்சுமி.
துவாக்குடி.மலை-தெற்கு - 620 022

வாழ்க்கையில் வெற்றி பெற தேவை – மன உறுதி

ஒரு லட்சியம், அதை அடையும் ஆர்வம், அதற்கான உழைப்பு, வைராக்கியம் — வெற்றியின் பின்னணியில் இருப்பவை இவை. இவை தவிர, தேவைப்படும் நிதியுதவியைப் பெறும் வாய்ப்பும் அவசியம்.

ஸ்ரீராம் சிட்ஸ் 21 ஆண்டுகளாக ஒரு வலுவான இயக்கமாகத் திகழ்ந்து வருகிறது. தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுலபமான வாய்ப்பை அளித்து வருகிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எண்ணற்ற பேர் தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஸ்ரீராம் சிட்ஸ் உங்கள் லட்சியங்களை அடைய உதவும் பாலமாக விளங்குகிறது. இந்த மகத்தான மக்கள் இயக்கம் உங்களுக்கு அளிப்பது

- கௌரவமான முறையில் ஒருவருக்- கொருவர் உதவிக்கொள்ளும் வாய்ப்பு
- தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப விரைவாகப் பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதி.

ஸ்ரீராம் சிட்ஸ் துணையுடன் 7 லட்சம் சந்தாதாரர்கள் பயனடைந்து வருகிறார்கள். நீங்களும் இன்றே ஸ்ரீராம் குடும்பத்தில் உறுப்பினராகுங்கள். உங்கள் வெற்றிக்கு வழி காணுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ், நம்பிக்கை. ஊக்கம். வெற்றி.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ்
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274451/8275536/8270400/8273932.

ஸ்ரீராம் சிட்ஸ் – உங்கள் வளமைக்குப் பாதை



சேர்த்து விடுவேன். இதைச் செய்வதற்குப் போதிய பலம் எனக்கு இருக்கிறது. சந்தேகமில்லை. அக்கினி தேவன் இந்திரனிடம் அவியைக் கொண்டு போய்ச் சேர்ப்பதைப் போல் ராமசந்திரனிடம் உம்மைக் கொண்டு போய்ச் சேர்ப்பேன். புண்ணியவதியே! உத்தரவிடுவீர். இன்றே ராகவனை நீர் பார்க்கலாம். தம்பியுடன் உட்கார்ந்திருக்கும் ராமசந்திரனிடம் இன்றே நீர் போய்ச் சேருவீர். சந்தேகம் வேண்டாம். ராவணனோடு லங்கை முழுவதையும் தூக்கி, ராமன் காலடியில் கொண்டு போய்ச் சேர்ப்பேன். இதுவும் என்னால் முடியும். என்னை யாரும் தடுக்க முடியாது. என் முதுகின்மேல் ஏறி உட்கார்ந்தீரானால் நீரே பார்ப்பீர். ரோஹிணி நட்சத்திரம் சந்திரனிடம் சேருவது போல் ராமசந்திரனிடம் சந்தோஷமாக நீர் அடைவீர். இவ்விடம் எப்படி வந்தேனோ அப்படி இங்கிருந்து அவ்விடம் உம்மை எடுத்துப் போய்ச் சேருவேன், நீரே பார்ப்பீர்.''

இப்படி அன்பும் உற்சாகமும் பொங்கி வர, ஹனுமான் சொல்லிக் கொண்டே போனான். சீதை ஆச்சரியப்

பட்டாள். இந்தச் சிறிய வானரம் எப்படி என்னைத் தூக்கிக் கொண்டு கடலைத் தாண்ட முடியும் என்று சந்தேகித்தாள். இதை உணர்ந்து கொண்ட ஹனுமான் தன் சக்தியைப் பிராட்டிக்குக் காண்பிப்பதற்காக மேடையிலிருந்து கீழே குதித்துத் தன் வடிவத்தைப் பெருக்கிக் கொண்டான். பருவதாகாரமாக வளர்ந்தான். சீதை அதைப் பார்த்துப் பெரு மகிழ்ச்சியடைந்தாள்.

''வாயு புத்திரனே! உன் சக்தியை நான் உணர்ந்தேன். ஆயினும் நீ என்னை எடுத்துப் போவது உசிதமல்ல. வழியில் அரக்கர்கள் உன்னைத் தடுத்து யுத்தத்துக்கு இழுப்பார்கள். உன்மேல் பாய்வார்கள். ஆயுதங்களை வீசி எறிவார்கள். நீ என்னைக் காக்க வேண்டியதாகும். கவலைப்படுவாய். யுத்தத்தில் உன் புத்தியைச் செலுத்துவது கஷ்டமாகும். எவ்வளவு பலவானாயினும் யுத்தத்தில் வெற்றி என்பது நிச்சயமான விஷயம் அல்ல. உனக்கு அபாயம் நேர்ந்தால் என் கதி என்ன? உன் மேல் அரக்கர்கள் பாய்ந்தும் ஆயுதங்கள் வீசியும் போர் நடந்து கொண்டிருக்கும் போது நான் தைரியமாய் உன் முதுகின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா? நழுவிக் கடலில் விழுவேன். இவற்றையெல்லாம் யோசித்தால் என்னை எடுத்துக் கொண்டு நீ கடலைத் தாண்டுவது சரியல்ல, என்பது விளக்கம். தவிர, ஹனுமானே! நீ வந்து என்னை, அரக்கர்களுக்குத் தெரியாமல் எடுத்துப் போய் விட்டால் அது என் நாதனுடைய வீரத்துக்குக் குறைவாகுமே! ராவணனை எதிர்த்துப் போர் செய்து என்னை மீட்டால் அல்லவோ க்ஷத்திரிய குலத்துக்குக் கௌரவமாக இருக்கும்? ராவணன் என்னைத் திருட்டுத்தனமாக எடுத்துவந்த மாதிரி ராமனும் போர் செய்யாமல் என்னை அடைவது சரியாகுமா? அப்பனே! நீ திரும்பிப் போய் ராமனையும் லக்ஷ்மணனையும் வானர சேனையையும் அழைத்து வா! ராமனுடைய பாணங்களால் லங்கை அழிந்து ராவணன் யமாலயம் அனுப்பப்பட வேண்டும். வெற்றி நமது என்பதில் சந்தேகமில்லை. ராமனுடைய பாணங்கள் பிரளய காலச் சூரியனைப் போல் இந்த ராவண சமூகத்தை எரித்து நாசமாக்கும்'' என்றாள்.

(தொடரும்)



சிதம்பரம் வாசகர்களே திரண்டு வாருங்கள்!

மன்மோகன் சிங்கின் பட்ஜெட் அறிக்கையை விட, சிதம்பரம் பகுதி மக்களின் குறைப் பட்டியல் வெகு நீளம்! நாம் கவனித்த அளவில் அதில் உண்மை இல்லாமல் இல்லை. முனிஸிபாலிட்டியில் பணமில்லை என்பது நிதர்சனமாகத் தெரிந்தாலும் இதை ஒரு சமாதானமாக ஏற்றுக்கொள்ள முடியாது. சீரமைப்பு மிக அவசியம்; அவசரம்.

எல்லாவற்றையுமே சீர் செய்யாவிட்டாலும் நகரின் மூன்று அத்தியாவசியத் தேவைகளை, சம்பந்தப்பட்டவர்களுக்கு வலியுறுத்திச் சொல்ல கல்கி உங்களோடு கை கோர்க்கிறது!

பின்வரும் கூப்பனில், சிதம்பரம் நகர வாசகப் பெருமக்கள் கையெழுத்திட்டு மார்ச் 6 அன்று மாலை 4.00 மணிக்கு சிதம்பரம், பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ள கல்கி வாசகர் வட்ட விழாவிற்குக் கொண்டு வாருங்கள். உங்கள் அரப்பிரதிநிதி ஒருவர் முன்னிலையில், நகரின் பிரதான குறைகளை நிவர்த்தி செய்யக் கோரும் மனுக்களை, அரசாங்கத்தில் முக்கியப் பொறுப்பில் உள்ள ஒருவரிடம் சேர்த்து, ஆவன செய்யக் கோருகிறோம்.

கூப்பனில் உள்ளதைத் தனித் தாளில் எழுதியும் விலாசத்துடன் கையெழுத்திட்டு எடுத்து வரலாம்.

1. கரடுமுரடான சாலைகளை உடனே செப்பனிட வேண்டும். நகரில் எங்கும் நிறைந்திருக்கும் சாக்கடைகளை மூடி, ஒழுங்கான டிரைனேஜ் வசதி தேவை.
2. நல்ல குடிதண்ணீருக்கான ஏற்பாட்டை உடனே செய்யுங்கள்.
3. ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பது மிகமிக அவசியம்.

மேற்கண்ட மூன்று விஷயங்களை, நகரின் மிக அத்தியாவசியத் தேவைகளாகக் கருதுகிறேன். உடன் ஆவன செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்!

விலாசம் : .... பெயர் : ....

.... ஒப்பம் : ....

.... தேதி : ....

வானவில்லுக்கு வண்ணங்கள் ஏழு!

V ●● கற்பகம் ஏஜென்ஸீஸ் என்ற கடை முகப்புடன் கூடிய வீட்டுக்குள் நுழைந்தால் ஒரு கலைக் கண்காட்சியே காத்திருக்கிறது. வீட்டின் திறந்த முற்றத்தில் இளஞ்சூரிய ஒளியில் அமர்ந்தபடி, மரப் பலகை விநாயகரை அழகுபடுத்திக் கொண்டிருக்கிறார் ராஜலக்ஷ்மி. பிள்ளையாரின் தாமரை ஆசனத்துக்கு வெல்வெட் துண்டுகள் ஒட்டி, நகைகளுக்கு ரேக்கும் வளையான பார்டருக்கு மெல்லிய சரிகை இழையும் பார்த்துப் பார்த்து நீவிச் சேர்க்கிறார். வீடெல்லாம் ராஜலக்ஷ்மியின் கைவண்ணம். இயற்கைக் காட்சிகளின் ஆயில் பெயின்டிங், பிளாஸ்டிக் விசிறிகளில் பறக்கும் பட்டுப் பூச்சி, ஹார்லிக்ஸ் பாட்டிலுக்குள் பசுஞ்சோலை என்று விதவிதமான வனப்புகள். ராஜலக்ஷ்மி, தம் கை வண்ணத்தைப் போட்டிகளுக்கு அனுப்பி, பரிசு பெற ஆரம்பித்துள்ளது சமீபத்தில் தான். அதற்கு முன் உருவான கலை வண்ணங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அன்பளிப்பாய்ப் போய்ச் சேர்ந்தன. ராஜலக்ஷ்மியிடம் இப்போது உள்ளூர் பெண்கள் வந்து கலைகளைக் கற்றுக் கொள்கிறார்கள்.

I ●● வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்று பிரசாரம் பலமாக நடக்கிறது. ஆனால் அதை நடைமுறைப் படுத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது பழனியுடன் பேசும் போது புரிந்தது. சிதம்பரத்தில் இயற்கை பாதுகாப்பு நிறுமம் என்ற அமைப்பின் மூலம் மரக் கன்றுகளை விநியோகித்து, மக்களை வளர்க்கச் செய்து வருகிறார் பழனி.

''மரக் கன்றுகளை இலவசமாகத் தருவதாகச் சொன்னாலும், பிரயோஜனமில்லை. யாரும் வாங்க வருவதில்லை! நாங்களே பள்ளிகளுக்குச் சென்று அங்கு மாணவர்களைக் கொண்டு நடச் செய்கிறோம். எல்லாப் பள்ளிகளிலும் மரங்களின் அவசியத்தைக் குறித்தும் இயற்கைச் சூழல் பாதுகாப்புப் பற்றியும் பேசுகிறோம். வீடுகளில் ஒரு சிலரை 'கன்வின்ஸ்' பண்ணி மரம் நட வைத்தால் அதைத் தொடர்ந்து காப்பாற்றுவது பெரிய சவால். மரம் வளர வளர, டெலிபோன் அல்லது மின்வாரியக்காரர்கள் வந்து, அது ஒயர்களுக்கு இடையூறாக இருப்பதாகக் கூறி வெட்டி விடுகிறார்கள். ஏதாவது கேட்டால் 'உனக்கு கரண்ட் முக்கியமா, மரம் முக்கியமா?' என்று திருப்பிக் கேட்கிறார்கள்'' என்கிறார் பழனி.

B ●● ''ஒரு போஸ்ட் கார்ட் போடுங்கள் போதும். எந்த நுகர்வோர் பிரச்னையையும் கவனிக்க ஆஜராகிவிடுவேன்'' என்கிறார் உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழுச் செயலர் அப்பாவு. திருச்சி வட்டத்தின் கீழுள்ள தமிழக நுகர்வோர் அமைப்புகள் பதிவேட்டுள், சிதம்பரம் கிளை மிகச் சிறப்பாகச் செயல்படும் அமைப்பாகத் தேர்வு பெற்றுள்ளது. ''சிதம்பரத்தின் சாலைப் பிரச்னையை விடவும், சுகாதாரக் கேட்டை விடவும் பெரிய நுகர்வோர் பிரச்னை என்ன இருக்க முடியும்? அதுக்கென்ன செஞ்சீங்க?'' என



● ராஜலக்ஷ்மி



● ஏ.எல். சிதம்பரம்



● சின்னத்தம்பி



● அப்பாவு



● சிவகுமார்

● ப. பழனி



● ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர்

G ●● ''மறுநாள் வீட்டில் ஒரு விசேஷம். கையில் சல்லிக் காசில்லை. நடராஜர் சந்நிதி முன்வால் நின்று சிம்மேந்திர மத்யமத்துல 'இராவாதிருக்க நீ இன்றே அருள் தா' என்ற கீர்த்தனையைப் பாடினேன். மனமுருகிப் பாடி முடிச்சு நிமிர்ந்தப்போ ஒரு அன்பர் இரண்டாயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடுத்தார். நடராஜர்தான் காப்பாத்திண்டு வரார். நான், பாட்டு சொல்லிக் கொடுத்துப் பணம் வாங்கிக்கற தில்லை....'' என்கிறார் ஸ்வர்ண வேங்கடேச தீக்ஷிதர்.

இவர் இயற்றிய கீர்த்தனைகளையும் பல்லவிகளையும் பாடத் தனித் திறமை வேண்டும். சென்னை சபாக்களின் 'கடாக்ஷம்' சமீபத்தில்தான் இவர் பக்கம் திரும்பின. இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு டிசம்பரில் தலைமையேற்க அழைப்பும், விருதும் இவரைத் தேடி வந்தன. 'சங்கீத கலா சிகாமணி' என்ற சென்னை விருதை விட அதிகமாய் இவர் போற்றுவது 'சர்வஜன உபகாரி' என்று காஞ்சி முனிவர் அளித்த பட்டத்தை.

அப்பாவுவைக் கேட்டால், ''முனிசிபாலிடியில் பணம் இல்லை என்கிறார்கள். கணக்கு விவரங்களைக் கடஓருக்கு எழுதிக் கேட்டிருக்கேன்....'' என்கிறார். இவர் ஜனதா தள முந்நாள் உறுப்பினர். உண்ணாவிரதங்கள் இவரின் விசேஷ ஆயுதம்!

Y ●● குறை கூறலாம்; தீர்ப்புக்கு யோசனைகளும் சொல்லலாம்; ஆனால் செயல்பாடு?

''செயல்பாடு உயர வேண்டும் என்றால் முதலில் மனோபாவம் மாற வேண்டும். அதற்கான முயற்சியில்தான் நாங்கள் இறங்கியிருக்கிறோம்'' என்கிறார் ஏ.எல். சிதம்பரம்.

பாலக்காட்டு வாசகர்களே!

ரெடியா? அடுத்தது உங்கள் ஊர்ச் சிறப்பிதழ் தான்! எடுங்கள் பேனாவை. நீங்கள் தயாரிக்கப் போகிற இதழில், என்னென்ன இடம்பெற வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதையெல்லாம் எழுதி அனுப்புங்கள். உங்கள் ஊர்ச் சிறப்புகளைச் சொல்லும் கதையோ, கட்டுரையோ, குறிப்புகளோ, குறைகளோ, நிறைகளோ, பிரமுகர்கள் பற்றிய தகவலோ – மார்ச் 15 ஆம் தேதிக்குள் அனுப்பி விடுங்கள். நீங்கள் தருகிற தகவல்களின் அடிப்படையில், எம் நிருபர்கள் அங்கு வந்து பார்த்த பின் வெளியிடுகிறோம்.

ரெடி, ஜூட்!

– ஆசிரியர்.

சிதம்பரத்தில், மக்கள் சக்தி இயக்க அமைப்பாளர்களுள் முதன்மையானவர்.

'வெற்றியின் ரகசியம்' என்று பல் கலைக் கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்த அடிகோலியிருக்கிறார். ''என்ன தான் நாம் முயன்றாலும் மக்கள் இதையெல்லாம் தீவிரமாக எடுத்துக் கொள்வதில்லை. ஒரு கூட்டம் போட்டால் பத்து பேர்கள் கூட வரமாட்டேன் என்கிறார்கள். இந்தப் பகுதி சமூக, பொருளாதார வளர்ச்சியில் மேம்பட இன்னும் ரொம்ப தூரம் போயாக வேண்டும்!'' என்று வருத்தப்படுகிறார்.

O ●● நாதஸ்வர வாசிப்பில், 'மல்லாரி' என்பது ஒரு ஸ்பெஷல் ஐட்டம். கோவில்களில் ஸ்வாமி புறப்பாட்டின் போது கம்பீரநாட்டை ராகத்தில் முன்னால் வாசித்துப் போவார்கள். சிதம்பரத்தில் இது வெகு விசேஷம். ராதாகிருஷ்ணன் பிள்ளை என்பவர் இதில் எக்ஸ்பர்ட். சாகித்யம் கிடையாது. வெறும் ஸ்வரக் கோர்வைகள் மட்டுமே. தாளத்திற்கேற்ப, இன்ஸ்டன்ட் கற்பனைகள் உதித்தாக வேண்டும். கொஞ்சம் பிசகினால் அம்பேல். பிய்த்து உதறிவிடுவார்கள். ராதாகிருஷ்ணன் பிள்ளையின் மறைவுக்குப் பின் அவரது சிஷ்யர் சின்னத் தம்பி, இங்கே இப்பொறுப்பை ஏற்று ஜமாய்த்து வருகிறார். ''சாதாரணமாக எல்லாக் கோவில்களிலும், பத்து நிமிஷம் மல்லாரி வாசிப்பார்கள். அதுவே சிரமம். இங்கு ஒரு மணி நேரம் வாசித்தாக வேண்டும்'' என்கிறார். ''கோவிலுக்கு, தீர்த்தம் கொண்டுவர, தளிகை கொண்டு வர, புறப்பாட்டுக்கு, தேர் உற்சவமானால் அதற்கு என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வித மல்லாரி. ஒவ்வொரு வித ஸ்வர அமைப்பு'' என்கிறார். சமீபத்தில் சிதம்பரம் கோவிலின் ஆஸ்தான வித்வானாக இவரை நியமித்திருக்கிறார்கள். இவரது மல்லாரி வாசிப்புகள் மட்டுமே கேஸட்டாக வெளி வந்திருக்கிறது. ஸ்டார் வெளியீடு.

R ●● எம்.எல்.ஏ. முதல் ஏராளமானோர் இந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சிக்குச் சாத்தியமே இல்லையென்று சத்தியமே செய்யும் போது, இளைஞர் ஒருவரின் குரல் வித்தியாசமாய் ஒலிக்கிறது. அவர் சிவகுமார். சொந்தமாக விவசாயமும் கொஞ்சம் பிஸினஸும் பண்ணுகிறார். எம்.பி.ஏ. பட்டதாரி. ''இது கடற்கரையோரப் பிரதேசம் என்பதனால், மீன் பிடிப்புத் தொழில் வளர்ச்சியடைய ஏராள வாய்ப்புகள் உள்ளன. பறங்கிப்பேட்டையில் இறால் வளர்ப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது. எளிமையான தொழில். குறைந்த முதலீட்டில் நிறைய சம்பாதிக்கலாம். தவிர, இங்கு பிரதான தொழிலாகிய விவசாயத்தில் தொழில் நுட்பம் புகுத்தினால் லாபம் அதிகரிக்க நிறைய வாய்ப்பு. இந்தப் பகுதியின் மண், பூ பயிரிடுவதற்கு ஏற்றது. ஒரு கிராமமே ரோஜா பயிரிடுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளது. கனகாம்பரம் பயிரிட்டால், கொள்ளை லாபம் கிடைக்கும்'' என்கிறார் சிவகுமார்.

– நமது நிருபர்கள்.

வாசகர் தகவல் : கமலகுமார், டி. கண்ணன், என்.எம். கிருஷ்ணன், ஆர். வேணுகோபால், பத்மா வரதராஜனு, ஆர்.வி. ஸ்டாலின், உமா பாலகிருஷ்ணன்.



சுப்ரமணிய சுவாமி

முதல் பக்க நபருக்கும் இந்தப் படத்துக்கும் அரிசி மிட்டாய் அளவு சம்பந்தமும் இல்லை என்பதை முன்னதாகச் சொல்லி விட வேண்டும். இது, பாண்டியராஜனின் துடிப்புள்ள மறுபிரவேசம். ஜெயித்தே தீர வேண்டுமென்கிற உத்வேகத்தில், இழுத்துக் கட்டின ஸ்பிரிங் மாதிரி 'விண்'ணென்று திரைக்கதை. முக்கோணக் காதலுக்கு முழு நீள நகைச்சுவை முலாம்.

பா. ராஜனுக்கு ப்ரியாராமன் மேல் காதல். லோ, ப்ரியாவின் அப்பா எதிர்ப்பு. ஏன் எதிர்ப்பு? கதை வளர வேறு வழி இல்லை. அதனால் எதிர்ப்பு. ஆடி, ஓடி ஒரு வழியாக சுபமாவது கிடக்கட்டும்; ஒவ்வொரு இஞ்ச்சிலும் என்ன ஒரு ஹ்யூமர்!

பா. ராஜனுக்கு ஜோடி - நியாயமாகப் பார்த்தால் ப்ரியாராமன் இல்லை. அந்தப் பாட்டிதான்! அந்த டான்ஸ் என்ன, கனவு காணும் நேர்த்தி என்ன, பொல்லாத குறும்புத்தனங்கள் என்ன... பாட்டி வாழ்கவெனக் கூத்திடுவோமடா!

வெறும் பயலாயிருந்தால் பட்சி சிக்காதென்ற ஞானோதயம் உதிக்க, பா. ராஜன் வேலை தேடிப் பழனிக்குப் போகிறதில் பிடிக்கிற சூடு. கொஞ்ச நேரம் தாவெனி னும் - அப்பளம் பொரித்து விடலாம்!

இன்டர்வெல்லுக்குப் பின் நியாகம் பண்ணுவதற்கென்றே வருகிற ஊர்வசி - நடிப்பிலும் நாலைந்து கற்று பெருத்திருக்கிறார். ஆயினும் அடிக்கடி மை.ம. காமராஜன் வாடை வீசுவது தவிர்க்க இயலவில்லை போலும்.

காட்சிகளுக்குப் பொருத்தமாக அவ்வப்போது ஒலிக்கும் பழைய பக்திப் பாடல்களைப் பொறுக்கி எடுத்தமைக்காக டைரக்டருக்குச் செல்லமாக ஒரு கிள்ளு.

அப்புறம் தேவா. ரீ-ரெக்கார்டிங்கில் கூட வஞ்சனையில்லாமல் இளையராஜாவை நகலெடுக்கிறார். அப்படியும் இரண்டு பாடல்கள் தேறி விடுகின்றன.

நடுவில் கொஞ்சம் வேகம் இருப்பினும் ஆரம்பத்திலும் முடிவிலும் அசாத்திய ஆமைத்தனம். நெளிந்து நெளிந்து, களுக்கிக் கொள்ளாத குறை!

– ஆர். பி. ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

அண்ணாமலை செட்டியார் போட்ட அடிக்கல்!

கல்லூரி இல்லாமல்

சிதம்பரத்தில் ராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்ற வர்கள், கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டுமென்றால், ஒன்று கடலூருக்குச் செல்ல வேண்டும்; இல்லையேல் கும்பகோணம் செல்ல வேண்டும். ஆனால் அந்தக் காலத் துப் பெற்றோர்கள் தங்கள் பையன்களை அவ்வளவு தூரம் அனுப்பிப் படிக்க வைக்கத் தயாராக இல்லை. இதன் காரணமாக, ஏராளமான மாணவர்கள் கல்லூரிக் கனவுகள் இருந்தும் பள்ளி இறுதி வகுப்போடு படிப்புக்கு முழுக்குப் போட்டுக் கொண்டிருந்தனர்.



* ராஜா சர் அண்ணாமலை செட்டியார்

* அண்ணாமலை பல்கலைக் கழகம் - முகப்புத் தோற்றம்.



★ ராஜா சர் முத்தையா செட்டியார்

செட்டியாரின் உத்வேகம் :

கல்லூரியில் படிக்க ஆசை இருந்தும், படிக்க முடியாமல் இருந்த இளந்தளிர்களை எண்ணிப் பார்த்தார் செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியார். இங்கிலாந்தில், தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அங்கே கண்ட பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் ஞாபகத்துக்கு வந்தன. கல்விக்காக ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற உத்வேகம் அவரைத் தொடர்ந்து செயல்பட வைத்தது.

லார்ட் பெண்ட்லேண்ட் என்பவர் அப்போது சென்னை ராஜதானியின் கவர்னராக இருந்தார். அவர் ஒரு சிறந்த கல்வியாளரும் கூட. அவரது மனைவி பேரில், இங்கிலாந்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஆஸ்பத்திரிக்கு ஏராளமாக நன்கொடை கொடுத்திருந்த அண்ணாமலை செட்டியார், கவர்னரை நேரில் பார்த்து, மாணவர் குலத்துக்கு உதவ தம் ஆர்வத்தை வெளியிட்டார்.

'மதுரையில் உள்ள மதுரா கல்லூரியைச் செட்டியார் எடுத்துக் கொள்ளலாமே' என்று கவர்னர் யோசனை சொன்னார். ஆனால் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறாததால், அது நடக்கவில்லை. இந்த நிலையில்தான் சிதம்பரம் டவுன் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகம் அண்ணாமலை செட்டியாரின் கைக்கு வந்து சேர்ந்தது.

மீனாட்சி கல்லூரி

1919 இல் சென்னை பல்கலைக் கழகப் பதிவாளருக்கு ஒரு கடிதம் எழுதினார் அண்ணாமலை செட்டியார். "சிதம்பரம் டவுன் உயர்நிலைப் பள்ளியின் நிலையை உயர்த்தி, இண்டர் வகுப்புகள் துவங்க அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கட்டத் தயார்" என்றும் தெரிவித்தார். பல்கலைக் கழகம் உடனே ஒரு கமிட்டியை நியமித்து அதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, பச்சைக் கொடி காண்பித்து விட்டது. மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அரசுக்குக் கட்டினார் அண்ணாமலை செட்டியார். 1920 ஆம் வருடம் ஜுலை மாதம் 24 ஆம் தேதி, மீனாட்சி கல்லூரி சிதம்பரத்தில் துவங்கப்பட்டது. மீனாட்சி என்பது செட்டி நாட்டரசரின் அன்னையின் பெயர். செட்டியாரைப் போன்று அவரது அன்னையும் ஈகை குணமும், தயாள சிந்தனையும் கொண்டவர்.

ஹாஸ்டலில் பெற்றோர்கள்!

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, மீனாட்சி கல்லூரி பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில், மிகச் சிறந்த ஆசிரியர்கள் செயல்பட்டனர்.

கல்லூரி, தாற்காலிகமாக ராமசாமி செட்டியார் பள்ளி ஹாஸ்டலில் செயல்பட்டு வந்தது. ஆனால் அந்த இடம் போதவில்லை. ஏனென்றால் மொத்தம் இருந்த 76 மாணவர்களில் பலர் பெற்றோர்களுடன் ஹாஸ்டலில் தங்கியிருந்தனர்! ஆகவே கல்லூரிக்கு வேறு இடம் பார்க்க வேண்டியதாக இருந்தது! சிதம்பரத்துக்குக் கிழக்கே திருவேட்களம் என்றொரு கிராமம் இருந்தது. அர்ஜுனன் சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் வாங்கியதை நினைவுபடுத்தும் புராதனக் கோயில் ஒன்றும் அங்கே இருந்தது. அந்தக் கோயிலைச் சுற்றி உள்ள காலி இடம் கல்லூரிக்கு ஏற்றது என்று எண்ணி, அரசுக்கும், தனியாருக்கும் சொந்தமாக இருந்த அந்த நிலங்களை வாங்கினார், செட்டியார்.

உணவுக் கட்டணம் பதினைந்தே ரூபாய்!

மீனாட்சி கல்லூரி புதுக் கட்டடத்துக்குக் குடிபெயர்ந்தது 1922 இல். தொடர்ந்து ஹாஸ்டல்களும் கட்டி முடிக்கப்பட்டன. வெஜிடேரியன் சாப்பாடுதான். ஆந்திர சமையல் - கொஞ்சம் காரசாரமாகத் தனியே செய்யப்பட்டது! காலை டிபன், காப்பி, மதியம் சாப்பாடு, மாலை டிபன், இரவு சாப்பாடு - எல்லாவற்றுக்குமாக ஒரு மாணவனுக்கு மாதம் 15 ரூபாய்தான் உணவுச் செலவு!

படிப்படியாக, வகுப்புகள் அதிகமாயின. 1925 இல் ஹானர்ஸ் படிப்பு துவங்கப்

பட்டது. தமிழ், சமஸ்கிருதம், இசை சொல்லிக் கொடுக்க தனிக் கல்லூரிகளைத் துவங்கினார் செட்டியார். தண்டாயுதபாணி தீட்சிதர் சமஸ்கிருதக் கல்லூரியைப் பார்த்துக் கொண்டார். உ. வே. சாமிநாத அய்யரின் பொறுப்பில் தமிழ் விடப்பட்டது. சபேச அய்யர் இசைக்குப் பொறுப்பேற்றார்.

தமிழர்களுக்கு ஒரு பல்கலைக் கழகம்

அந்தச் சமயத்தில் தாய்மொழியில் கல்வி சொல்லித் தர வேண்டுமென்ற கோஷம் பலமாக ஒலிக்கத் துவங்கியது. ராஜதானியின் கவர்னராக இருந்த தாமஸ் மன்றோ கூட, தாய்மொழியில் கல்வி போதிப்பதை ஆதரித்து வாதங்களை எடுத்து வைத்தார். ஆந்திர பல்கலைக் கழகம் தோன்றிய காலகட்டம் அது. தமிழர்கள் தங்களுக்கும் ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று போராட்டத்தைத் துவக்கினர். அரசு குமாரசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, பல்கலைக் கழகத்தை எங்கே அமைக்கலாம் என்று சிபாரிசு செய்யச் சொன்னது. விடுவாரா அண்ணாமலை செட்டியார்? உடனே சென்னைக்கு வந்து ரெட்டியாரைப் பார்த்தார். ''எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன். மீனாட்சி கல்லூரி கட்டடங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். சிதம்பரத்தில்தான் பல்கலைக் கழகம் வந்தாக வேண்டும்'' என்று அன்புக் கோரிக்கை வைத்தார்.



செட்டியாரின் யோசனை ஒப்புக் கொள்ளப்பட்டது. இருபது லட்ச ரூபாயை அரசுக்குச் செலுத்தினார் செட்டியார். 1928 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி சட்டமன்றத்தில் அண்ணாமலை பல்கலைக் கழக மசோதா தாக்கல் செய்யப்பட்டது. ''இருபது லட்ச ரூபாய் மட்டுமல்லாமல், மீனாட்சி கல்லூரிக்குச் சொந்தமான கட்டடங்கள், இடங்கள் ஆகியவற்றை அண்ணாமலை செட்டியார், பல்கலைக் கழகத்துக்குக் கொடுத்துள்ளபடியால், அவரும், அவரது வாரிசுகளும், பல அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்றவர்கள் ஆவார்கள்.'' இது மசோதாவில் உள்ள ஒரு ஷரத்து. கவர்னர் வேந்தராகவும், ஸ்தாபகரான அண்ணாமலை செட்டியார் இணைவேந்தராகவும் பொறுப்பேற்றார்கள். பல்கலைக் கழகத்தின் தினசரி செயல்பாட்டினைக் கவனிக்கத் துணைவேந்தரும் நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மீனாட்சிக் கல்லூரி தவிர, சமஸ்கிருதம், தமிழ், இசைக் கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகச் செயல்பட ஆரம்பித்தன. 1930 ஆம் வருடம் கவர்னர் பிரெடரிக் ஸ்டான்லி, செனட் சபையைத் துவக்கி வைத்தார். தமிழர்களின் ஆசை நிறைவேறியது.

ஆலமரம் :

அன்று அண்ணாமலை செட்டியார் ஊன்றிய செடி, இன்று ஆலமரமாக வளர்ந்து ஏராளமான விழுதுகளைப் பதித்துள்ளது. 1948 இல் தாம் இறக்கும் வரை பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார் அவர். அவருக்குப் பின்னர் செட்டி நாட்டரசர் குடும்பத்தாரே - ராஜா சர் முத்தையா செட்டியாரும் தற்போது எம். ஏ. எம். ராமசாமியும் - இணை வேந்தர்களாக இருந்து வருகின்றனர்.

சரித்திரம், தருக்கம் (Logic) ஆகிய இரு பாடங்களை மட்டும் வைத்துத் துவக்கப்பட்ட மீனாட்சி கல்லூரி, இன்று பல்கலைக் கழகமாக வளர்ந்துவிட்டது. மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் என்று ஒன்பது துறைகள். அதன் கீழ் 40 க்கும் மேற்பட்ட பிரிவுகள். 14,000 மாணவர்கள். அண்ணாமலை என்னும் இந்த ஆலமரம் இன்னமும் விழுதுகள் விட்டுப் படரும். ஆனால் ஆணிவேர் அண்ணாமலை செட்டியார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

* இன்றைய இணைவேந்தர் எம். ஏ. எம். ராமசாமி

அடுத்த நூற்றாண்டை நோக்கும் அண்ணாமலை



• தமிழ் வெளியீடுகள் : சாதனைகளைச் சொல்கிறார் ஓர் அதிகாரி

தமிழுக்குத் தனி மரியாதை!

"இந்தப் பல்கலைக் கழகம் சிதம்பரத்தில் தோற்றுவிக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள். தவியார் ஒருவரின் தர்ம சிந்தனைக்கு அரசு கொடுத்த ஆக்கமும், ஊக்கமும் ஒரு காரணம். இரண்டாவதாக, அன்னை தமிழின் அருமை பெருமைகளை, தமிழ் கலாசாரத்தை, இலக்கியத்தைக் கற்றுத் தர, உணர வைக்க ஒரு மையம் தேவை என்ற உலகமெங்கிலும், உள்ள தமிழர்களின் விருப்பமும் ஒரு காரணம்" - அண்ணாமலை பல்கலைக் கழகத் துவக்க விழாவில் திருவளர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பேசியதன் ஒரு பகுதி இது.

செட்டி நாட்டரசர் வெறும் வாய்ச் சொல் வீரரல்ல; பெரிய, பெரிய புலவர்கள், தமி முதிஞர்களைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்துத் தமிழ்ப் பணியாற்ற வைத்தார். மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாத அய்யர், பேராசிரியர் கே. சுப்பிரமணியபிள்ளை, சுவாமி விபுலானந்தா, நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டித மணி கதிரேசன் செட்டியார் ஆகியோர் தமிழ்த் துறையின் தலைவர்களாக இருந்து சிறப்பு சேர்த்து இருக்கிறார்கள். டாக்டர் ரா. பி. சேது பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார் ஆகியோர் பேராசிரியர்களாகப் பணியாற்றி, தமிழின் பெருமையை மாணாக்கர்களுக்கு உணர்த்தி இருக்கிறார்கள்.

இந்தப் பெயர்களைக் கேட்டாலே பிரமிப்பாக இருக்கிறதென்றால், கடந்த 63 ஆண்டு கால வரலாற்றில் தமிழ் இலக்கியம், இலக்கணம், தத்துவம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றை நிலை நிறுத்தவும் பரப்புவதற்காகவும், தமிழ்த் துறையும், அதனுடன் இணைந்து பணியாற்றிய அறிஞர் பெருமக்களையும் பற்றிச் சொல்வதற்கு, இன்னோர் இலவச இணைப்பு தேவைப்படும்!

பல்கலைக் கழகத்தின் பதிப்பகத் துறை, கம்ப ராமாயணத்தைப் பதினாறு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டிருக்கிறது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பழைய சுவடிகள், கையெழுத்துப் படிவங்கள் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துப் பதிப்பித்து விடுகிறார்கள். இதைத் துவக்கி வைத்தவர் உ. வே. சாமிநாதய்யர்தான்.

தமிழ்த் திருமறைகளுக்கு உரை வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்த் துறையில் திருக்குறளுக்கென்று தனி இருக்கை (seat) இருக்கின்றது. சித்தர் பாடல்களையும், திருக்குறளையும் ஒப்பிட்டு ஆராய்கிறார்கள். மலர் பண்பாட்டு வரலாறு, தமிழ் பண்பாட்டு வரலாறு, மந்திர மாலை முந்நூறு போன்ற விஷய கனம் பொருந்திய நூல்கள் வெளியாகியுள்ளன.

கிட்டத்தட்ட 19 அறக்கட்டளைகள் மூலம், வருடம் முழுவதும் சொற்பொழிவுகள், இலக்கியக் கூட்டங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. தமிழ் ஆராய்ச்சிக்கு நிதி ஆதரவு தரப்படுகிறது. சில ஆதீனங்களும் இதற்கு உதவுகின்றனர்.

''நாளும் பொழுதும் அண்ணாமலை செட்டியாரின் விருப்பத்தை மனத்தில் கொண்டே செயல்பட்டு வருகிறோம்'' என்கிறார் துறையின் தலைவரான டாக்டர் எஸ். சுவாமி அய்யா.

கல்கி வாசகர்களுக்கு ரொம்ப நெருக்கமான ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமானால், சதாசிவ பண்டாரத்தாருக்கும் அவரது ஆராய்ச்சிக்கும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் ஆதரவு இல்லையென்றால், அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் என்ற மகத்தான படைப்பு உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிராது!



◆ சுவாமி அய்யா

(படம் : பல்கலைக் கழக புகைப்படப் பிரிவு)

மாணவர்கள்!

● கணிப்பொறிப் பிரிவு : பார்வையிடுகிறார் அய்யாக்கண்ணு...



(படம் : பல்கலைக் கழக புகைப்படப் பிரிவு)

தொலைவிலிருந்து தொடரும் படிப்பு

"அம்பேத்கார், ஆறு எம். ஏ. பட்டங்களைப் பெற்று சாதனை படைத்திருக்கிறார். அதை வென்று காட்ட வேண்டுமென்பதுதான் என் குறிக்கோள். ஏற்கெனவே மூன்று எம். ஏக்களைப் பெற்று விட்டேன். இப்போது மனதத்துவத்தில் (psychology) எம்.ஏ. படித்து வருகிறேன்" என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார் ஸ்டான்லி. இவரைப் போன்று சாதனை படைக்கும் எண்ணம் கொண்டவர்கள் மட்டுமல்லாமல், கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாதவர்கள், வேலைக்குச் சென்று கொண்டே படிப்பைத் தொடர்பவர்கள் என்று எந்தவித வயது வித்தியாசமும் இன்றி, லட்சக்கணக்கான பேர்களுக்கு, தபால் மூலம் படிப்பு சொல்லித் தருகிறது அண்ணாமலை பல்கலைக் கழகம்.

ஜஸ்டிஸ் சோமசுந்தரம், துணைவேந்தராக இருந்தபோது துவக்கப்பட்ட இந்த தபால் படிப்பு, இன்று சாதனை படைத்திருக்கிறது. நாட்டில் ஏழு லட்சம் பேர் தபால் மூலம் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்றரை லட்சம் பேர் அண்ணாமலையில்தான் பயின்று கொண்டிருக்கிறார்கள்! இந்த வகையில் நாட்டிலேயே முதலாவதாக இருக்கிறது பல்கலைக் கழகம். தபால் மூலம் கல்வி பயிற்றுவிப்பதில் இரண்டு பிரிவுகள். ஒன்று அடிப்படையான தகுதி உள்ளவர்கள் சேரும் பிரிவு; மற்றொன்று திறந்தவெளி பல்கலைக் கழக அமைப்பு (Open University System).

"தமிழ்நாட்டில் மற்ற இரண்டு பல்கலைக் கழகங்கள் தபால் கல்வியைத் துவக்கிய பின்னர் தான் நாங்கள் ஆரம்பித்தோம். ஆனால், இன்று முதலாவதாக இருக்கிறோம். இதற்குக் காரணம், மாணவர்களுக்கு எந்த விதப் பிரச்னை வந்தாலும், அதைத் தீர்த்து வைக்க நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், சரியான வழி காட்டு முறைகள், எங்கள் ஊழியர்களின் கடுமையான உழைப்பு இவை தாம்" என்கிறார் துறையின் இயக்குனரான டாக்டர் கே. அய்யாக்கண்ணு.

"நாங்கள் 'Spot Admissions' முறையைத் துவக்கி உள்ளோம். தமிழ்நாட்டில் எல்லா மாவட்டத் தலைநகரங்கள், வெளி மாநிலங்களில் முக்கியநகரங்கள் ஆகியவற்றில் படிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. வருடத் துவக்கத்தில் நாங்கள் அங்கேயே சென்று, சான்றிதழ்களைப் பரிசோதித்து வகுப்பில் சேர்த்துக் கொள்கிறோம். ஆறு மாதங்களுக்குத் தேவையான பாடங்களை அப்போதே கையில் கொடுத்து விடுகிறோம்" என்கிறார் அய்யாக்கண்ணு. தபாலில் அனுப்பும் பாடங்கள், சான்றிதழ்கள், தொலைவதைத் தவிர்க்க இம்முறை உதவுகிறது.

"படிப்பு சொல்லிக் கொடுக்கும் முறையிலோ, பாடத் திட்டங்களிலோ எங்களுக் கொன்றும் பிரச்னை இல்லை. ஆனால் பரீட்சை முடிவுகளைத் தெரிவிப்பதற்குத்தான் கால தாமதமாகிறது. இதைத் தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும்" என்கிறார் ஸ்டான்லி.

பல்கலைக் கழகத்தின் பரீட்சைப் பிரிவுதான் (Board of Examinations) பரீட்சைகளை நடத்தி முடிவுகளை வெளியிடுகிறதாம். "நாடு முழுக்க... ஏன், வெளிநாட்டில் படிப்பவர்கள் உட்பட, எல்லோருடைய விடைத்தாள்களும் ஒரே இடத்தில் திருத்தப்படுவதால், சற்று கால தாமதம் ஏற்படுகிறது. இதைச் சீர்செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன" என்கிறார் இயக்குனர்.

தினசரி வரும் ஆயிரக்கணக்கான வங்கி டிராப்டுகள், முறையாகக் கணிப்பொறிகளில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்காகப் பெரிய கணிப் பொறி மையம் இயங்குகிறது. விஞ்ஞானத்தில் பட்ட மேற்படிப்பைத் தபால் மூலம் சொல்லிக் கொடுக்கும் ஒரே பல்கலைக் கழகம் இதுதான். இதன் மாணவர்கள் வருடத்திற்கு ஒரு முறையோ, இரு முறையோ பல்கலைக் கழகத்துக்கு வந்து பிராக்டிகல் வகுப்பில் கலந்து கொள்கிறார்கள்.

"வரும் ஆண்டில் எம்.பி.ஏ. துவக்க இருக்கிறோம். மேலும், ஏற்கெனவே வேலையில் உள்ள டிப்ளமா படித்திருக்கும் தொழில் நுட்பப் பிரிவினருக்குப் பொறியியலில் பட்டப் படிப்பு சொல்லிக் கொடுக்கவும் இருக்கிறோம்" என்றார் அய்யாக்கண்ணு.

பாடங்களை அச்சிட நவீன அச்சகம் ஒன்றையும் நடத்தி வருகிறது பல்கலைக் கழகம். பல்கலைக் கழகத்தின் வருமானத்தில் கணிசமான பகுதி தபால் படிப்புத் துறையின் மூலமாகத்தான் வருகிறதாம்!

சைலன்டாகிப் போன சர்வ கலா(ட்டா) சாலை!

'உம்' என்றால் ஊர்வலம்; 'ஏன்' என்றால் போராட்டம்! மிகச் சாதாரண காரணங்களுக்கெல்லாம் கூட போராட்ட ஆயுதத்தை அண்ணாமலை மாணவர்கள் கையிலெடுத்ததுண்டு. இந்தச் சர்வகலாசாலைச் சூழ்நிலையைப் பற்றி அமரர் கல்கி வேடிக்கையாக, ''சர்வ கலா(ட்டா) சாலை'' என்று தலைப்பிட்டு எழுதியதும் உண்டு!

திராவிட இயக்கங்களின் வரலாற்றிலும் ஹிந்தி எதிர்ப்புப் போராட்ட சரித்திரத்திலும் அண்ணாமலை மாணவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகளுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், பின்னாட்களில் எஸ்.டி.எஸ்., பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் உருவானது அண்ணாமலையில்தான். அப்போதெல்லாம் மாணவர் பேரவைத் தேர்தல் பொதுத் தேர்தலைவிட காரசாரமாகவும், போட்டி நிறைந்ததாகவும் இருக்கும்! இதை நினைவூட்டினால், ''நீங்கள் பழம் பெருமையைச் சொல்கிறீர்கள். அதெல்லாம் இப்போது நடக்காது'' என்று கூறும் மாணவர்கள், அதற்கான காரணங்களையும் விளக்குகிறார்கள்:

★ பட்டப் படிப்பு இப்போது கிடையாது. பட்ட மேற்படிப்புதான். எனவே படிப்பில் கருத்துள்ளவர்கள்தான் வருகிறார்கள்.

★ தொழில் படிப்புக்கு நிறையச் சம்பளம் தந்து சேர்கிறார்கள். கொடுத்த காசுக்கு நல்ல கல்வி பெறத்தான் விரும்புவார்கள்.

★ இன்டர்னல் அஸெஸ்மென்ட் இருப்பதால் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லையென்றால் குறி வைக்கப்படுவோமோ என்ற அச்சம் இருக்கும்.

★ பட்ட மேற்படிப்பு, தொழிற் கல்வி என்றிருப்பதால் படிக்க வேண்டியவை ஏராளம். அதற்கே நேரம் போதாது. எனவே, இதர விஷயங்களில் கவனம் திரும்புவதில்லை.

'இப்படி காரணங்களைச் சொல்லும் மாணவர்கள், ''நியாயமான கோரிக்கைகளை முன் வைக்கக் கூட இங்கே ஓர் அமைப்பு கிடையாது'' என்கிறார்கள். இவர்களுக்கு உள்ள முக்கியமான குறை ஹாஸ்டல் சாப்பாடு தரமாக இல்லை என்பதுதான். இதை வி.ஸி.யின் கவனத்துக்குக் கொண்டு வர அவர் கூறுகிறார் : ''படிப்பு சொல்லிக் கொடுப்பது பற்றி அவர்கள் எந்தக் குறையும் சொல்லத் தயாராக இல்லை அல்லவா! அந்தமட்டில் மகிழ்ச்சி! நியாயமான எந்தக் குறை சொன்னாலும் அதைக் களைவதற்கு நான் தயாராக இருக்கிறேன். சாப்பாடு போடுவது ஒப்பந்த அடிப்படையில் விடப்பட்டுள்ளது. மாணவர்களின் சம்மதத்தின் பேரில்தான் இதைச் செய்து இருக்கிறோம். ஒப்பந்தத்தை நடுவில் முறிக்க முடியாது. ஒப்பந்தம் போட்டவர்கள் விலைவாசி உயர்வினால், தரத்தைக் குறைத்து விடுகிறார்கள். தரத்தைக் குறைக்கக் கூடாதென்று வலியுறுத்தி வருகிறோம். மாணவர்களின் உரிமைகள் மதிக்கப்படும்.''


✱ நெடுஞ்செழியன்


✱ அன்பழகன்


✱ மதியழகன்


✱ எஸ். டி. எஸ்.


✱ பண்ருட்டி ராமச்சந்திரன்

முத்துக் குமாரசாமி பதவியேற்ற பிறகு, வருஷக்கணக்கில், ஒரே பதவியில் இருந்தவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்துள்ளார். ஊழியர்களின் வாரிசுகளுக்கு மெடிகல், இன்ஜினீயரிங் கல்லூரிகளில் இடம் ஒதுக்க வழி செய்து இருக்கிறது. தகுதி, திறமை எங்கேயிருந்தாலும் பயன்படுத்திக் கொள்கிறார். இப்படிப்பட்ட பண்பாளர் இருக்கும்போது மாணவர்கள் எதற்குப் போராட வேண்டும்? பிரச்னைகள் ஏதும் இருந்தால் பேசியே தீர்த்துக் கொள்ளலாமே'' என்றார் பேராசிரியர் ஒருவர்.

அதுவும் சரிதான்.





✱ வருங்கால டாக்டர்கள்

நாற்பது கோடி செலவில் நவீன மருத்துவக் கல்லூரி!

அட்டைப்பட கம்பீரக் கட்டடம் அண்ணாமலையின் சமீபத்திய பெருமை - அதற்கான செலவு நாற்பது கோடி ரூபாய்! உள்ளே, எதிர்கால டாக்டர்கள் வெள்ளை கோட்டுகளுடன் உலாவுகிறார்கள்.

பளபளக்கும் படிகளில் ஏறி, துறைத் தலைவர் டாக்டர் வேம்பாரைச் சந்திக்கிறோம். 'பழைய கட்டடங்களிலிருந்து மாறுபட்டு, பகட்டு தூக்கலாகத் தெரியும் மருத்துவத் துறை, கிராமப்புரச் சூழலில் என்ன செய்து கொண்டிருக்கிறது?'



✱ டாக்டர் வேம்பார்

''காந்திஜியின் சேவா கிராமம் போல கிராம சேவை எங்கள் குறிக்கோள்'' என்கிறார் டாக்டர் வேம்பார். ''அதிநவீன மருத்துவ வசதிகளை அடிமட்ட மக்களுக்கும் வழங்க வேண்டும். இப்போது 380 படுக்கைகள் வசதியுடன் எங்கள் மருத்துவமனை செயல்படுகிறது. சீக்கிரமே ஆயிரம் படுக்கைகளாக இது உயரும். சென்ட்ரல் ஏ.ஸி. வசதியுடன் ஆபரேஷன் தியேட்டர்கள், பிரசவ வார்டுகள், இதய நோய்ச் சிகிச்சை பிரிவு என வசதிகள் பெருக்கவுள்ளோம். எட்டு ஆபரேஷன் தியேட்டர்கள் நிறுவ உள்ளோம். அங்கு நடக்கும் ஆபரேஷன்களை மாணவர்கள் டீ.வி. திரையில் பார்க்கும் வண்ணம் வசதிகள் அமைக்கப் போகிறோம்.''

''இங்கே படிப்பதற்கு ஏராளமாகச் செலவாகுமோ...?''

''உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்படிதான் கயநிதிக் கல்லூரிகள் கட்டணம் வசூலிக்க முடியும் என்பது உங்களுக்கே தெரியும்.

அத்நிர்ப்பை முதன் முதலில் அமுல் படுத்தியது நாங்கள்தான் தெரியுமா...? இவ்வளவு அதி நவீனமாய் மருத்துவமனை அமைக்க வேண்டுமானால் நிதியாதாரம் வேண்டாமா...? கட்டடம் கட்டுவதற்கான செலவில் பெரும்பகுதி அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தபால் வழிக் கல்விப் பிரிவிலிருந்துதான் கடனாகப் பெறப் பட்டது. அன்றாட நிர்வாகச் செலவுகளுக்கு மாணவர்கள் செலுத்தும் காபிடேஷன் ஃபீஸ்தான் கை கொடுக் கிறது....''

1985இல் ராஜா முத்தையா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் சயன்ஸஸ் என்ற பெயரில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இன்றைய துணை வேந்தர் முத்துக் குமாரசாமி இக் கல்லூரியின் Dean ஆக இருந்த காலத்தில்தான் (1992) இந்திய மருத்துவக் கவுன்சிலின் அங்கீகாரம் இதற்குக் கிடைத்தது. மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கி நடத்து வது எதிர்காலத் திட்டம்.

அருண்குமார், முகமது சசி என்ற இரண்டு மருத்துவ மாணவர்கள் முறையே இரண்டாம் ஆண்டு, இறுதியாண்டு வகுப்பு களில் படிக்கிறார்கள்.

''மருத்துவம் படிக்க விரும்பும் எல்லாருக்குமே அரசு மருத்துவக் கல்லூரி களில் இடம் கிடைக்கிறதில்லை. ஒரு சில மார்க் வித்தியாசத்தில் அட்மிஷன் இழந்தவர்களுக்கெல்லாம் அண்ணாமலை பல்கலைக் கழகம் கை கொடுக்கிறது. இங்கே படிப்புக்கும் சரி, இதர பொழுது போக்கு அம்சங்களுக்கும் சரி, ஆரோக் கியமான சூழ்நிலை நிலவுகிறது...'' என் கிறார் அவர்.

''பிரதான நகரத்திலிருந்து விலகி இருக்கிறதால் கல்லூரியையொட்டிய மருத் துவமனைக்குக் கிராம மக்களே அதிகம் வருவதாகச் சொல்கிறார்கள். இது உண் மையா..? இதனால் சில வகையான கேஸ்களையே அதிகமாகப் பார்க்கிறதும் வேறு சில வகை நோய்களைப் பார்க் காமலே போயிடறதுக்கும் வாய்ப்பு இருக்கு இல்லையா?''

''கிராமப்புறங்கிறதால தொற்று நோய் கேஸ்கள் அதிகமாகப் பார்க்கிறோம். stress

* அருண்குமார்



* சசி



அதாவது மன அழுத்தம்-தொடர்பான நோய்களைப் பார்க்கறது குறையும்.... ஆனால் இதனால் பயிற் சிக்கோ படிப்புக்கோ பெரிய பாதிப்பு இருக்காது. எங்கள் பல்கலைக் கழக மருத்துவப் பிரிவே சிதம் பரம் நகரிலும் பிச்சாவரத்திலும் சுகாதார மையங்கள் நடத்துகிறது....'' இது அருண் குமார்.

''ஒரு பல்கலைக் கழக வளாகத் தில் மருத்துவக் கல்லூரி அமையறது எவ்வளவு அனுகூலம் தெரியுமா?'' என்கிறார் சசி. ''மற்ற பிரிவுகளுடன் தொடர்பு இருந்து கொண்டேயிருக்கிறது. தொழில் நுட்ப ரீதியாகவோ, விஞ்ஞான ரீதியாகவோ எங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க அந்தந்தத் துறைப் பேராசிரியர்களே வந்து உதவ றாங்க...''

''ஆசிரியர்களெல்லாம் ரொம்ப தோழ மையோட பழகறது இங்கதான். வகுப்பு முடிஞ்ச பிறகு நீங்களே பாருங்க...''

- மாறி மாறிப் பேசும் மாணவர் களிடம் பரீட்சை முடிவுகள் பற்றிக் கேட் கிறோம்.

''கலபத்துல பாஸ் பண்ணிட முடி யாதுங்க... சென்ட்ரல் எவேல்யூயேஷன் முறை. இந்த வருஷம் மாணவர்களை விட மாணவிகள்தான் அதிகமாகப் பாஸ் ஆகியிருக்காங்க...'' என்கிறார்கள் இவர் கள்.

அந்தப் பெருமை புன்னகையாக, மாணவிகள் முகத்தில் அரும்புவதை அண்ணாமலையில் பார்க்க முடிந் தது!

டாக்டரை முந்திக் கொண்ட டென்டிஸ்ட்


முத்தையா செட்டியார் இணை வேந்தராக இருந்த காலத்தில் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் பல காரணங்களால் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. 1979 ல் மருத்துவக் கல்லூரி துவங்க, சாத்தியங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்வையிட வந்த அரசுக் குழு, அனுமதி கொடுப்பதை ஒத்திப் போட்டது. இந்த நிலையில், சென்னை பொது மருத்துவ மனையில் பல் மருத்துவ ராகப் பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் ஸ்ரீநிவாசனைக் கூப்பிட்டு அனுப்பினார் முத்தையா செட்டியார். ''மருத்துவக் கல்லூரி ஒரு பக்கம் இருக்கட்டும், பல் மருத் துவக் கல்லூரி மற்றும் ஆஸ்பத்திரி முதலில் கட்டலாம் என்றிருக்கிறேன். நீங்கள் வந்து உதவ முடியுமா?'' என்று கேட்டார். 'சரி' என்று சொன்ன டாக்டர் ஸ்ரீநிவாசன், முதலில் டெபுடேஷனில் ஒரு வருடம் வந்தார்.

''அப்போது வந்ததுதான். ராஜா அவர்கள் கொடுத்த ஆதரவும் ஊக்கமும் என்னை இங்கேயே கட்டிப் போட்டு விட்டன'' என்று சொல்கிறார் ஸ்ரீநிவாசன். இப்போது பல்கலைக் கழகத்தின் பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆஸ்பத்திரியின் தலைவர் இவர்.

பொதுவாகவே மருத்துவக் கல்லூரி துவங்கி, அதனுடன் இணைந்துதான் பல் மருத்துவக் கல்லூரி துவங்கப்படுமாம். ஆனால், நாட்டிலேயே முதலாவதாக, மருத்துவக் கல்லூரி இல்லாமலேயே, பல் மருத்துவக் கல்லூரி மட்டும் துவக்கப்பட்டது அண்ணாமலையில் தானாம்!

''முதலில் ஒரு பழைய கட்டடத்தில் தான் துவக்கினோம். ஒரு நாளைக்கு ஒரு நோயாளி வந்தால் அதிகம். ஆனால் இன்று 250 பேருக்கு மேல் வருகிறார்கள். அந்த அளவுக்கு வசதிகளையும் பெருக்கியுள்ளோம்'' என்கிறார் ஸ்ரீநிவாசன்.


முகத்தை அசிங்கமாகக் காட்டும் தாடை அமைப்பைக் கொண்டவர்கள், பற்களின் வரிசை தாறுமாறாக இருப்பவர்கள் இங்கு வந்தால், முகம் பொலிவு பெற்று விடும். இந்த வகையில் மிக நவீன அறுவை சிகிச்சைகளைச் செய்வதில், பெயர் பெற்றவர் ஸ்ரீநிவாசன்.



பல் மருத்துவத்தில் எட்டு பிரிவுகள் இருக்கின்றன. மருந்து சீட்டு வாங்குமிடத்திலிருந்து, தரையில் போடப்பட்டிருக்கும் எட்டு வித மான கலர் பட்டைக் கோடு கள் புறப்பட்டு, பல மருத்துவ அறைகளுக்குச் செல்கின்றன. சீட்டு வாங்குமிடத்திலேயே, ''பச்சை பாதையில் போங்க... கருப்புப் பாதையில் போங்க... என்று நோயாளிகள் பிரித்து விடப்படுகிறார்கள். வருகிறவர்கள், பெரும்பாலும் படிக்காத கிராமப்புற மக்களாக இருப்பதால், இந்தக் கலர் பாதைகள் அவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. ''டாக்டர் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்க அவசியமில்லாமல், குறிப்பிட்ட கலர் பாதையில் சென்று டாக்டரைச் சந்திக்க முடிகிறது.

இப்போது டாக்டர் ராஜா முத்தையா செட்டியார் பல் மருத்துவக் கல்லூரியில், பட்ட மேற்படிப்பும் (எம்.டி.எஸ்.) இருக்கிறது. ''லண்டனைப் போன்று சிங்கப்

பூரிலும், 1989 ல் இருந்து பல் மருத்துவத்தில் எப்.ஆர்.சி.எஸ். பரீட்சை நடத்துகிறார்கள். சென்ற வருடம் வரை வருடந்தோறும் அந்தப் பரீட்சையில் பாஸ் செய்தவர், இந்தியாவிலிருந்து ஒருவர்தான். அவரும் எங்கள் கல்லூரி மாணவர்தான்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டார் டாக்டர் ஸ்ரீநிவாசன். கிராமப்புற மக்களுக்குச் சிறந்த சேவைகள் செய்வோருக்காக வழங்கப் படும் பிரசித்தி பெற்ற டாக்டர் பி.சி. ராய் விருதைப் பெற்றவர் இவர்!



ரத்தின சபாபதி



பரத்வாஜ்

கூட்டுப்பாடத் திட்டம்; கூடுதல் நன்மை!

இரண்டே மாணவர்களுடன் ஆரம்பித்த இஞ்சினியரிங் துறையில் இன்று ஒன்பது கிளைகளில் ஆர்வலர்கள். சிவில்-ஸ்ட்ரக்சரல்; மெகானிகல்-புரடக்‌ஷன்; எலெக்டிரிகல்-எலக்ட்ரானிக்கல் என்று பொதுவாய் வேறு பல்கலைக் கழகங்களில் கிடைக்காத கூட்டுப் பாடத் திட்ட வசதிகள் இங்கு உண்டு.

விவசாய, தொழில் அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளில் அண்ணாமலையின் இத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். நெய்வேலி நிலக்கரிச் சாம்பலை ஃபெர்ரோ சிமென்ட் தயாரிப்புக்குப் பயன்படுத்துதல்; அறுவடையான நெல்லைப் பதப்படுத்திப் புழுக்குதல், உலர்த்தல் போன்ற செயல் முறைகளில் சூரிய சக்தியை நவீன முறையில் பயன்படுத்துதல்; ரைஸ் மில்களை நவீனமாக்குதல் என ஆராய்ச்சிகளை அடுக்கிக் கொண்டே போகிறார் பேராசிரியர் ரத்னசபாபதி.

''நெய்வேலி லிக்னைட் ஊழியர்கள் பலரும் தமிழக போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பலரும் இங்கே பொறியியல் துறையின் பகுதி நேர மாணவர்களாக அனுப்பி வைக்கப்படுகிறார்கள்'' என்கிறார் துறைத் தலைவர் பி.வி.வைத்தியநாதன்.

டி.ஃபார்ம், பி.ஃபார்ம், எம்.ஃபார்ம் போன்ற மருந்துத் தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள் இஞ்சினியரிங் பிரிவின் கீழ்தான் வருகின்றன!

''வகுப்புகளெல்லாம் எப்படி நடக்கின்றன?'' என்று கேட்டால் மாணவர்கள் ரொம்பவும் உணர்ச்சி வசப்படுகிறார்கள்.

''இந்தக் கல்லூரி மாதிரி வேறெங்காவது இருக்குமா என்பதே சந்தேகம் சார்! அப்படி ஒரு கவனிப்பு. இங்கு இல்லாத வசதிகள் இல்லை. ஒர்க் ஷாப்புகள், ஆய்வுக் கூடங்கள், கம்ப்யூட்டர் பிரிவு, இன்னும் உள்ள அத்தனை பிரிவுகளும் தனித்தனியே தன்னிறைவு பெற்றவையாக இருக்கின்றன''என்று அடுக்கிக் கொண்டே போகிறார் இறுதியாண்டு இன்ஸ்ட்ருமென்டேஷன் மாணவர் பரத்வாஜ்.

நாலு லட்சம் புத்தகங்கள்!

●● தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய நூலகம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் உள்ள டாக்டர் சி.பி. ராமசாமி அய்யர் நூலகம்தான். நான்கு லட்சம் புத்தகங்கள் அங்கு இருக்கின்றன!

சின்னம் - சிறுகுறிப்பு


●● சிதம்பரம் ஆலயத்தை நினைவூட்டும் கோபுரம். மீனாட்சி கல்லூரி இணைந்திருந்த சென்னை பல்கலைக் கழகத்தை நினைவு கூறும் அதன் இரு யானைகளுக்கிடையிலான தாமரைச் சின்னம். நிறுவனரின் படைஉடைச்சின்னத்தின் பகுதியாகத் தென்னையும் வீணையும். பல்கலைக் கழக லட்சியம் - 'துணிவும் நம்பிக்கையும்'.

துணிவும் - நம்பிக்கையும்

WITH COURAGE AND FAITH

பண்ணையில் நடக்கும் பாடங்கள்!

காலை ஆறரை மணிக்கே பிராக்டிகல் வகுப்புகள் துவங்கி விடுகின்றன. மாணவர்கள் காக்கி அரை நிஜார், காக்கி சட்டை; மாணவிகளுக்கு கருநீலத்தில் கடிதார்; வெளிர் நீலத்தில் கமீஸ். இதுதான் சீருடை. வளாகத்தில் உள்ள தோட்டங்களிலும், வயல்வெளிகளிலும் கும்பல், கும்பலாக வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. ''ஒரு விவசாயி எப்படி காலை வேளையிலேயே, தன் நிலத்துக்குச் சென்று தன் வேலைகளைத் துவக்கி விடுவாரோ, அதே போன்று இவர்களையும் பழக்கி விடுகிறோம்'' என்கிறார் விவசாயத் துறையின் தலைவரான டாக்டர் பாஸ்கரன். மாநிலத்திலேயே தனியார் துறையில் துவக்கப்பட்ட முதல் விவசாயக் கல்லூரி இதுதான்.



டாக்டர் பாஸ்கரன்

விவசாயப் படிப்பை மாத்திரம் சொல்லித் தராமல், அந்தத் துறையில் பல ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறார்கள் ஆசிரியர்கள். உயர்ரகப் பொன்னி நெல்லைக் கண்டு பிடித்தவர்கள் இவர்கள்தான்! அதிகத் தண்ணீர் வசதியில்லாத உவர் நிலங்களிலும் விளையக் கூடிய, சுவையான வீரியரக நெல்லையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்போது 400 வகையான எள் வகைகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து புது எள் ரகம் ஒன்றைக் கண்டு பிடிக்க இருக்கிறார்கள்.

சர்வதேச உணவு மற்றும் விவசாய நிறுவனம், தனது ஆராய்ச்சிகளுக்கு இந்தக் கல்லூரியின் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கிறது என்றால், இங்கிருக்கும் வசதிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

கரும்பைச் சர்க்கரை தயாரிப்புக்குப் பயன்படுத்திய பின்னர், கசடாக விழும் மிச்சத்தைப் பயன்படுத்தி, கோபார் வாயு பாணியில், எரிவாயு உற்பத்தியும் நடக்கின்றது. அதன் மூலம் மின்சாரமும் உற்பத்தி செய்யப் படுகிறது.

இந்தக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றுச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு மரபு ரீதியான விவசாயத்திலிருந்து சமீபத்திய சாகுபடி முறைகள் வரை சொல்லித் தந்து விடுகிறார்கள். கடைசி வருடம் படிப்பவர்கள், பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளோடு தங்கி, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்கிறார்கள்!

இறால் வளர்ப்பும் எய்ட்ஸுக்கு மருந்தும்!

கடல் உயிரியல் என்று தமிழில் சொன்னால் அத்தனை விளங்காது. ஆங்கிலத்தில், மெரைன் பயாலஜி என்கிறார்கள். இதுவும் கூட சாமானியருக்குப் புரியாது. கொஞ்சம் யோசித்து, 'மீன் பிடிக்கிறதைப் பத்தின படிப்பா?' என்று அகழ்வாராய்ந்து தெரிவிப்பவர்களுக்கு முதற்கண் அனுதாபங்கள்.

''கடலியல் படிப்பு என்பது வெறும் மீன் பிடிக்கிற சமாசாரமல்ல'' என்கிறார் பேராசிரியர் புருஷோத்தமன். அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் அத்தனை சிறப்புகளுக்கும் ஒரு சிகரம் என்று இந்த 'மெரைன் பயாலஜி' படிப்பைச் சொல்லத் தோன்றுகிறது. சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டையில் கடற்கரை ஓரமாய் அமைந்திருக்கிறது- இக் கடலியல் கல்லூரி.

கடல் அரிப்பு, புயல் தடுப்பு, பெட்ரோலியப் பொருட்கள் கண்டுபிடிப்பு, கடல் வாழ் உயிரின ஆய்வு, நீர் வாழ் தாவர ஆய்வு, மீன் உற்பத்தி, இறால் வளர்ப்பு, உப்பு சமாசாரம்... இப்படியாக, கடல் சம்பந்தப்பட்ட எதனையும் விட்டு வைப்பதில்லை, இத்துறை. பேராசிரியர் சேஷையா என்பவரை இத்துறையின் தந்தையாக இங்கே சொல்கிறார்கள். இப்பிரிவில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் அனைவரும் இத்துறையில் பழம் தின்று கொட்டை போட்ட விஞ்ஞானிகள்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இயங்கும் இத்துறையில் பல்வேறு நாடுகளிலிருந்து ஆண்களும் பெண்களுமாகப் பட்ட மேற்படிப்புக்குப் படையெடுக்கிறார்கள்! காரணங்கள் இரண்டு: இந்தப் படிப்பின் சுவாரஸ்யம்; இத்துறை வல்லுனர்களுக்கு உள்ள வளமான எதிர்காலம்!

பிச்சாவரம் சதுப்புநிலக்காடுகள், கடலியல் மாணவர்களுக்கு வரப்பிரசாதம். ''இயற்கையாக வளர்ந்திருக்கிற இந்நீர்த்தாவரங்கள் தான் இம்மாணவர்களின் பிரதான ஆராய்ச்

சோளச் சாகுபடியில் விதை தேர்த்திறின் பலன்.



(படம் : பல்கலைக்கழக புகைப்படப் பிரிவு)

றிப் பொருள்'' என்கிறார் பேராசிரியர் புருஷோத்தமன். ஏராள மருத்துவ குணங்கள் இவற்றிற்கு உண்டு. நோய்கள் பலவற்றிற்கான மருந்துகள், இத்தாவரங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. சொல்லப் போனால் - எய்ட்ஸுக்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகள் இங்கே இப்போது வெகு தீவிரம்! இயற்கையாக வளர்ந்துள்ள இந்தத் தாவரங்களை அதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கி, வேறு இடங்களிலும் பயிர் செய்ய முடியுமா என்பது இப்போது நடந்து வரும் ஆராய்ச்சி.

பிறிதொரு முக்கியப் பாடம் - இறால் வளர்ப்பு!'' கேட்பதற்குச் சாதாரணமாகத் தோன்றலாம்; ஆனால் இறால் வளர்ப்பின் மூலம் கோடீஸ்வரராகி விடலாம் என்று சொன்னால் சாதாரணமாகத் தோன்றுமா?'' என்று கேட்கிறார் மாணவர் ஒருவர்.

பாட திட்டமும் கலபமானது அல்லதான். கலப்பின முறையில் ருசிமிக்க, புஷ்டியான புதிய வகைகளை உற்பத்தி செய்வது. வளர்ப்பதற்கான செலவுகளை எந்தெந்த வகையில் குறைப்பது. ஏற்றுமதி வாய்ப்புக்கள் எப்படி என்று பலதளங்களில் - இறால் வளர்ப்பில் டாக்டரேட் வாங்கும் அளவுக்கு இங்கே விவரிக்கிறார்கள்!

ஓஷனோகிராஃபி என்கிற கடலியல் துறை மாணவர்களுக்கு தியரி, போலவே செய்முறை வகுப்புகளும் மிக முக்கியம்.

அண்ணாமலையில், இத்துறைக்கென அதிநவீன தொழில் நுட்ப சமாசாரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஏராள கருவிகளும் எலக்ட்ரானிக் விஷயங்களும் கம்ப்யூட்டர் சாம்ராஜ்யமும் இன்னும் நினைத்துப் பார்க்க முடியாத வசதிகளுமாக சக்கை போடு போடுகிறார்கள்!

● படகிலிருந்தபடி பாடம்: மரைன் பயலாஜி பேராசிரியர்கள்





வைரமாணிக்கத்தின் முத்தான மாணவர்கள்!

அண்ணாமலைப் பல்கலைக் கழக நாட்டு நலப் பணித் திட்ட (National Service Scheme - NSS) ஒருங்கிணைப்பாளரான டாக்டர் கே. வைரமாணிக்கத்தை, 'உங்க மாணவர்கள் அப்படி என்னத்தைத்தான் பெரிசா பண்ணிட்டாங்க?' என்று கேட்டால், கொதித்து எழமாட்டார். கையிலிருக்கும் பேப்பர் கட்டிங்குகள், ரெஜிஸ்தர்கள் ஆகியவற்றை உங்கள் முன்னால் போடுவார்.

★ பல்கலைக் கழக என். எஸ். எஸ். பிரிவில் 2000 மாணவ, மாணவியர் இருக்கிறார்கள். 20 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து, சமூக சேவை செய்து கொண்டிருக்கிறது. இதுவரை 400 கிராமங்கள் பயன்பெற்றுள்ளன.

★ 1990 இல், ஆண்டு விடுமுறையை வெட்டியாகக் கழிக்காமல், 2000 பேரும் 50,000 மக்களுக்கு எழுத்தறிவித்திருக்கிறார்கள்.

★ நடராஜர் கோவிலைச் சுற்றி நாலு வீதிகளிலும், எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஓட்டம் (''அது ஏன் கோவிலைச் சுற்றி...?'' ''அங்கேதான் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்!'')

★ 1700 கி. மீ. நல்லிணக்க யாத்திரை.

★ 45 கி. மீ. நடந்து தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி பிரசாரம்.

இவை தவிர, கண்தானம், ரத்த தானம் என்று சரமாரியான தானங்கள். சாதனைப் பட்டியல் மிக நீண்டது.

இப்படியெல்லாம் மாணவர்களை வென்று சுழற்றினால் கண்டிப்பாகப் பரிசு கிடைக்கத்தான் செய்யும்! மாநிலத்திலேயே சிறந்த புரோக்ராம் ஆபீஸர் வைரமாணிக்கம்தான்! விருது கொடுத்திருக்கிறது!

அவருக்கு மட்டுமா?

அண்ணாமலையில் நாட்டு நலப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக அமெரிக்காவில் படிக்கப் போன சின்ன கருப்பனுக்கும் கொடுத்திருக்கிறது அந்த நாட்டு ஸ்காலர்ஷிப்!

செய்தித் தொகுப்புக் கட்டுரைகள் :
ப்ரியன், எஸ். ஆர்., ஆர்.பி.ஆர்.
அட்டை வண்ணப்படம்,
பிரத்யேகப் படங்கள் :
கோபிநாத்

●●

அண்ணாமலை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எம்.ஜி. முத்துக்குமாரசாமி அறுவைச் சிகிச்சை நிபுணர். அரசாங்க மருத்துவப் பிரிவில் படிப் படியாக உயர்ந்து பல பொறுப்பான பதவிகளை வகித்து ஓய்வு பெற்ற போது அண்ணாமலை பல்கலைக் கழக மருத்துவத் துறைத் தலைவர் பொறுப்பை ஏற்க அழைக்கப்பட்டார். '93 ல் துணை வேந்தர் ஆனார் முத்துக் குமாரசாமி.

●●

"மதிப்பீடுகள் சார்ந்த கல்வியே இன்றைய தேவை..."

கல்கி : அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் மிகப் பெரிய சாதனையாக எதைக் குறிப்பிடுவீர்கள்?

துணை வேந்தர் டாக்டர் எம்.ஜி. முத்துக்குமாரசாமி : தமிழகத்தின் பின் தங்கிய, எளிய மக்களுக்கு உயர் கல்வியை சாத்தியமாக்கியுள்ளது எங்கள் பல்கலைக் கழகம். முன் காலத்தில் இப்பகுதி மக்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி படிக்க, சென்னைக்கோ திருச்சிக்கோ போக வேண்டியிருந்தது. அண்ணாமலை பல்கலைக் கழகம் வந்த பிறகு இந்நிலை மாறிவிட்டது. ஒரு ஜனாதிபதி (ஆர்.வி.), ஒரு கவர்னர் (பி.ஸி. அலெக்ஸாண்டர்), ஒரு பொருளாதார நிபுணர் (சோணாசலம்) என, நாட்டின் நட்சத்திரங்கள் பலரை இப்பல்கலைக் கழகம் உருவாக்கியிருக்கிறது!

கல்கி : உங்கள் பதவிக் காலத்தில் இப் பல்கலைக் கழகத்திற்கு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

துணை வேந்தர் : நான் அரசாங்கத்தில் மருத்துவப் பிரிவில் பொறுப்பான பதவிகள் வகித்தபோது, நம் கிராம மக்களுக்கு மருத்துவத் தொழில் நுட்பத்தின் பயன்கள் போய்ச் சேர்வதேயில்லை என்பதை உணர்ந்தேன். இந்த நிலையை மாற்றுவதற்கு எங்கள் பல்கலைக் கழகத்தின் மருத்துவக் கல்லூரி உதவியுடன் முயற்சிகள் செய்து வருகிறோம். ஆயிரம் படுக்கைகள் கொண்ட அதி நவீன மருத்துவமனை ஒன்று உருவாகி வருகிறது. ஏற்கெனவே ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகளும் சிகிச்சையும் அளித்து வருகிறோம்.

இது தவிர, தமிழக இளைஞர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்குத் தயார் செய்யும் புதிய திட்டமும் வகுத்து வருகிறோம். எங்கள் விஞ்ஞானப் பிரிவை இன்னும் ஆராய்ச்சி மயமான பிரிவாக்க உள்ளோம். ஆராய்ச்சிகள், விவசாயத் துறைக்குப் பயன்படும் வண்ணம் விரிவாக்கப் பணிகளில் ஈடுபடுகிறோம். இந்த அணுகு முறைகளை மேலும் பலப்படுத்தப் போகிறோம். தவிர, அண்ணாமலை பல்கலைக் கழகம், முதன் முதலில் தொடங்கிய இசை, தமிழ், பதிப்பித்தல் பிரிவுகளை, பழைய பிரகாசமான நிலைக்குக் கொண்டு வரவும் திட்டம் வைத்துள்ளேன்.

கல்கி : அண்ணாமலை பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி ஆரம்பித்த பிறகு நகரின் முகமே மாறிவிட்டது என்று உள்ளூர்வாசிகள் சொல்கிறார்கள்; தொலைத் தொடர்பு கல்வி வகுப்புகளுக்காக (contact classes) வந்து போகும் ஜனத்தொகை வேறு அதிகரித்துவிட்டதாகத் தெரிகிறது.... இதனால் விலைவாசிகள் ஏறிவிட்டன, தங்குமிட வசதி, சுகாதாரம் போன்றவை பிரச்னையாக உள்ளன என்கிறார்கள். சிதம்பரம் நகர அபிவிருத்தியில் ஏன் உங்கள் பல்கலைக் கழகம் ஈடுபடக்கூடாது?

துணை வேந்தர் : நகரப் பகுதி அபிவிருத்திக்கான பணிகள் அரசாங்க அங்கங்களின் பொறுப்பில் உள்ளன. எங்கள் பல்கலைக் கழகம் நகரிலிருந்து ஒதுங்கி, தனியே இருக்கிறது. எனினும் சுற்று வட்டார ஊர்களில் நாங்கள் நிறைய சமூக நலப் பணிகள் மேற்கொண்டிருக்கிறோம். எழுத்

தறிவு இயக்கத்தில் எங்கள் மாணவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். டானிடா (DANIDA) உதவியுடன் கால்வராயன் மலைப் பகுதியில் ஒரு அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். பிச்சாவரத்தில் ஒரு மருத்துவ மையமும் சிதம்பரம் நகரத்தில் ஒரு மருத்துவ மையமும் நடத்துகிறோம்...

கல்கி : '81 இல் அண்ணாமலை பல்கலைக் கழகம் திடீரென்று பட்டப் படிப்பு வகுப்புகளை ரத்து செய்துவிட்டது. இது இப்பகுதி மக்களை மிகவும் பாதித்ததாக அறிகிறோம். குறிப்பாக, சிதம்பரத்தில் ஒரு பெண்கள் கல்லூரி அவசியம் தேவை என்றும் தெரிகிறது. எல்லா வசதிகளும் உடைய உங்கள் பல்கலைக் கழகம் ஏன் பெண்கள் கல்லூரி ஒன்றைத் தொடங்கக் கூடாது?

துணை வேந்தர் : பெண்களின் உயர் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை நான் உணர்கிறேன். அதுவும் ஒரு மருத்துவர் என்கிற முறையில், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப் புரிந்து கொள்ள அக்கல்வி எவ்வளவு தூரம் உதவும் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் இதுபற்றி



– துணை வேந்தர் பேட்டி

நாங்கள் கட்டாயம் யோசிக்கிறோம்.


கல்கி : சிதம்பரத்தைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி மிகவும் குன்றியிருக்கிறது. Industrially Backward Area என அறிவிக்கப்பட்டுள்ளது. பொறியியலும் மருத்துவமும் ஆராய்ச்சியும் தழைக்கும் ஒரு பல்கலைக் கழகம் இந்தத் திக்கில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் என்ன?

துணை வேந்தர் : தனியார் பல்கலைக் கழகமானாலும் நாங்கள் யூ.ஜி.ஸி. வழிகாட்டல்களின் படிதான் செயல்பட வேண்டும். தொழில் துறையுடன் பல்கலைக் கழகங்கள் இணைந்து ஈடுபட வேண்டும் என்று யூ.ஜி.ஸியே சொல்லியிருக்கிறது. அதன்படி நாங்கள் தொழில் துறையில் பல வகைகளில் ஈடுபட்டு வருகிறோம். நெய்வேலி லிக்னைட் கார்பரேஷன் எங்கள் பல்கலைக் கழகத்தில் ஒரு தனி ஆராய்ச்சிப் பிரிவே உருவாக்கியிருக்கிறது. ஐ.நா. சபை அங்கமான FAO வைச் சேர்ந்தவர்கள் எங்கள் விவசாயத் துறையுடன் இணைந்து கடந்த எழு பது நாட்களாகப் பூச்சி கொல்லிகள் தொடர்பான ஆராய்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் ஒரு பல்கலைக் கழகத்தின் பிரதான பணி, கல்வி வழங்குவதே என்பதை நீங்கள் உணர வேண்டும். அதற்கே எங்களுக்கு எத்தனையோ கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள். இத்தனை வரையறைகளுக்கு உட்பட்டு வளரும் மாணவர் எண்ணிக்கையைச் சமாளித்து நிர்வகிப்பதே பெரிய சவால். நாற்பத்திரண்டு துறைகள் உள்ள ஒரு பல்கலைக் கழகம்; மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்களுக்கும் தங்கும் வசதி.. இதையெல்லாம் சமாளித்தபடியே நாங்கள் பொதுப் பணிகளிலும் ஈடுபடுகிறோம்.

கல்கி : நிறைய பணம் உள்ளவர்கள் தான் அண்ணாமலையில் சேர முடியும் என்ற கருத்து இருக்கிறதே....?

துணை வேந்தர் : நீங்கள் மருத்துவக் கல்லூரி அட்மிஷன்களை மனத்தில் கொண்டு பேசுகிறீர்கள். சுய நிதிக் கல்லூரிகள் எல்லாவற்றிலுமே இந்த நிலை உள்ளது. அவர்களை ஒப்பு நோக்க நாங்கள் எவ்வளவோ தேவலாம். நாங்கள் உச்சநீதி மன்றம் விதித்துள்ளபடிதான் பணம் வாங்குகிறோம். முந்தைய நிலையைக் காட்டிலும் இது எங்களுக்கு ஆதாயமாகவே இருக்கிறது என்பேன்... மெடிக்கலில் மொத்தம் 125 இடங்கள். இவற்றுள் 63 சீட்கள் மெரிட் கோட்டா. மற்றவற்றுக்கு ஆண்டொன்றுக்கு 1.4 லட்சம் என்ற விகிதத்தில் நான்காண்டு களுக்கு 5.6 லட்சம் ரூபாய். முன்பு மொத்த படிப்புக்கும் மூன்று லட்சம்தான் வாங்கிக் கொண்டிருந்தோம்... மருத்துவப் பிரிவு கட்டடம் கட்ட மட்டுமே நாற்பது கோடி ரூபாய் ஆகியிருக்கிறது! அதன் பிறகு அன்றாட நிர்வாகச் செலவுகள்... இந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கும்? வசதி படைத்தவர்கள் கொடுப்பதால் இப்பகுதி

விளையாட்டாக ஒரு படிப்பு!



இஸ்லாமாபாத்தில் 1989 இல் நடந்த தெற்காசியப் போட்டிகளின்போது, 100 மீட்டர் நடகள ஓட்டத்தில், ஒரு புதிய சாதனையைப் படைத்தார் 20 வயது மாணவரான ஆனந்த நடராஜன். 10.68 நொடிகளில் ஓட்டத்தை முடித்தார் இவர்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டார்கள். காரணம் ஆ. த. மட்டுமல்ல; ராஜன், ரமேஷ், ராமநாதன், ஜெயக்குமார் என்று பல குறிப்பிடத்தக்க நடகள வீரர்களை உருவாக்கியது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உடற்பயிற்சித் துறைதான். அது மட்டுமல்லாமல் கூடைப்பந்து விளையாட்டில் நிபுணரேஷ்வரன், (இப்போது ஐ. ஏ. எஸ். அதிகாரி) விஜயகுமார் போன்ற வீரர்களை உருவாக்கியதும் அண்ணாமலைதான்!

1974 வரை, பல்கலைக் கழகத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் ஒரு பிரிவாக விளங்கி வந்த உடற்பயிற்சித் துறை, பின்னர் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான படிப்பையும் சொல்லித்தரத் துவங்கியது. இதில் இளங்கலை, முதுகலை இரண்டும் உண்டு. தவிர விளையாட்டு மருத்துவம், விளையாட்டு மனோதத்துவம், ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, எம்.ஃபில் பட்டங்களும் வழங்கப்படுகின்றன. இன்று பல்வேறு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆசிரியர்களாகவும், அதிகாரிகளாகவும் இருப்பவர்களில் பலர் அண்ணாமலையில் படித்தவர்கள்தான்!

யின் எளிய மக்களுக்கு இலவச மருத்துவம் அளிக்க முடிகிறது. மேலும் இந்தியா முழுவதிலிருந்தும் பொறுக்கி எடுத்த மணியான ஆசிரியர்களை இப்பிரிவுக்கு வரவழைத்துள்ளோம். அவர்களுக்கு நல்ல ஊதியம் தர வேண்டாமா? ஒரு மாணவனுக்கு குறைந்த பட்சம் ஏழு படுக்கைகள் என்ற விகிதத்தில் கல்லூரி மருத்துவ மனையில் இருக்க வேண்டும் என்பது மெடிக்கல் கவுன்சில் விதி. இதையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் பணம் வேண்டும்.

கல்கி : பல்கலைக் கழகத்தின் வைப்பு நிதி (corpus) இதற்கு உதவாதா....?

துணை வேந்தர் : அது போதாது! இன்னும் சொல்லப் போனால், அஞ்சல் கல்விப் பிரிவு மருத்துவக் கல்லூரி தொடங்கக் கடன் அளித்துள்ளது!

கல்கி : இவ்வாறு அதிகத் தொகை கொடுத்துப் படிப்பதால் அதைத் திரும்பவும் சீக்கிரமாகச் சம்பாதிக்கும் நோக்கு உண்டாகிவிடுகிறது. மருத்துவத் துறைக்கு இது ஆரோக்கியமானதல்லவே...? Medical Ethics என்பார்களே, அது சீர் குலைந்து போகாதா?....

துணை வேந்தர் : நீங்கள் சொல்வது ஓரளவு உண்மைதான். Medical Ethics குறித்த ஒரு கருத்தரங்கு (workshop) கூட நான் நடத்தி யிருக்கிறேன். ஆனால் மருத்துவர்கள் எண்ணிக்கையும் அதன் விளைவாகப் போட்டியும் அதிகரிக்க அதிகரிக்க, டாக்டர்கள் கொள்கைத் திறமையுடன் செயல்பட வேண்டிய கட்டாயமும் அதிகரிக்கும். இப்போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வேறு நோயாளிகளுக்குப் பாதுகாப்புத் தருகிறது. அதனால் டாக்டர்கள் எச்சரிக்கையாக இருந்தே ஆக வேண்டும்... என்னைக் கேட்டால், சட்ட திட்டங்களைக் காட்டிலும் ஆரம்பக் கல்வியை மதிப்பீடுகள் சார்ந்த கல்வியாய் அமைப்பதே முக்கியம் என்பேன். வாழ்க்கையில் உயர்ந்த மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ள ஆரம்பக் கல்வி உதவ வேண்டும். சுதந்திரம் அடைந்த போது இந்தியாவில் 10 பல்கலைக் கழகங்களே இருந்தன. இன்று அந்த எண்ணிக்கை நூறாக உயர்ந்துள்ளது. ஆனால் கல்வியானது, மக்களின் மதிப்பீடுகளைச் சரியான திக்கில் செலுத்தியிருக்கிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை!

கல்கி : மதிப்பீடுகள் அடிப்படையிலான (value based) கல்வியை உங்கள் பல்கலைக் கழகத்தால் தர முடிகிறதா?

துணை வேந்தர் : மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக் கழகம் என்பதால் பழைய குருகுல முறையின் நிழலான சாயல் எங்களிடமும் இருக்கிறது. இது எங்களுக்கு ஒரு அனுகூலம். பிரச்னைகள் ஏதும் தோன்றி னால் உடனுக்குடன் எங்களை அணுகித் தீர்த்துக் கொள்ளலாம்.

கல்கி : அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பரம்பரை Pro chancellor முறையில் அரசு எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது என்று சமீபத்தில் உங்கள் ஊழியர்கள் தீர்மானம் இயற்றியுள்ளார்களே....? இம் முறையில் என்ன ஆதாயம்?

துணை வேந்தர் : இன்றைக்கு உங்களிடம் ஃப்ரீயாக நான் பேட்டி கொடுக்க முடிகிறது என்றால் அதற்கு இந்த நிர்வாக அமைப்பே காரணம். காலம் காலமாகக் கல்வியில் ஈடுபாடு உள்ள குடும்பம். அவர்கள் தேர்ந்தெடுத்த துணை வேந்தர்களின் பெயர்ப் பட்டியலே அவர்களுடைய பொறுப்புணர்ச்சிக்கு சான்று. இந்தியாவே இன்று தனியார் மயமாகி வருகிறது... எங்கள் பல்கலைக் கழகம் ஒரு முன்னோடி என்று சொல்லலாம்.



கல்கி
27.2.94 இதழுடன்
இலவச இணைப்பு
அடுத்த நூற்றாண்டை நோக்கும்
அண்ணாமலை மாணவர்கள்!

பிதர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

பெறுவீர் சான்மேக் கி:ப்ட் கார்டு.



5வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி
சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்ட்

எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை இது.

இந்த கிஃப்ட் கார்ட் பெறுவதைத் தொடர்ந்து சான்மேக் சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப் நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை பெறலாம்.

அறிமுகம்

விசேஷ சீட்டு குரூப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

SANMAC CHITS

தலைமை அலுவலகம்

'லக்ஷ்மி டவர்ஸ்', 27, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, (எம்லோ பேலஸ் அருகில்), மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 8258637, 8251232.

கிளை அலுவலகங்கள்: சென்னை அண்ணா சாலை, போன்: 8277363 • தி.நகர், போன்: 8278515, 8258637 • அசோக்நகர், போன்: 4824737 • மயிலாப்பூர், போன்: 4992488 • அண்ணாநகர் மேற்கு, போன்: 6214454 • மேற்கு தாம்பரம், போன்: 401934 (PP) • புரசைவாக்கம், போன்: 6425036, மதுரை போன்: 23334 • கோயம்புத்தூர் போன்: 46375 • திருச்சி போன்: 25324 • திருவண்ணாமலை போன்: 22922, 23333 • கும்பகோணம்: • திருநெல்வேலி போன்: 322032.

BID FOR A BETTER LIFE